Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 15 | வெள்ளி - 08 | 16 - 22 - ஏப்ரில் - 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 16 . 04 . 2004
மின் அஞ்சல : natham23ela yahoo.com

# அசைக்க முடியாத சக்தியாக தமிழினம்

கடந்த 10ம்திகதி இடம்பெற்ற இலங்கையின் நாடாளுமன்றத்தின் அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நிகழ்வை இலங்கை நாடாளுமன்றத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கூட்டுக்கட்சியின் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பகிர்ந்தளித்துள்ளது.

தனது அமைப்பில் இருந்து இறந்தவர்களின் நினைவுதினம் என காரணம் கூறினாலும் தனக்கு தரப்பட்ட அமைச்சுக்கள், பிரதியமைச்சுக்கள் ஏற்கனவே சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்படி வழங்கப் படவில்லை. என்பதே ஜே.வி.பி அமைச்சுக்களை பதவி ஏற்காதுவிட்டதற்கான உண்மையான காரணமாகக்கூறப்படுகின்றது. அண்மையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க 1971 ஜே.வி.பிக்கிளர்ச்சியின் 33 நினைவு தினத்தையொட்டி கொழும்பு சுகதாச உள்ளரங்கில் கட்சியின் ஆதரவாளர்கள் முன்பேசும் போது சுதந்திரக்கட்சி மக்களுக்கான தனது பொறுப்பை சரிவர நிறைவேற்றவேண்டும். முடியாவிட்டால் வெளியேறிவிடவேண்டும். சுதந்திரக்கட்சி தனது பொறுப்புக்களை நிறைவேற்றாவிட்டால் மக்களுடன் சேர்ந்து தாமும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடப்போவதாக பகிரங்கமாக மிரட்டியிருந்தார்.

இவையெல்லாம் சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி இடையிலான விரிசலின் சாட்சியங்களாகவே நாளும் தென்னிலங்கை அரசியலில் வளர்ச்சியடைந்து செல்லுகின்றன. சிங்களத்தின் இன்றைய அரசியல் எதிர்காலம் சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி- ஜாதிக ஹெல உறுமய என தனக்குள் தொடரும் பிணக்குகளால் சீரழிந்து செல்கின்றது. இவை ஒருபுறம் இருக்க, சனாதிபதி தனது நாட்டு மக்களுக்கு ஆற்றிய செய்தியில், "விரைவில் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும்" என்ற ஒரு தனி வார்த்தையை சொன்னதையே கடுமையாக விமர்சித்திருக்கும் பேரினவாதிகள் குறிப்பாக ஹெலஉறுமயவினர் எக்காரணம் கொண்டும் புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடக்கூடாது என வற்புறுத்திவருகின்றனர்.

இதேவேளை, சனாதிபதியின் பின்னணியும், "சமாதானத்திற்கான போர்" என்ற மாபெரும் போரை தமிழர் மீது திணித்து ஈழத்தமிழினத்தை அழிவுக்குள்ளும் அவலங்களுக்குள்ளும் இட்டுச்சென்றதாகவே இருக்கின்றது.

இன்று சிங்களம் தனக்குள்தானே அதிகாரத்திற்கு அடிபடும் அதேவேளை தனது இயல்பான பேரினவாத உணர்வின் மேலீட்டால் தமிழர்களுக்கான எந்த உரிமைகளையும் - ஆரம்ப பேச்சுவார்த்தையை தன்னும் தொடரவோ - வழங்கவோ தயாரில்லாத நிலையிலேயே உள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் வெளிப்பட்ட முடிவுகள் கூட சராசரி சிங்கள மக்களின் மனஉணர்வுகளும் சமாதானம் - இனப்பிரச்சினை தீர்வுக்கு எதிரான சிங்களத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே அமைகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால் ஈழத்தமிழினம் வரலாற்றில் என்று இல்லாத பலத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது. தனக்கெதிரே தோன்றிய எல்லாத்தடைகளையும் உடைத்தெறிந்து, தனது மாபெரும் இராணுவ பலத்துடன், சனநாயக ரீதியில் மக்கள் சிங்களத்திற்கும் சர்வதேசத்திற்கும் முன் வெளிக்காட்டிய மக்கள் ஆணை என்னும் மாபெரும் தார்மீக பலத்துடன் அசைக்க முடியாத சக்தியாக தமிழினம் இன்று எழுச்சி கண்டுள்ளது.

தனது இனவாத பொறிக்குள் தமிழினத்தை எவ்வடிவிலேனும் இனியொரு முறை சிங்களம் நசுக்க முயற்சிக்குமாயின், மக்கள்ஆணை மூலம் ஒவ்வொரு தமிழனும் வழங்கிவிட்ட தீர்ப்பின்படி, தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம், ஈழத்தமிழினம் தனது இறுதி விடிவிற்கான படிநிலையில் வேகமாக முன்னேறுவதே அதற்கான வழியாகிவிடும்.

# கதிர்காமரின் பேச்சும் தடுமாறும் சமாதானமும்



சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் அதிக ஆசனங்களைப்பெற்று ஆட்சி அமைக்கப்போகிறது என்ற நிலை வந்த போதே சமாதானத்தின் கதி என்னாவது என்ற கேள்வி பரவலாக எழத் தொடங்கியது.

அதிலும் சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டுக்குள்ளேயே ஆரம்பத்திலிருந்தே சமாதான முயற்சிகள் தொடர்பாக முரண்பாடான நிலை காணப்பட்டதையடுத்து இது இன்னும் அதிகமாகவே பேசப்பட்டது.

இந்த நிலையில் இலங்கையில் சமாதான நடவடிக்கை தொடருமா இல்லையா என்றநிலை காணப்பட்ட நிலையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமாதான நடைமுறைகள் தொடர்பாக சிலவிடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவோ அமெரிக்க செயலர் கொலின் பவலிடம் இன்னும் ஒரு மாதகாலத்துள் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்திருக்கும் நிலையில் கதிர்காமரின் இந்தக்கூற்றும் வெளிவந்துள்ளன.

அமைச்சர் கதிர்காமர் புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகள் இனி உள்நாட்டிலேயே இடம்பெறும் எனவும் பேச்சுவார்த்தைகளின்போது ஏனைய அரசியல் கட்சிகளும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

கதிர்காமரின் இந்தக்கூற்று ரணிலின் அரசால் கொண்டு செல்லப்பட்ட சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பப்புள்ளிக்கே கொண்டுவர எத்தணிக்கப்படுவதையே காட்டுகிறது.

அத்தோடு இலங்கையில் மோதல்களில் ஈடுபட்ட இரண்டு தரப்பினருக்கிடையேயான பேச்சுவார்த்தையைக் குழப்பி தேவையற்ற பிரசன்னங்களை ஏற்படுத்தி சமாதான முயற்சியை குழப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சியாகவே கருதஇடமுண்டு.

அதோடு சமாதான முயற்சிகள் உள்நாட்டிலேயே இடம்பெறும் என தெரிவிப்பதானது சர்வதேச மயமாகிவரும் இலங்கையின் இனப்பிரச்சினையை தடுத்துப்புலிகளுக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் அங்கீகாரத்தை தடுப்பதற்குமே முயற்சிக்கப்படுகிறது.

ஆனால் கதிர்காமர் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையிலும் புலிகள் இயக்கம் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபின் அடிப்படையிலுமே புலிகள் இயக்கம் பேசத்தயாராக இருப்பதை.

அதோடு, இம்முறை முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியானது மூன்றாம் தரப்பு நாடான நோர்வேயின் மத்தி[illegible]ஸ்துடனேயே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

இந்தவகையில் புலிகளுக்கும் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் போது பல்வேறு விடயங்களிற்கு அரசு இணங்கியதன் அடிப்படையிலேயே இந்த முயற்சியை நோர்வே முன்னெடுத்திருந்தது.

ஆனால் கதிர்காமர் தற்போது தெரிவித்துவருவதுபோல எந்த நிபந்தனைகளையும் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கப்போவதில்லை.

இந்த நிலையில் இலங்கையில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த சந்திரிகா தலைமையிலான அரசு முயற்சிக்குமானால் இந்த நிபந்தனைகளை மூட்டை கட்டி வைப்பதைத்ததவிர வேறுமார்க்கம் இருக்கப்போவதில்லை.

ஏனென்றால் நிபந்தனைகளுக்குப் பணிந்து அரசோடு பேசி எந்த உரிமைகளையும் தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாது என்பதை புலிகள் இயக்கம் நன்குணர்ந்து வைத்துள்ளது.

அத்தோடு சமாதானப்பேச்சுவார்த்தைகளில் மட்டுமல்லாது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படவேண்டுமானால் புலிகள் இயக்கத்துடன் மட்டுமேபேசி ஆகவேண்டும். என்ற தெளிவான ஆணையை மக்கள் சனநாயக ரீதியாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஆகவே மக்கள் ஆணையை தெளிவாகப் பெற்றுள்ள விடுதலை இயக்கம் என்றவகையில் புலிகள் இயக்கம் தமிழர்களின் அதிக சிரத்தையோடும் கரிசனையோடும் பாடுபடும்.

அந்த வகையில் சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதானம் தொடப்பான தனது அனுகுமுறையினை மாற்றிக்கொள்ளாது விட்டால் நிச்சயம் சமாதானம் பல அபாயங்களை சந்திக்கவேண்டிவரும். சமாதானத்திற்கு இந்த அபாயங்களைத் தோற்றிவித்தவர்கள் நிச்சயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினராகவே இருப்பர்.

சிறி.இ.



# சந்திரிகாவின் சமாதானம் சரிவருமா?

இலங்கைத்தீவில் மிகவும் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதும். மிகவும் தவறாகப் பிரயோகிக்கப்படுவதுமாகிய விவகாரங்கள் இரண்டு. ஒன்று பௌத்தம் மற்றது சமாதானம்.

இங்கேசமாதானம் என்று வரும்போது அதற்குரிய மெய்யான பொதுப்படையான ஒரு அர்த்தம் அனேகமாகப்பிரயோகநிலையில் இருப்பதில்லை.

மாறாக, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சக்தியும் தன்தன் நலன்களின் நிமிர்த்தம் தனக்குரிய நோக்கு நிலையில் இருந்தே சமாதானத்தை வியாக்கியானம் செய்கிறது. சில சமயங்களில் சம்பந்தப்பட்ட சக்திகளின் நலன்கள் ஒரு கோட்டில் சந்திக்கும்போது சமாதரனத்தின் ஆயுளும் நீண்டதாய் அமைகிறது.

கடந்த இரண்டாண்டுகால சமாதான முயற்சிகளைப்பொறுத்தவரைஇதுதான் நடந்தது. இதில் சம்பந்தப்பட்ட அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள், ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய மூன்று தரப்பினரதும் நலன்கள், சிலமுக்கியமான இடங்களில் ஒரே நேர்கோட்டில் சந்தித்ததன் விளைவே இப்பொழுது நிலவும் யுத்தநிறுத்தம்.

இதில் சந்திரிகாவின் நலன்களுக்கும், இந்தியாவின் நலன்களுக்கும் ஒவ்வாத சில விசயங்கள் இருந்ததன் விளைவே இப்பொழுது சமாதானத்துக்கு வந்திருக்கும் சோதனையும் குறிப்பாக, நடந்துமுடிந்த தேர்தலோடு சமாதானத்தில் சம்பந்தப்பட்ட ஒருதரப்பு - ரணில்விக்கிரமசிங்க- அரங்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு சந்திரிகா வந்திருக்கிறார்.

ஆட்சிக்கு வரமுன்பும் வந்தகையோடும் சந்திரிகாவும் அவருடைய பிரதமரும் புலிகளுடன் சமாதானத்தைத் தொடரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் செய்யப்போகும் சமாதானத்தில் இந்தியாவை ஒரு இயங்கு நிலைத் தரப்பாக மாற்றஉத்தேசித்திருப்பதாக அவர்களுடைய அறிவிப்புகளில் இருந்து ஊகிக்கமுடிகிறது.

ஆயின், இந்தியா சம்பந்தப்படப்போகும் சந்திரிகாவின் சமாதானம் இப்பொழுது நிலவும் யுத்த நிறுத்தத்தை வளர்த்துச் செல்லுமா? அல்லது முறித்து விடுமா?

இந்தக் கேள்விக்கு விடை காண்பதாயிருந்தால் நாம் சந்திரிகாவின் சமாதானத்தில் சம்பந்தப்படப்போகும் சக்திகளையும் சமாதானத்தைக் குறித்த அவர்களுடைய வெவ்வேறு நோக்கு நிலைகளையும் இதில் எல்லாத்தரப்பினரது நலன்களும் ஒரே கோட்டில் சந்திக்கக்கூடிய நிலைமைகள் ஏதும் உண்டா என்பதையும் பார்க்கவேண்டும். இதைச்சற்று விரிவாகப்பார்ப்போம்.

முதலாவது தரப்பு, ஏற்கனவே கடந்த இரண்டாண்டுகளாக செய்யப்பட்டுவரும் சமாதானத்தில் முக்கிய இயங்குநிலைத்தரப்பாக இருந்துவரும் மேற்குலகம்.

மேற்குலகைப் பொறுத்தவரை இந்தச் சமாதானம் அவர்களுக்குப் பின்வரும் காரணங்களுக்காக அவசியமானது. முதலாவது, இந்தப்பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம்மிக்க கடல் வழிகளில் இலங்கைத்தீவு அமைந்திருக்கிறது. இக்கடல் வழிகளையும் இச்சிறுதீவின் கவர்ச்சிமிக்கத் துறைமுகங்களையும் அவர்கள் விரும்பியபடி பாவிப்பதென்றால் அதற்கு இச்சிறுதீவில் அமைதி நிலவவேண்டும். எனவே இந்தப்பிராந்தியத்தில் மேற்கு நாடுகளின் வர்த்தக விரிவாக்கத்திற்கு இலங்கைத்தீவில் சமாதானம் நிலவுவது ஒரு கட்டாய முன்நிபந்தனையாகவுள்ளது.

இரண்டாவது, உலகளாவிய பயங்கரவாதம் என்று மேற்கு நாடுகள் கூறிவரும் போராட்டங்களை நசுக்கும் ஒரு போக்கில் மனிதக்குண்டுகள் அவர்களால் வெல்லப்படமுடியாதவைகளாய் காணப்படுகின்றன. இந்த மனிதக் குண்டுத் தொழில்நுட்பத்தின் முன்னோடிகள் புலிகளே என்று அமெரிக்கா கூறிவருகிறது. எனவே புலிகளை யுத்தமல்லாத வழிகளில் நாட்டங்கொள்ளச் செய்வதில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் அதிகம் அக்கறை காட்டிவருகின்றன.

மூன்றாவது, சுமார் ஒரு மில்லியனுக்கும் மேலான தமிழர்கள் மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.இவர்களே இப்பொழுது ஈழப்போரின் நிதிப்பின்தளமாக காணப்படுகிறார்கள். தவிர தாம் வாழும் நாடுகளில் அரசியலில் செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாகவும் உருவாகி வருகிறார்கள் இவர்களுடைய நிதிப்பின் பலம் உள்ளவரை ஈழப்போரை முறியடிப்பது சுலபமாய் இராது என்ற கவலை மேற்கு நாடுகளுக்குண்டு எனவே தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் ஒரு விளைவாகவும் இம்முறை அதிகம் மேற்கு மயப்பட்டதாகக் காணப்படும் சமாதான முயற்சிகளின் மூலம் புலிகளைத் தமது பக்கம் வென்றெடுக்க வேண்டும் என்ற ஒருவித அவசரம் அவர்களிடம் காணப்படுகிறது.

நாலாவது ரஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின் நிகழ்ந்த சம்பவங்களால் ஈழப்போரரங்கில் தெரிவுகளற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்த வெற்றிடத்துள் நுழைந்து மேற்கு மயப்பட்டுவரும் தமிழர்களைத் தம் வசப்படுத்தும் விதமாக ஒரு சமாதானத்தைச் செய்வதன்மூலம் இந்தியாவின் செல்வாக்கு வலயத்துள் தமது பிடியை மேலும் இறுக்க மேற்கு நாடுகள் விரும்புகின்றன. இதுபோன்ற பல காரணங்களுக்காக மேற்கு நாடுகள் இங்கே சமாதானம் செய்யவிரும்புகின்றன.

மற்றைய தரப்பு இந்தியா. ரஜீவ் கொல்லப்பட்டபின் தெரிவுகளற்ற ஒருநிலைக்குத்தள்ளப்பட்ட இந்தியா கடந்த 13ஆண்டுகாலமாற்றங்கள் மற்றும் புதிய வளர்ச்சிகளின் பின்னணியில் சில புதிய தெரிவுகளுக்கு வரக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இதன்படி இந்தியா அமெரிக்காவுக்கு நோகாத அதே சமயம் புலிகளைப்பலப்படுத்தாத ஒரு சமாதானத்தையே தெரிந்தெடுக்கக் கூடும் என்று நம்புவதற்குப்பலமான காரணங்கள் இப்பொழுது உண்டு.

பொருளாதாரக்கொள்கைகளின் அடிப்படையில் இந்தியாவும், அமெரிக்காவும், நண்பர்களே பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அமெரிக்காவின் உலகளாவிய மேலான்மையை இந்தியா எப்பொழுதோ ஏற்றுக்கொண்டுவிட்டது. அதோடு தகவல் தொழில் நுட்பத்துறையில் மென்பொருள் வல்லுநர்களில் உலகில் 30 வீதத்தினர் இந்தியர்களே எனவே தகவல் தொழில் நுட்பப் பேரரசாகிய அமெரிக்காவுடன் இணங்கிப்போகவேண்டிய ஒரு பொருளாதாரத் தொழில்நுட்ப யதார்த்தமே இப்பொழுது இந்தியாவில் காணப்படுகிறது. இதன்படி கூறின் அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகள் செய்துவரும் சமாதானத்தை இந்தியா முற்றுமுழுதாக முறிக்க விரும்பாத ஒரு வித பொருளாதார யதார்த்தமே இப்பிராந்தியத்தில் காணப்படுகிறது.

இது தவிர தற்சமயம் இந்தியா இலங்கைத்தீவில் வேகமாக முதலீடுகளைச் செய்து வருகிறது. உலகின் ஆறாவது பெரிய வளர்ந்துவரும் பொருளாதாரமாகக்காணப்படும் இந்தியா இலங்கைத்தீவில் யுத்தம் மூண்டால் தனது வர்த்தக விரிவாக்கம் பாதிப்புறலாம் என்று அஞ்சஇடமுண்டு. எனவே பொருளாதார வார்த்தைகளிற் கூறின் இந்தியா இலங்கைத்தீவில் மேற்கு நாடுகள் செய்துவரும் சமாதானத்தை முறிக்கக்கூடிய வாய்ப்புக்கள் குறைந்தளவே காணப்படுகின்றன.

ஆனால் அதேசமயம் இந்தச் சமாதானத்தால் சர்வதேச அளவில் புலிகளின் ராஜீய அந்தஸ்து உயர்ந்து வருவதை இந்தியா மகிழ்ச்சியின்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே அமெரிக்காவை முழுஅளவில் பகைக்காததும் அதேசமயம் புலிகளோடான பகையை முழுஅளவில் கைவிடாததுமாகிய ஒரு நிலைப்பாட்டிலிருந்தே இந்தியா சமாதானத்தை அனுகக்கூடும் போலத் தோன்றுகிறது.



மற்றைய தரப்பு சந்திரிகா, சந்திரிகா முன்பு ஒரு முறை புலிகளுடன் சமாதானம் செய்தவர். பின்பு மோசமான ஒரு யுத்தமும் செய்தவர். அவரைக்குறித்து தமிழர்களிடம் மிகப்பயங்கரமான ஒரு பிம்பமேயிருக்கிறது. அதிலும் குறிப்பாக அண்மைக்காலங்களில் சமாதானத்தைப் பலியிட்டு தேர்தலில் வென்றவர் என்பது அவரைப் பற்றி ஏற்கனவே உள்ள விரோதமான முற்கற்பிதத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

**நிலாந்தன்**

ஒரு நண்பர் சொன்னார்.... 90களில் இருந்த சந்திரிகாதான் மாறாமல் அப்படியே இப்பொழுதும் உள்ளார் என ஏன் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஏனெனில் யுத்தத்தின் தோல்விகளில் இருந்து அவர் கற்றிருக்கக்கூடிய பாடங்களின் அடிப்படையிலும் ஒரு குண்டுத் தாக்குதலில் கண்ணையிழந்தவர் என்பதன் அடிப்படையிலும் அவருடைய அனுபவங்கள் விசாலித்திருக்கக்கூடிய வாய்ப்புக்களை நிராகரிப்பதற்கில்லை. ஆனால் இம்முறை அவர் ரணிலைத் தோற்கடித்த விதம் அவர் எந்தப் பள்ளிக்கூடத்திலும் இனிப் படித்துத் திருந்த முடியாதது என்ற ஒரு முற்கற்பிதத்திற்கே தமிழர்களை இட்டுச்செல்லவல்லது.

எனினும் நாம் இங்கு ஒன்றைக் கவனிக்கவேண்டும். சந்திரிகா எதிர்த்தது ரணிலைப்பலப்படுத்தும் ஒரு சமாதானத்தைத்தான். மாறாக தன்னைப்பலப்படுத்தும் ஒரு சமாதானத்துக்குப் போகவேண்டிய கட்டாயம் அவருக்கிப்பொழுது உண்டு. இப்போதுள்ள நிலைமைகளின்படி சமாதானம் இல்லையென்றால் நிதியுதவி இல்லை. நிதியுதவி இல்லையென்றால் தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் அடுத்தத்தேர்தலில் அவர் இம்முறை ரணில் மீது வைத்த அதே குற்றச்சாட்டுக்களையே ரணில் இவர் மீது வைப்பார். எனவே குறைந்த பட்சம் காசுக்காவது அவருக்குச் சமாதானம் தேவை அதிலும் நிதியுதவிகளை அள்ளித்தரவல்ல மேற்கு நாடுகளின் சமாதானம் அவருக்குத் தேவை.

அவரைப் போலத்தான் ஜே.வி.பி.யும் இப்பொழுது அவர்கள் வாங்கி வைத்திருக்கும் அமைச்சுப் பதவிகளின் மூலம் அவர்கள் வசப்படுத்த நினைக்கும் சனங்களுக்குச் சேவை செய்வதென்றால் காசு வேண்டும். தவிர யுத்தமல்லாத ஒரு சூழலும் வேண்டும் இவையிரண்டும் இருந்தால் தான் அவர்கள் தாம் பெற்ற அமைச்சுக்களுக்கூடாக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் சென்று எஸ்.எல்.எவ். பி.யின் வாக்கு வங்கியையும் முடியுமானால் யு.என்.பி.யின் வாக்கு வங்கியையும் விழுங்கமுடியும்.

எனவே சந்திரிகாவுக்கும் ஜே.வி.பி.க்கும் குறைந்தது சில வருடங்களுக்காவது ஒரு சமாதானம் தேவை இது விசயத்தில் சந்திரிகா, ஜே.வி.பி. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் போன்ற மூன்று தரப்பினரும் சற்றேறக் குறைய ஒரே கோட்டில்தான் நிற்கிறார்கள்.

இதில் சம்பந்தப்படும் நாலாவது தரப்பு விடுதலைப்புலிகள் புலிகளைப் பொறுத்தவரை நிலவும் சமாதான முயற்சிகளின் பின்னணியில் அவர்கள் மேற்குலகுடனான தமது ராஜீய உறவுகளை ஒப்பீட்டளவில் வளர்த்தெடுக்கிறார்கள். இச் சமாதான முயற்சிகளின் விளைவாக கிளிநொச்சிக்கு ஒருவித ராஜீய அந்தஸ்த்துக்கிடைத்திருக்கிறது. அதோடு நடந்துமுடிந்த தேர்தலின் போது மேற்கு நாடுகளுக்கு மிக விருப்பமான ஒரு மொழியிலேயே அதாவது சனநாயக மொழியில் தமது மக்களின் தெளிவான ஆணையொன்றை வெளிக்கொண்டு வருவதில் புலிகள் அடைந்திருக்கும் வெற்றியும் கிளிநொச்சியின் ராஜீய மற்றும் சட்ட அந்தஸ்தை மேலும் உயர்த்தியிருக்கிறது.

இதன்படி கூறின்: முன்பு சந்திரிகா சமாதானம் செய்த போதிருந்த புலிகள் அல்ல இப்பொழுதிருப்பது. சில சமயம் சந்திரிகா யுத்தத்திற்குப் போனாலும் கூட, முன்பு கதிர்காமரை வைத்துச்செய்தது போல புலிகளைச் சர்வதேச அளவில் தனிமைப்படுத்த இம்முறை முடியாது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைவிடவும் இப்பொழுதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஒப்பீட்டளவில் பலவீனமானது. அதேசமயம் பொதுசன ஐக்கிய முன்னணியின் காலத்திலிருந்ததை விடவும் புலிகள் இப்பொழுது மிகப்பலமாயிருக்கிறார்கள்.எனவே தனது பலவீனங்களையும் புலிகளின் தற்போதைய புதிய பலத்தையும் கணக்கிலெடுத்தே சந்திரிகா சமாதானம் செய்யவேண்டியிருக்கும். யுத்தநிறுத்தத்தை உடனடியாக முறிக்கஅவரால் முடியாது. ஏனெனில் அவருக்கு காசு வேண்டும் இல்லையென்றால் அவருடையதும் ஜே.வி.பி.யுடையதும் வாக்குறுதிகளை நம்பித் தமது போராட்டங்களை ஒத்திவைத்த தொழிற்சங்கங்கள் மறுபடியும் போராட்டத்துள் குதிக்கக் கூடுமே தவிர அவருடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் காசு வேண்டும்.அதாவது இலங்கைத்தீவின் சமாதானத்தில் அதிலும் குறிப்பாக சந்திரிகா செய்ய உத்தேசித்திருக்கும் சமாதானத்தில் சம்பந்தப்படப்போகும் எல்லாத்தரப்பினரும் யுத்தத்திற்கு உடனடியாகத் திரும்பிச்செல்லவிரும்பாத ஒரு பொருளாதார மற்றும் ராஜீய யதார்த்தமே இப்பொழுதுள்ளது.

இதில் இந்தியாவின் அரசியல் யதாத்தம் இந்தப் பொருளாதார யதார்த்தத்துடன் ஒத்தப் போகாத சில இடங்கள் உண்டுதான் என்றாலும் நிச்சயமாக யுத்தம் இந்தியாவின் விருப்பத் தெரிவுப்பட்டியலில் முதல் வரிசையில் இடம்பெறும் வாய்ப்புக்கள் மிகக்குறைவே. இந்தப் பிராந்தியத்தில் வெளி வல்லரசுகளும் பேரரசுகளும் அளவுக்கு மிஞ்சித்தலையிடும் போதுதான் ஒரு பார்வையாளராக அல்லது செயலற்ற சாட்சியாக சுருங்கி நிற்பது இந்தியாவிக்கு அசௌகரியமாயி ருக்கிறது என்பது ஏற்கனவே வெளித்தெரிய வந்த ஒன்றுதான்.

இப்பொழுது சந்திரிகா திறந்து வைத்திருக்கும் வாசலூடாக இந்தியா மிகக்கவனமாக அடியெடுத்து வைக்கக்கூடும்.

கடந்த இரண்டாண்டுகளாக நன்கு மேற்கத்தைய மயப்பட்டுவிட்ட சமாதான முயற்சிகளை இனி எந்தளவுக்கு இந்தியமயப்படுத்தலாம்.? என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

இதில் ஐரோப்பாவுடன் சேர்ந்து தனக்குரிய ஒரு பாத்திரத்தை பகிர்ந்துகொள்ள இந்தியா தயாரா? என்பது மற்றொரு கேள்வி. கடந்த இரண்டாண்டுகளாக சமாதானத்தை வர்த்தக மயப்படுத்திய அளவுக்கு அதை மக்கள் மயப்படுத்தத் தவறிய ரணிலை சந்திரிகா காத்திருந்து தோற்கடித்துவிட்டார்.

இப்பொழுது ஏற்கனவே நன்கு மேற்கு மயப்பட்டுவிட்ட சமாதானத்தை இந்தியமயப்படுத்த முயன்று வரும் சந்திரிகாவைத் தோற்கடிக்க ரணில் இன்னும் எவ்வளவு காலத்துக்குக் காத்திருக்கப்போகிறார்.

# நறுக்கென...

## ஆயுள் கணிப்பிடும் ஜோசியர்கள் அதிகம்



என்னைப்பொறுத்தவரை இப்போது இலங்கையில் ஜோசியர்கள் அதிகரித்துவிட்டார்கள் என துணிந்து கூறுவேன்.

ஏனென்றால் காரணம் இல்லாமல் இல்லை எந்த வகையிலும் பொருந்தாத மணமகனும் மணமகளும் போல சோடி சேர்ந்துள்ள ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிற்கும் பிறந்த மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆயுள் தொடர்பாகவே இந்த ஜோசியர்கள் அதிகரித்துள்ளனர்.

ரணில் ஒருபுறத்தில் இந்த கூடடின் ஆயுளுக்கு காலக்கெடு விதித்தார், இன்னொரு புறத்தில் அதாவது அமைச்சர்களாக இருந்த தற்போதைய முன்னாள் அமைச்சர்கள் ஆளாளுக்கு ஆயுளைக் கணிப்பிட்டார்கள்.

கடைசியாக சந்திரிகா ஜே.வி.பி.கூட்டுக்கு ஆயுட்கணித்திருப்பது ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் அமைச்சரில் ஒருவரான ராஜிதசேனாரத்னதான்.

இவர் கடைசியாக தெரிவிப்பது இந்த அரசாங்கம் நீடித்து நிலைக்கக்கூடிய ஆயுளைக் கொண்டதாக இல்லையென அபசகுணமாக கூறியுள்ளார்.

அது சரி இவர் இப்படி ஜோசியம் சொல்றார் என்றால் எல்லாம் ஜே.வி.பி.யின் ஆரம்பமே பிழையாக இருப்பதுதான்.

சந்திரிகா அமைச்சரவையை அமைத்துவிட்டபோது ஜே.வி.பி.யினர் அதனை பகிஸ்கரித்தும் தனது கோபத்தை வெளிப்படுத்தியும் கடிதம் எழுதி இருந்தார்கள் அல்லவா.

அது சரி தமிழில் ஒரு பழமொழி உண்டு முதற்கோணல் முற்றும் கோணல் என்பார்கள். இந்த பழமொழி அமைச்சர் ராஜிதசேனரத்னாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது போல.

அதுதான் துணிந்து கணிப்பிடத்தொடங்கிவிட்டார் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆயுளை.

ஓ மறந்தே போட்டுது ஜே.வி.பி.த்தனமும் சந்திரிகா தனமும் முட்டி மோதும் போது எப்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஆயுள் கெட்டியாக இருக்கும்.

## முன்னாள் புரட்சிவாதி இப்போது ஆன்மீகவாதி



திரும்ப திரும்ப சொன்னாலும் அண்ணாச்சியை நினைக்கும்போதெல்லாம் சொல்லச் சொல்லும்ஒரு வாசகம் உண்டு.

அட அண்ணாச்சியர் யார் என்று சொல்ல இல்ல அதுக்கிடையில் அண்ணாச்சியின் வசனத்தை சொன்னால் எப்படி.

இதுக்கு தமிழில் ஒரு முதுமொழி உண்டு உன்நண்பனை முதலில் கூறு உன்னைப்பற்றி தெரிந்துவிடும் என்பது தான்.

இவ்வாறு அண்ணாச்சின் வசனத்தை கூறினால் அண்ணாச்சியை தெரிந்துவிடும்.

வசனம் இதுதான் மத்தியில் கூட்டாட்சி மானிலத்தில் சுயாட்சி வடகிழக்கு என்றும் பிரிக்கமுடியாத விசேடஅலகு இப்ப தெரிந்துவிட்டது அணணாச்சி டக்ளஸ் தேவானந்தாதான் என்பது.

அண்ணாச்சியை தமிழ் மக்கள் புதிதாக நாரதர் என்றுதான் அழைக்கத தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் அண்ணாச்சிக்கு சந்திரிகா அமைச்சர் பொறுப்பை பரிசளித்துள்ளார்.

முந்தி கொடுத்த புனர்வாழ்வு அமைச்சில் கொஞ்சத்தைக் சேர்த்து தமிழ்மொழி மூல பாடசாலைகள் மற்றும் இந்து கலாச்சார அமைச்சர் பதவியை வழங்கியிருக்கிறார்.

ஆனால் இதில் ஒரு சந்தேகம் என்னெண்டால் அண்ணாச்சியின் தோற்றம் இந்த இந்து கலாச்சார அமைச்சுக்கு பொருத்தமாக இல்லையே.

சிலவேளை அண்ணாச்சி தன்ர உருவத்தை மாற்றி தேவாரம் பாடி ஆனமீகவாதியாக மாறினாலும் மாறுவார்.

அண்ணாச்சிக்கு எப்ப இருந்தது கொள்கையும் கோட்பாடும்.

அங்கனைக்க மிஞ்சின கழிவு வாக்குகளை பயன்படுத்தி அமைச்சராகிவிட்டார்.

இனி அடுத்த முறை தேர்தலில இந்த முறை கண்ட ஆறு சீட்கனவு வந்து நிழலாக ஆடும்.

ஆனால் உதுக்கு எங்கட சனம் எடுபடுமோ பாவம் டக்ளஸ்.

## ஆடும் கதிரைகளை அமர்த்த முயலும் சந்திரிகா



சோனியன் குடும்பி சும்மா ஆடாது என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு இப்போது இந்த பழமொழி யாருக்கு கணகச்சிதமாக பொருந்தும் என்றால் சாட்சாத் சந்திரிகா மேடத்தக்குத்தான்.

காரணம் இல்லாமல் இல்லை எப்போதுமே ஏழைகள் வாசலில் அரசியல் தலைவர்களின் பாதம்படுவது இலங்கை போன்ற நாடுகளில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் அதாவது தேர்தல் காலங்களில் மட்டுமேதான்

ஆனால் அவர்களின் வாக்குறுதிகள் மட்டும் தினம் தினம் காற்றோடு கரைந்து அவர்கள் இருப்பதைக்காட்டும். ஆனால் நடைமுறைக்கு என்றுமே வருவதில்லை.

இப்போது சந்திரிகாதான் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய நாடாளுமன்ற தேர்தலுக்கு அறிவித்து தேர்தல்களத்தில் குதித்தபோது தனது கட்சி முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை எப்படியாவது நடைமுறைப்படுத்தவேண்டுமென துடியாய்துடிக்கிறார்.

அப்படியெண்டால் ஒரு சந்தேகம், என்ன சந்திரிகா திருந்திவிட்டாரா அல்லது இலங்கை அரசியல்வாதிகள் திருந்திவிட்டார்களா? ஏனென்றால் தாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் இவ்வளவு சிரத்தையாக இருக்கிறார்கள்.

சும்மாவா சந்திரிகாவின் சனாதிபதிக்காலம் முடிவடைகிறது. அவ்வாறு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் சனாதிபதி முறை ஒழிப்பது எப்படி? சந்திரிகா பிரதமராவது எப்படி?

இதுதான் சந்திரிகா வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் துடிப்பது அப்படி ஒருவேளை அம்மணி நினைப்பதுபோல நடக்காதுவிட்டால் அம்மணி சந்திரிகா முன்னாள் சனாதிபதியாகி ஓய்வெடுக்கவேண்டியதுதான்.

இதை நினைக்க நினைக்க சந்திரிகாவுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். என்ற அவா எழவே செய்யும்.

ஆனால் எல்லாவற்றிற்கும் சந்திரிகா முதலில் இஸ்திரமாய் நாடாளுமன்றத்தில் கதிரைகளை அமர்த்தவேண்டும்,

இல்லையோ அம்மணியின் கதிரை ஆடுவதை தவிர்க்கமுடியாது பாருங்கோ.

## ஆடிய ஆட்டத்திற்கு அடங்கிய ரத்வத்தை



நீ ஆடிய ஆட்டம் என்ன.... நீ பேசிய வார்த்தை என்ன...? சிலவேளைகளில் சில சினிமாப்பாட்டு வசனங்கள் வாய்களில் வந்து விடுவதுண்டு.

இப்ப இந்த சினிமாப்பாட்டு வருவதற்குக்காரணம் இல்லா மல் இல்லை.

ஒரு காலத்தில் சந்திரிகாவின் மாமனாரான அனுருத்த தத்வத்தை பெரிய ஒரு ஹீரோ.

ஆனால் ஜெயசுக்குறு சண்டையில் சந்தித்த படுதோல்வியோடு அவரின் ஹீரோரத்தனம் அடங்கத்தொடங்கி பின்னர் ரணில் நாடாளுமன்றை கைப்பற்றியதோடு அனுருத்தரத்வத்தையின் ஹீரோத்தனம் முடிவுக்கு வந்து பாவம் கொலைக்குற்றவாளியாகி கம்பி எண்ணவேண்டியிருந்தது.

இதனால் அவர்பட்ட அவமானம், வேதனையெல்லாம் அவரிடமே கேட்டால் தான் புரியும்.

சும்மாவா ஜெயிலிலிருந்து சுதந்திரக்கட்சியின் முக்கிய கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தவரை கூட்டம் முடிந்து ஜெயிலுக்குப் போக வெளிக்கிட அவரது கட்சியினரே கைதட்டி அனுப்பி வைக்கும் அளவுக்கு பிரியாவிடை பெற்ற பெரியவர் அவரல்லவா?

இப்ப தேர்தலில் போட்டியிடக் கூட அனுமதி மருமகளிடம் கிடைக்காமல் இருந்தவருக்கு தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற கதிரை வழங்கப்பட போவதாக ஒரு செய்தி.

அது சரிதான் நாடாளுமன்ற கதிரையோடு அவருக்கான வாய்ப்பு நின்று விடுமோ அல்லது பிரதி பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பும் வழங்கப்படுமோ?

அப்படியானால் ரத்வத்தை- ஜே.வி.பி. மோதல் தூள்பறக்கும்.

அது சரிதான் ஆனால் மீண்டும் ரத்வத்தைக்காலம் உயிர் பெறுமா என ஒரு பெரியவர் நக்கலாகக் கேட்பது காதில் விழத்தான் செய்கிறது.

## மதவடி மயிலர்



*செய்தி: சபாநாயகர் பதவி தந்தால் அரசுக்கு ஆதரவளிக்கத் தயார் என்கிறது ஹெறல உறுமய...*

மயிலர்: துறவிகளுக்கும் பதவிகள் என்றால் பஞ்சாமிர்தம் தான் பாருங்கோ... மகாநாயக் கர்களாக வரவேண்டியவர் சபாநாயகர்களாக வரவிரும்புகிறார்கள் என்றால் சித்தார்த்தன் விடயம் தெரியாமல் பதவிகளின் பவிசு தெரியாமல் தான் துறவியானாரோ என்றே எண்ணத்தோன்றுகிறது. பதவி கிடைத்தால்.. பௌத்தராஜ்யம் அமைத்த மாதிரி என்று சொல்லப் போகிறார்களோ...

பதவியே சரணம் கச்சாமி..

*செய்தி: யாழ் மாவட்டத்தில் தேர்தல் நீதியாக நடைபெற்றது என்கிறார் தேர்தல் ஆணையாளர்.*

மயிலர்: யாழ் மாவட்டத்தில் நடந்தது தேர்தலே இல்லை என புலம்பிவரும் சங்கரியாரும்.... தேவான ந்தரும் இதுக்கு என்ன சொல்லப்போகிறார்களாம்...? மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என ஆணையாளருக்குப் புரிகிறது தோற்ற குடும்பங்களுக்குத் தான் புரியவில்லைப் பாருங்கோ...

*செய்தி: ஏக பிரதிநிதிகளாக புலிகளுடன் பேசுவதை நிராகரிக்கின்றோம் என்கிறார் ஒரு ஜே.வி.பி. பிரமுகர்.*

மயிலர்: அப்ப மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களோடு பேசப்போகிறார்களோ.. பலவீனமான ஆட்களை பதவிகொடுத்து மடக்கிப்போட்டு உரிமைகளை மறுத்துவிடலாம் என்ற பேரினவாதப்புத்திதான் இது....

*செய்தி: லக்ஸ்மன் கதிர்காமர் ஏமாந்தார் பிரதமராக மகிந்தராஜபக்ஷ தெரிவானார்.*

மயிலர்: அப்ப எலும்புத்துண்டும் கிடைக்கேல்லைப்போல.... பாவம் கதிர்காமர்.. மீண்டும் வெளியுறவு அமைச்சர் ஆவாரோ... வெளிநாட்டிலும் ஆளுக்கு காத்துப்போன நிலைதான்... பேசாமல் சனாதிபதி ஆலோசகராகவே இருக்கலாம்.. ஆனால். இனி அம்மணியார் ஜே.வி.பி.யி.னரின் ஆலோசனைகளைத் தானே கேட்கவேண்டியிருக்கும்....சரி... ஏதோ கிடைக்கிறதை ஏற்று பிளைப்பு நடத்தவேண்டியது தான்.

செய்தி: கருணாவுக்கு இராணுவத்தளபதி புகழாரம்...

மயிலர்: வேலியைப் பாராட்டிச்சாம் ஓணான்... பேசாமை கருணாவை சிங்க றெஜிமென்டிலோ, ராசிக்குழுவிலையோ சேர்த்துக்கொண்டாலும் ஆச்சரியமில்லை... எதிரிகள் புகழ்கிற அளவுக்கு கைக்கூலியாப்போட்டார் பாருங்கோ... அதுதான் பரிதாபம்...

☞ இனிய இயல்பு, உள்ளத்தின் வளம்; மன வேதனை, அதற்கு நச்சு. – லெஸின்ஸ்கி ஸ்டேனிஸ்லாஸ்

# கருணா அகற்றப்பட்டு செப்பனிட்ட பாதையில் தமிழர் படை

சிறி.இந்திரகுமார்



மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டத்தில் இதுவரை கருணாவினால் ஏற்பட்ட நெருக்கடி முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் தனது பணியினை நிறுத்தியிருந்த இலங்கை யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழு தனது பணியினை ஆரம்பித்துள்ளது.

இதனை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் றொக்லண்ட் உறுதிப்படுத்தியிருப்பதுடன் கருணா குழுவினரிடமிருந்து மீட்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் இயல்புவாழ்வு திரும்பியுள்ளதுடன் இடம்பெயர்ந்த மக்களும் தமது சொந்தஇடங்களுக்கு திரும்பி வாழத்தொடங்கிவிட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்பிவிட்டதை சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் றொக்சூட்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை வாழ்மக்கள் எதிர்கொண்ட நெருக்கடி முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் தமிழர் தாயகத்திலிருந்து தமிழினத் துரோகி ஒருவர் அகற்றப்பட்டு விட்டார் என்ற மன நிறைவும் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் மட்டு. அம்பா றையில் துரோகி கருணாவால் ஏற்பட்ட சலசலப்பு புலிகள் இயக் கத்தின் விசேட நடவடிக்கை ஒன்றின் மூலம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரப்பட் டுள்ளது.

கருணா என்ற தனி மனிதனால் புலிகள் இயக்கத்திற்குள் கொண்டு வந்த ஒரு நெருக்கடியை சிங்கள பேரின வாதிகளும் சில சிங்கள ஆங்கில இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் தமிழர் போராட்டத்தையும் தமிழர் தலைமையையும் இதுவரை சீண்டி வந்தனர்.

குறிப்பாக இந்த பிரச்சினையை 'ஐலண்ட்' போன்ற பேரினவாத பத்திரிகைகள் 'முடிவின் ஆரம்பம்' என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் தமிழீழ விடுதலைப்போரினதும் முடிவு காலம் என்றவகையில் ஆசிரியர் தலையங்கங்களை தீட்டி தமது மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தி இருந்தனர்.

ஆனால் புலிகள் இயக்கமோ ஒரு துரோகத்தனத்தின் முடிவுகாலமாக இதனை மாற்றி தமிழீழ விடுதலைப்பாதையை செப்பனிட்டுள்ளனர் என்பதே உண்மை.

பேரினவாதிகள் கூச்சலிட்டது. போல ஒரு பாரிய பிரச்சினையாக இதனை எடுத்துக் கொண்டால் கூட அதிலும் ஒரு வெற்றிகரமான நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது. அதாவது அவர்கள் கூச்சலிட்டது போல ஒரு பாரிய நடவடிக்கையை தனது மிகச்சிறந்த இராஜ தந்திரமற்றும் விசேட நடவடிக்கை மூலம் சிறு இழப்போடு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது.

அந்த வகையில் புலிகள் இயக்கத்தின் சுமார் மூன்று தசாப்தகால பட்டறிவு நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

பொதுவாகவே துரோகி கருணா தன்னிச்சையாக தமிழீழ விடுதலைப் போரிற்கும் தமிழீழ தலைமைக்கும் அப்பட்டமான துரோகத்தனத்தைபுரிந்துவிட்டு எந்த சவாலையும் எதிர் கொள்ள தயாராக தன் பின்னால் பெரும் படையணிகள் இருப்பது போல அறிக்கைகளைவிட்டு வந்தார்.

ஆனால் மட்டு, அம்பாறை மாவட்ட மக்களையும் போராளிகளையும் சரியான வகையில் மதிப்பீடு செய்த புலிகள் இயக்கம் கருணா ஒரு தனிமனிதன் மட்டுமே எனவும் அங்குள்ள போராளிகள் சூழ்நிலைக் கைதிகளாக்கப்பட்டுள்ளனர். என்பதையும் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால் இவற்றை விமர்சித்த தமிழின விரோதிகள் புலிகள் இயக்கம் உண்மைக்கு புறம்பான விதத்தில் இந்தப் பிரச்சினையை வெளிப்படுத்துவதாகவே கூச்சலிட்டனர்.ஆனால் புலிகள் இயக்கம் தான் வெளிப்படுத்தியது போலவே கருணா தனிமனிதன் என்பதையும் அங்கு இருந்த போராளிகள் தமிழீழ தலைமைக்கு விசுவாசமானவர்கள் என்பதையும் செயல் மூலம் நிருபித்துள்ளனர்.

இந்த நிலையில் புலிகள் இயக்கம் இந்த நெருக்கடியை ஒரு சில நாட்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் பொதுமக்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களை தவிர்த்துள்ளனர்.

ஒரு விடுதலை இயக்கத்திற்குள் ஏற்பட்ட ஒரு பிரச்சினையை மிக இலகுவாக முடிவுக்குக் கொண்டு வந்து உள்ளக ரீதியாக ஒரு துரோகத்தனத்தை புரிந்த நபரினை களைந்தமை நிச்சயம் பலரையும் வியப்பிலாத்தியிருக்கும். ஏனென்றால் தாய்த்தளப் பிரதேசத்திலிருந்து மிகநீண்ட தூரத்திலிருந்த ஒருபிரதேசத்திலேயே இந்தப் பிரச்சினை தோன்றியிருந்தது. அதிலும் தொடர்புகளுக்கு பொருத்தமான பாதைகள் இல்லை. என கூறப்பட்ட ஒரு பிரதேசத்திலேயே புலிகள் இயக்கம் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக செய்துள்ளது.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கதின் கட்டமைப்பு எவ்வளவு பலமான ரீதியில் சீராக பேணப்பட்டு வருகிறது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் புலிகள் இயக்கம் எந்த ஒரு கட்டத்திலும் பல வீனப்பட்டுப்போய்விடக்கூடிய ஒரு அமைப்போ அல்லது சிதைந்து போகக்கூடிய அமைப்போ அல்ல என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

ஒடுக்குமுறையின் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின் அரசியல் விமோசனத்துக்காக போராடிவரும் புலிகள் இயக்கம் சிறந்த தலைமையின் கீழ் மிகப்பலமான அடித்தளம் ஒன்றின் கீழேயே கட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் இராணுவ, அரசியல் மற்றும் வெகுசன ஆதரவு எனும்பலமான ஒரு நேர்கோட்டிலேயே தமிழீழ விடுதலைப் போரை நடாத்தி வருகிறார்.

இதனை புலிகள் இயக்கம் தனது மூன்று தசாப்தகால போரியல் வரலாற்றில் பல முறையில் நிருபித்துள்ளது.

இந்த ஒவ்வொரு வெற்றிகளின் பின்பும் புலிகள் இயக்கம் புதுத்தெம்போடுதான் சர்வதேச அரங்கில் தம்மை நிலைநிறுத்தியிருக்கிறது.

அதிலும் குறிப்பாக கருணாவால் ஏற்படுத்தப்பட்டிருந்த நெருக்கடியானது சர்வதேச அரங்கில் உன்னிப்பாக அவதானித்துவரும் சமாதானத்தை புலிகள் இயக்கம் மிகநேர்த்தியாக பேணிவந்த சூழலிலேயே தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

இது புலிகள் இயக்கம் நேர்த்தியாக கடைப்பிடித்துவரும் சமாதானத்தின் மூலம் புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக பெற்றுவந்த ராஜீக அந்தஸ்தினை ஏற்றுக்கொள்ள முடியாத சக்திகளின் கைங்கரியமே.

ஆனால் புலிகள் இயக்கமோ தனது சமாதான பற்றுறுதிக்கு பங்கம் ஏற்படாதவகையில் அதேநேரம் இந்த நெருக்கடி தொடராது முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

அத்தோடு தழிழீழ தலைமைக்கு தெரியாது புலிகள் இயக்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் வயது குறைந்தவர்களை போராளிகளாக அமைப்பில் இணைத்து வைத்திருந்த கருணாவின் பிடியிலிருந்து விடுவித்து புலிகள் இயக்கம் சமாதானத்தின் மீதுகொண்ட பற்றை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது.

இதனை மட்டக்களப்பில் நூற்று அறுபத்தெட்டு போராளிகளை பெற்றோரிடம் ஒப்படைத்தமை குறித்து யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்த கூற்று முக்கியத்து வமிக்கது.

அதாவது பெருந்தொகையான சிறுவர்களை புலிகள் இயக்கம் யுனிசெப் ஊடாக ஒப்படைத்தமையானது சமாதானத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை தெளிவாக்கியிருப்பதுடன் அந்த அமைப்பின் புதிய போக்கை வெளிப்படுத்தியிருக்கிறது எனவும் தெரிவித்திருந்தார்.

நிச்சயமாக இந்த செயற்பாடானது புலிகள் இயக்கத்தை சர்வதேசத்தின் மத்தியிலும், மனிதநேய, மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கும்.

இந்தவகையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடியை புலிகள் இயக்கம் முடிவுக்கு கொண்டு வந்ததன்மூலம் விடுதலைப் பாதையிலிருந்த ஒரு பெருந்தடைக்கல்லை அகற்றி விடுதலைப்போரை அழிக்க முயன்ற தீயசக்திகளின் எண்ணங்களை முறியடித்து தனது விடுதலை நோக்கிய பயணத்தில் புதியதெம்போடு பயணிக்கத் தொடங்கிவிட்டது.

## ஓகோ! அப்படியா!

ஓகோ! அப்படியா!



நிரந்தர சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அரசியலில் ஸ்திர நிலை இருக்கவேண்டியது அவசியம்.
சனாதிபதி சந்திரிகா

ஓகோ! அப்படியா!



சனாதிபதி மேற்கொள்ள இருப்பதாகக்கூறப்படும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் சிறுபான்மைக் கட்சிகளைப்பொறுத்தவரை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம்.

ஓகோ! அப்படியா!



சமாதானத்தை தோற்றுவிப்பதே எமது முதல் முக்கியவிடயமாகும். நாடு முன்னேறுவதற்கு முதலில் அமைதி தோற்றுவிக்கப்படவேண்டும்.
பிரதமர் ராஜபக்ச ஊடகவியலாளர் மத்தியில்...

ஓகோ! அப்படியா!



நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு கடுமையாக உழைக்கவேண்டும்.
நிதியமைச்சர் சரத்அமுனுகம.


நேர்நோக்கு

# சகித்துக்கொள்வதைத்தவிர வேறுவழியில்லை

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே கடந்த வருட இறுதியில் செய்து கொள்ளப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தேர்தலில் வெற்றிபெற்று முதல் நடவடிக்கையிலேயே மீறப்பட்டு விட்டதாக அல்லது அதில் குறிப்பிடப் பட்டதற்கு மாறான நயவஞ்சக நடவடிக்கையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டு விட்டதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியிருக்கிறது.

அதாவது நான்கு அமைச்சர் களும் நான்கு பிரதிஅமைச்சர்களும் தமது கட்சிக்கு வழங்கப்படும் எனப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவ்வாறே அமைச் சுக்கள் பிரதி அமைச்சுக்களும் ஒதுக் கப்பட்டுள்ளன. ஆனால் அவ்அமைச் சுக்களிலிருந்து முக்கியமான பொறுப்புக்கள் நீக்கப்பட்டு அவற்றை தமது ஆட்களுக்கு சந்திரிகா வழங்கிவிட்டதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது. உதாரணமாக விவ சாய, காணி அமைச்சை ஜே.வி.பிக்கு வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அதிலிருந்து மகாவலி அபிவிருத்தி நீக்கப்பட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.அவ்வாறே கிரா மிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கிராமிய வங்கிகள் நிதி அமைப்புக்கள் அதிலிருந்து நீக்கப் பட்டுள்ளது. இவ்வாறு ஜே.வி.பி தனக்கு வழங்கப்பட்ட நான்கு அமைச் சுக்கள் பற்றியும் குறைகூறியுள்ளது.

இதேவேளை பேச்சுக் களின் போது லக்ஸ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிக்க ஒப்புக்கொள்ளப் பட்டது. இப்போது மகிந்தராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார். பௌத்தர் ஒருவர்தான் பிரதமராக நியமிக்கப்படவேண்டுமானால் அநுரா பண்டாரநாயக்கவை அல்லது மைதிரிபால சிறிசேனவை நியமித்திருக்கலாமே எனக்கூறியிருக்கின்றது.



சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறான குயுக்தியான காரியங்களைச் செய்ய வல்லவர் என்பது குறித்து இதுவரை காலமும் ஜே.வி.பி.யினர் உணர்ந்துகொள் ளாதது ஆச்சரியம்தான். எனினும் ஜே.வி.பி. யினருடன் சந்திரிகா முன்னரே எவ்வாறு நடந்துகொண்டதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

2001 ஆம் ஆண்டு இறுதியில் பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டவேளை சனாதிபதி சந்திரிகா குமார துங்க ஜே.வி.பியுடன் நன்நடத்தை அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு வந்தார். இதன்போது ஒப்பந்தம் ஏற்பட்ட திலிருந்து இத்தனை நாட்களில் இன்னஇன்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதன்படி அமைச்சரவை உறுப்பினர் களின் எண்ணிக்கையை இருபதாக குறைப்பது என ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அதிலும் அதிகமாக ஒரு சிலஉறுப்பினர்களை சந்திரிகா நியமித்துவிட்டு தன்னைவிட 20 பேர்தான் உள்ளார்கள் என சாதித்துவந்தார்.

இதைவிட முக்கியமான விடயம் சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பது தொடர் பானதாகும். அதாவது 1994ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஐந்து சுயாதீன ஆணைக்குழுக் களை அமைப்பதாக கூறியிருந்தது. தேர்தல், பொலிஸ், நிதி, நிர்வாகம், ஊடகம் ஆகிய துறைகளுக்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதாக உறுதியளித்தபோதும் அதன் ஆறு ஆண்டு ஆட்சிக்காலத்தில் அதனைச் செய்யவில்லை.

பின்னர் மேலே கூறப்பட்ட நன்னடத்தை அரசாங்கம் தொடர்பான உடன்பாட்டில் ஊடகத்துறை தவிர்ந்த ஏனைய வற்றிற்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கமைய அரசியலமைப்பில் 17 ஆவது சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதற்கு ஐ.தே.கட்சி உட்பட அனைத்துக்கட்சிகளும் ஆதரவளித்தன.

ஆனால் இன்றுவரை இந்தஆணைக் குழுக்கள் சரிவரச்செயற்பட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றார். நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதிமுறை நீக்க 1994ல் ஆறுமாத அவகாசத்தை சனாதிபதி சந்திரிகா கோரிய போது அதற்கு ஜே.வி.பி ஆதரவாக இருந்தது. ஆனால் அவரது ஒரு பதவிக்காலம் முடிந்து இரண்டாவது பதவிக்காலத்தில் தந்திரமான முறையில் இருமுறை சத்தியப்பிரமாணம் செய்து பதவிக்காலத்தை நீடித்துள்ள அவர் இப்போது மீண்டும் மாற்றுப்பெயரில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட பிரதமராகும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

எனவே முன்னரே ஜே.வி.பியை பலதடவைகள் ஏமாற்றியபோதும் தொடர்ந்தும் ஏமாறுவது ஜே.வி.பியின் குற்றமே ஒழிய சந்திரிகாவின் குற்றமல்ல. அடுத்ததாக பிரதமரை நியமித்தவிடயத்தில் ஜே.வி.பி. தனது செல்வாக்கு கூடிய பிரதேசம் எனக்கருதும் தென்மாகாணத்தைச் சேர்ந்த செல்வாக்குமிக்க ஒருவர் பிரதமராவதை விரும்பாததே அவர்கள் மகிந்தராஜபக்சவை பிரதமராக்க விரும்பாததற்கு காரணமாகும் வேறொரு காரணத்துக்காக மகிந்தராஜபக்சவை பிரதமராக்காது கதிர்காமரை பிரதமராக்க சனாதிபதி விரும்பினாலும் சு.க.விற் குள் உள்ள நிலை அதற்கு இடமளிக்கவில்லை.

எவ்வாறாயினும் ஜே.வி.பி சந்திக்கப் போகும் ஏமாற்றம் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. ஆனால் அவற்றையெல்லாம் சகிக்கவேண்டிய பொறிக்குள் ஜே.வி.பியும் சிக்கிக்கொண்டுள்ளது மட்டும் உண்மை. அதாவது சந்திரிகாவின் ஏமாற்று நடவடிக்கை களுக்கு உடன்பட்டே ஆகவேண்டிய கட்டாயம் ஜே.வி.பி.க்கு உள்ளது. அவ்வாறில்லாது முரண் பட்டு வெளியேறினால் ஆட்சியை இழக் கப்போவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி மட்டுமல்ல ஜே.வி.பியும்தான்.

எனவே முகத்தை நீட்டிக்கொண்டு ஒருவரை ஒருவர் சகித்துக்கொள்வதைத் தவிர சு.க., ஜே.வி.பிக்கு ஆட்சியைத்தொடர வேறுவழியில்லை.

வேலவன்

# மக்களின் பிரச்சினைக்கு புதிய பிரதமரின் தீர்வு?

சிறிலங்காவின புதிய பிரதமராக பதவி யேற்றிருக்கும் மகிந்தராஜ பக்ஷ அண்மையில் தங் காலைப் பகுதியில் மக்கள் மத்தியில் உரையாற்றும் போது பொருளாதார அபி விருத்தியை துரிதப்படுத்தி உடனடியாக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவுள்ளதாக தெரி வித்துள்ளார்.

சந்திரிகாவின் விருப்பையும் மீறி, கதிர்காமர் பிரதமராவதைபுறந்தள்ளி, ஜே.வி.பி.யின் எதிர்ப்பை தாண்டி பிரதமராகிவிட்ட கொழும்பு ஊடகங்களால் நவயுகநாயகன் என வர்ணிக் கப்படும் மகிந்த ராஜபக்ஷ மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளிற்கு தீர்வுகாண் பதாயின்ளந்துப் பிரச்சினையை முதலில் கையாளப்போ கிறார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி நடை பெற்று முடிந்த பதின் மூன்றாவது நாடாளுமன்றத்தேர்த லில் தோல்வியை தழுவியமைக்கு பிரதான காரணமாக சுட்டிக்காட்டப் படும் மக்களின் பொருளாதார நலன் களில் ஏற்பட்ட பாதிப்பைஇவரின் அரசால் எந்த வகையில் நிவர்த்தி செய்யமுடியும்.

அவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டுமானால் அவர்கள் முன் உள்ள பிரதான தெரிவு சமாதானம் மட்டுமே.

இந்த சமாதானத்துக்கு மட்டுமே இலங்கையின் பொருளா தாரத்தை நிமிர்த்தும் ஆற்றல் உண்டு.

இலங்கையில் உண்மை யாக எவர் சமாதானத்தின் மீது பற்று வைத்து அதனை அசையச் செய் கிறார்களோ அந்த அரசுக்கே நிதி கையிற்குகிட்டும் என்ற நிலை உண்டு.

அதிலும் குறிப்பாக இலங் கையில் சமாதானத்தை ஏற்படுத்து வதில் அதிக முனைப்போடு இருக்கும் மேற்குலகின் அபிலாசைகளை அனு சரித்து போகும் ஒரு போக்கை கொண்டதாக அந்த அரசுசமாதா னத்தை முன்னகர்த்தியாகவேண்டும்.



அல்லாது நிதியைப் பெற் றுக்கொள்வதற்காக மட்டுமான சமா தானமாக முன் நகர்த்த எத்தனிக்கப் பட்டால் மேற்குலகின் நிதிவழங்கள் படுத்துவிடும்.

ஆகவே ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் பிராதான தெரிவாக உள்ளது சமாதானம் தான்.

அதிலும் இந்த சமாதானத்தை இந்த அரசு குறிப்பிட்ட காலம் வரையாவது தன்னுடைய ஆயுளை நீடிக்க வைக்க வேண்டுமானால் சமா தானத்தை தழுவியாகியே வேண்டும்.

இப்போதுள்ள நிலை மையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றவுடன் வாழ்த்துக்களை தெரிவிக்கும் ஒரு சம்பிரதாய நிகழ்வில் முதலில் கலந்துகொண்ட இந்தியத்தூதுவர் நிருபம் சென்னின் பிரசன்னம் என்பது இந்தியா இலங்கையின் சமாதானத்தின் பங்காளியா கப்போவதன் முன் குறிகாட் டியா என்ற கேள்வியை பர வலாக ஆய்வாளர்கள் மத்தி யில் எழுப்பியிருந்தது.

இந்த நிலையில் அதிகம் மேற்குலகை விரும் பாத ஜே.வி.பி.யுடன் பிரதான கூட்டை அமைத்து ஆட்சி அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்தியாவை அதிகம் அனு சரித்துப் போகிறதா? அல்லது மேற்குலகை அதிகம் அனு சரித்துபபோகப்போகிறதா என்பது மிகவிரைவில் தெரிந்துவிடும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகம் இந்தியாவை அனுசரித்துப்போவதாயின் மேற்குல கின் நிதிவழங்களில் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

இதற்கு பிரதியீடாக இந்தியா இலங்கைக்கு இந்த நிதி உதவியை வழங்குமா என நோக்கின் இந்தியா வில் இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிகளை தீர்த்து வைக்கும்அளவுக்கு இந்தியா ஒரு உதவி வழங்கும் நாடு என்ற பொருத் தமான இஸ்தானத்தை இன்னும் எட்டிவிடவில்லை பதிலாக இந்தியா வும் ஒரு உதவிகளைப்பெற்றுக் கொள்ளும் நாடு என்ற நிலையிலேயே இன்னும் இருக்கிறது.

ஆகவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பதுபோல மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சமாதானத்தை எந்தளவு பற் றுறுதியோடு கையாளப்போகிறார்கள்.

இதன் அடிப்படையில்தான் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக இவர்களால் வேலை நிறுத்தங்களில் குதிக்க வைத்த அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்கும், மக்களின் ஆதங்கங்களுக்கும் தீர்வு காணப்படக் கூடியதாக இருக்கும். பதிலாக இவை புறந்தள்ளப்படுமாயின் இதே போராட் டங்கள் இவர்களை நோக்கி மிக விரைவில் திரும்பும்.

அந்த நிலையில் இந்த நவயுக நாயகனால் மட்டுமல்ல அவர்சார்ந்த அரசினால் கூட இலங்கை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியாது.

ஏனென்றால் பிரச்சினைக் கான மூலகாரணமே இவர்கள்தான்.

நக்கீரர்

இன்பத்தின் இரகசியம், சுதந்திரம், சுதந்திரத்தின் இரகசியம், துணிவு. - தூசிடிடிஸ்

# நலிந்துபோன கைத்தொழில் மீண்டும் தளிர் விடுமா?

இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான செல்வாக்குச்செலுத்தி வந்த



வட-கிழக்கு தமிழர் தாயகம் இன்று நிவாரணங்களுக்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்குமான தங்கி வாழ்வோர் பிரதேசமாகியுள்ளமை கவலை தருகிறது.

1950களின் பின்னர் அறிமுகமான சிறிய, நடுத்தரக் கைத் தொழில்களிலும் குடிசைக் கைத் தொழில்களிலும் குறிப்பாக யாழ்பாணம் சிறந்து விளங்கியது. ஆனால் கடந்த மூன்று தசாப்த காலங்களாக நடைபெறும் யுத்தத்தினாலும், அரசியல் பழிவாங்கல்களினாலும் எமது சுதேசிய கைத்தொழில்கள் மறைந்துபோய் சகல பொருட்களுக்கும் தங்கி வாழும் மக்க்ள் கூட்டமாக எம்மை அடையாளம் காட்டுகிறது.

அவ்வாறு நலிந்துபோன கைத்தொழில்களில் ஒன்றான மட்பாண்ட உற்பத்தியும், அதன் நலிவுக்கான காரணிகளையும் இன்றைய ஆய்வுக்குட்படுத்துவோம். இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் கைத்தொழில் பொருட்களில் ஏறத்தாள6 % அளவை இந்த மட்பாண்ட உற்பத்திகள். வடபகுதியும் இதற்கான கணிசமான பங்களிப்பினை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப் பாணத்தில் அரச மட்பாண்டக் கூட்டுத்தாபனம் 1962ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தது.

சங்கானை, மட்டுவில், கல்வியங்காடு, கொடிகாமம், இருபாலை, சங்கத்தானை போன்ற இடங்களில் மட்பாண்ட தொழில் முயற்சிகள் நடைபெற்றன. ஆயிரக்கணக்கானோர் இத்தொழில் காரணமாக வேலை வாய்ப்பைப் பெற்றிருந்ததுடன் மறைமுக அனுகூலங்களைப் பல்லாயிரக்கணக்கானோர் அடைந்தனர். மட்பாண்ட உற்பத்திகள் என்ற வகையில் தேநீர்க்கிண்ணங்கள், சாப்பாட்டுக் கோப்பைகள், தண்ணீர்க் குவளைகள், பூவாஸ்கள், சுவர்மாட்டிகள், சாம்பல் தட்டுகள், உருவங்கள், கலைச்சிற்பங்கள், அழகுசாதனப்பொருட்கள் உற்பத்திசெய்யப்பட்டன. இன்று அவை எங்கே என்று கேட்கும் அளவில் ஆகிவிட்டன. அவை இருந்த இடங்கள் தெரியாமல் ஆகிவிட்டன. அதனால் தென்பகுதிப் பொருட்களாக இன்று மீண்டும் எமது யாழ்ப் பாணத்துக்கடைகளில் வந்து குவிந்திருக்கின்றன. நாமும் வாங்கி மகிழ்கிறோம்.





ஆனால் எமது கைத்தொழில் அழிவையோ,வளஅழிவையோ பற்றி எம்மில்யாருமே சிந்திப்பதாக இல்லை.

மட்பாண்ட உற்பத்தி என்றால் தரக்குறைவாக எண்ணும் மனோபாவமே இக்கைத் தொழில் மறைவுக்குப் பிரதான காரணம். அத்துடன் சட்டி, பானை செய்வதுதான் மட்பாண்டக் கைத்தொழில் என்று யாவரும் நினைத்துக்கொள்ளுதலும் ஒரு காரணம், மட்பாண்ட உற்பத்தி இலங்கையின் ஏற்றுமதிப்பொருள் அது பல பயன்பாட்டுத்தன்மை கொண்ட நவீனதொழில் நுட்பங்களை உள்வாங்கக்கூடிய தனித்தொழில்துறை என்ற உண்மை யாவராலும் அறியுப்படவேண்டும்.

1985கள் வரை யாழ்ப் பாணத்தில் இயங்கிவந்த இத்தொழில் முயற்சி நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவுகளால் தடைப்பட்டது. முருங்கன், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மல்லாவி, போன்றபிற பிரதேசங்களில் இருந்து களிமண்ணை எடுத்துவருவதில் ஏற்பட்ட தடங்கல், மின்சாரத்தடைகள், போக்குவரத்து என்பவை காரணமாகின. இதனை சாட்டாகக்கொண்டு எமது தலைவர்களும், அதிகாரிகளும் அக்கைத்தொழிலுக்கு மூடுவிழா வைத்ததனைப் பயன்படுத்தி தென்னிலங்கைக்காரர்கள் அரசாங்க மட்கள நிலையங்களில இருந்த பல்வேறு நல்ல இயந்திரங்களைஎடுத்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் தற்காலிக அமைதியில் சற்று நிமிர்ந்துவருகிறது. இதனைப் பயன்படுத்தி நாம் இழந்துவிட்ட கைத்தொழில்களை மீளப்பெற நடவடிக்கை எடுப்பதில் அரச அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ, அக்கறை காட்டுவதாக இல்லை தற்பொழுது இத்தொழில் வல்லுநர்களும், தொழிலாளிகளும் அருகிவருகின்றனர். இன்னும் தாமதம் காட்டுவோமானால் இக்கைத் தொழிலை நாம் முற்றாக இழந்துவிடவேண்டிய ஆபத்து வரும் என்கின்றார் கல்வியங்காட்டில் தற்பொழுதும் இத்தொழிலை சிறு அளவில் மேற்கொண்டுவரும் தொழிலாளி பா. தங்கவேல் அவர் தொடர்ந்து கருத்துத்தருகையில்; இத்தொழிலை மேற்கொள்வது கௌரவக்குறைவு என்றும் ஒரு சாரார் நினைக்கின்றனர். ஆனால் இது ஒருகலைப்படைப்புஎன்ற இரசனை அற்றவர்களின் எண்ணமே அது என்றார்.

சென்றஆண்டு வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற "புத்துலகப் பிரவேசம் 2003" கண்காட்சியின் போது யாழ். அரச அதிபர் கருத்துக் கூறுகையில்; யாழ்மக்கள் மட்பாண்ட உற்பத்திகளை வாங்குவதிலும், அதனைப்பயன்படுத்துவதிலும் ஆர்வம் காட்டுவார்களா? என்று சந்தேகம் எழுப்பினார். ஆனால் ஆரோக்கியமான வாழ்வையும் தமிழர் பண்பாட்டையும் கட்டிக்காப்போர் நிட்சயமாக இன்னும் அவற்றை விரும்புவர்.

மட்குடத்துநீர் அருந்தும் ஆர்வம் உள்ளவர்கள் இன்னும் உள்ளனர். அழகு சாதனப் பொருட்களையும், கலைப்படைப்புக்களையும் எமது கலைஞர்களாலும் உருவாக்கமுடியும்.

வடபுலத்து மூலப்பொருட்களைக்கொண்டு எமது தேசத்திற்கான சகல கைவினைப் பொருட்களையும் நாமே படைக்க நலிந்துபோன கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெறவேண்டும். அதற்கான சகல நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும். இது எமது தமிழர் தேசிய நலனுக்கானதும் தமிழர் தேசியப் பொருளாதாரத்திற்குமானதுமான நல்ல பணியாக அமையும்.

வேலை வாய்ப்பின்மை என்று கூறிக்கொண்டு எமது இளைய தலைமுறையினர் அரசாங்க வர்த்தமானிகளையே எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர். அதனை விடுத்து எமது தேசிய வளங்களைப் பயன்படுத்தி மாறிவரும் உலகத்தேவைகளுக்குஏற்ப தொழில்நுட்பங்களைப் புகுத்தி இவ்வாறான கைத்தொழில்களை மீண்டும் எமது தாயகத்தில் வளர்த்தெடுப்பதற்கு ஆர்வம் காட்டவேண்டும்.

**— ஆதி —**

---

# அவலங்கள் தொடரும் மீனவர் வாழ்க்கை

**அண்மைக்காலங்களில்** வடக்கு மீனவர்களின் நிலை மிகமிக கவலை நிறைந்ததாகவும் அவர்களின் தொழில் சிக்கல் நிறைந்ததாகவும் மாறிவருகிறது. தமிழீழ மீனவர்களின் கடல் வளத்தை சுரண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இதனால் அரங்கேறும் கொலைவெறி கைதுகளும் தொடர்கதையாகவே தொடர்கின்றன. மீனவர்களின் சுதந்திரமான தொழிலுக்கு முட்டுக்கட்டை போட்ட கடல் வலய தடைச்சட்டம் இதுவரை முற்றாக நீக்கப்படவில்லை. அதனால் மீனவர்களின் அவல நிலைக்கு முற்றுப்புள்ளியும் இல்லை.

"பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது" போல் சிறிலங்கா கடற்படையினர் சிலவேளைகளில் எம்மீனவர்கள் மீது விளையாடும் விளையாட்டால் பல்லாயிரக் கணக்கான மீனவ உயிர்களை கடலில் பறித்துள்ளனர். சென்ற காலங்களில் துப்பாக்கியினால் அவலத்தை செய்தவர்கள் இன்று அவர்களின் வேகப்படகுகளினால் எம்மீனவர்களின் படகின் உறுதியை பரீட்சிக்கும் இடிகளினால் அநியாயமாக மீனவர்களின் உயிர்களை பறித்துச் செல்கின்றன.



அண்மையில் பருத்தித்துறை கடற்பரப்பில் இது போன்ற சிங்கள இனவெறி கடற்படையால் ஒரு மீனவர் கொல்லப்பட்டார் உயிரிழந்த மீனவரின் குடும்பம் ஏற்கனவே சிங்களப்படைகளினாலும் தேசவிரோதிகளினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு பங்கமாக எம் கடல் பிரதேசத்தை ஆக்கிரமித்திருக்கும் கடற்படையின் அடாவடித்தனத்திற்கு அளவேயில்லாமல் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. மீனவர்களும் போராட்டங்களை நடத்துகின்றனர் இதுவரை வெற்றிபெறவில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகள் சொற்பகாலத்தினுள்ளே காற்றில் பறக்கின்றன. உப்பு நீரில் உதிரங்கள்படியும் வாழ்க்கை எதிரிகள் எம்கடலை விட்டுஎப்போது வெளியேறுகின்றனரோ அப்போதுதான் அதற்கும் விடிவுகாலம் பிறக்கும், நிம்மதியான வாழ்வும் மலரும். மீனவர்களின் குடும்பங்கள் பல தம் கணவர் பிள்ளைகளை இழந்து வறுமையில் தத்த்ளிக்கின்றன. கண்ணீரில் தினம் தினம் குளிக்கின்றன. வாழ்வின் பெரும் பகுதியை துன்பமாகவே சுமக்கின்றனர். சிங்கள இனவாதிகளினால் சிதைக்கப்பட்ட நிகழ்வுகள் ஒருபுறம் இருக்க வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போல் இந்திய மீனவர்களின் எல்லை மீறல்கள் அதிகரித்தபடியே இருக்கின்றன. எமது கடல் எல்லைக்குள் நுழையும் இழுவைப் படகுகளினால் மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகள் வெட்டப்படுகின்றன. அத்துடன் அபகரிக்கவும் படுகின்றன. இவற்றைவிட இருமீனவசமூகங்களிடையேயும் ஏற்படும் கருத்து முரண்பாடுகளினால் வெட்டுக்கள், கொலைகள், கைதுகளும் நடந்தவண்ணமேயுள்ளன. இவை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் அக்கறை கொள்வதாக இல்லை.

இவையனைத்தும் எம்மீனவர்களின் வாழ்வியல் நிலைமையை சிக்கலாக்குவதாகவே அமைகின்றன. இந்த வாழ்க்கையில் இருந்து விடுபட அவர்களுக்கு நீண்ட காலம் எடுக்கும் இந்த காலத்துள் அவர்கள் கொடுக்கும் விலைகளும் அதிகமாகவே இருக்கப்போகின்றது. அத்துடன் வட-கிழக்கில் மீன்பிடி தொழில் வீழ்ச்சிகளையும் கொண்டதாக அமையப்போகிறதோ என்ற ஐயம் எல்லோர் மனதிலும் எழுகிறது.

**வை. ரஜனிகாந்தன்**

# தலைமைச் செயலகம் எனப்படும் மனித மூளை

> “சராசரி மனிதன் நாளொன்றுக்கு 21,600 தடவை மூச்சு விடுவதாகச் சொல்லப்படுகின்றது. இரு நாசித்துவாரங்களாலும் மனிதன் ஓரே நேரத்தில் மூச்சு விடுவதில்லை. நான்கு மணிநேரம் ஒரு நாசித்துவாரத்தாலும் அடுத்த நான்கு மணிநேரத்தில் மறு நாசித்துவாரத்தாலும் நாம் மூச்சு விடுகிறோம். இப்படியே நான்கு மணிநேரத்திற்கு ஒரு தடவையாக மூச்சுப் பாதை மாற்றம் அடைகின்றது.”

தலைமைச் செயலகம், கட்டளைப் பீடம், சிந்தனை மையம் என்றெல்லாம் அழைக்கப்படும் மனித மூளை, உறுப்புக்களில் முதலிடம் வகிக்கின்றது. மூளை இல்லாவிட்டால் மனிதன் இல்லை என்னுமளவுக்கு அதன் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. ஏறத்தாழ மூன்று இறாத்தல் எடையுள்ள மனித மூளை உலகின் மிகச் சிக்கலான எந்திர சாதனமாகக் கருதப்படுகின்றது. மனித மூளை பற்றிய ஆய்வுகள் முடிவுறாது தொடர்கின்றன. பிறந்தவுடனேயே ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் ஒரு மூளைப் பிரதி இலவசமாகக் கிடைக்கின்றது. தனது வாழ்நாளில் அதை எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதில் அவனுடைய வரலாறும் சில சமயம் உலக வரலாறும் தங்கியுள்ளது. எண்சான் உடலுக்குச் சிரசே பிரதானம் என்ற பொய்யாமொழியின் நிறைவான அர்த்தம் மூளைப் பயன்பாட்டில் தங்கியுள்ளது. உடலுக்கு வயிறே பிரதானம் என்போர் எரிபொருள் நிலையத்தை மாத்திரம் பெரிதுபடுத்துகின்றனர்.

உடல் முழுவதும் வியாபித்திருக்கும் நரம்பு மண்டலத்தின் சிகரமாக மூளை இடம்பெறுகின்றது. மண்டைஓட்டினுள் (கபாலம்) மூளை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. தண்டு வடத்தின் நீட்சியாக மூளை அமைகின்றது. நரம்பு மண்டலத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு மூளை பொறுப்பாக இருக்கிறது உடல் உணர்வுகளின் இருப்பிடமாகவும் மூளை செயற்படுகிறது. சிந்தனை, நினைவாற்றல், கற்பனை போன்றவை மூளையில் உதயமாகின்றன. உடல் உறுப்புக்களின் அசைவுகளும தொழிற்பாடுகளும் மூளையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அசைவுகள் தசைநார்களுக்கு மூளையிடும் கட்டளைகள்மூலம் இயக்கப்படுகின்றன. இதயத்துடிப்பு, உடல் வெப்பம், சுவாசம் போன்ற தானியங்கிக் கருமங்களை மூளையின் வெவ்வேறு பகுதிகள் கட்டுப்படுத்துகின்றன.


மனித மூளையின் இரு கூறுகள் உடலின் வலப்பகுதி, இடப்பகுதிகளைக் கட்டுப்படுத்துகின்றன. இரு கூறுகளும் இடதுமூளை, வலதுமூளை என்று அழைக்கப்படுகின்றன. இயல்பாகவே எமது உடலின் வலப்பகுதியை இடது மூளையும் இடப்பகுதியை வலதுமூளையும் கட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக வலக்கண் பார்க்கும் காட்சி மூளையின் இடது பகுதியிலும் இடக்கண் பார்க்கும் காட்சி வலது பகுதியிலும் பதிவாகின்றன.

சராசரி மனிதன் நாளொன்றுக்கு 21,600 தடவை மூச்சு விடுவதாகச் சொல்லப்படுகின்றது. இரு நாசித்துவாரங்களாலும் மனிதன் ஒரேநேரத்தில் மூச்சு விடுவதில்லை. நான்கு மணிநேரம் ஒரு நாசித்துவாரத்தாலும் அடுத்த நான்கு மணிநேரத்தில் மறு நாசித்துவாரத்தாலும் நாம் மூச்சுவிடுகிறோம். இப்படியே நான்கு மணிநேரத்திற்கு ஒரு தடவையாக மூச்சுப் பாதை மாற்றம் அடைகின்றது. இது மூளையின் இடது, வலது பக்கங்களின் கட்டுப்பாட்டில் நடைபெறுகின்றது. மூச்சுப் பயிற்சி எனப்படும் நாடி சுத்தியில் நாம் இரு நாசித்துவாரங்களையும் மாறி மாறி அடைத்தும் திறந்தும் நன்மை பெறுகின்றோம். மூச்சுப் பயிற்சி மூலம் நரம்பு. மண்டலம், சுவாச மண்டலம், மனநிலை என்பன ஆரோக்கியம் அடையும். குருவின் வழிநடத்தலில் மூச்சுப்பயிற்சியைப் பயிலவேண்டும். மூச்சுப் பயிற்சி செய்யும் விளையாட்டு வீரர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். இடது நாசித்துவாரம் வலது மூளையாலும் வலது நாசித்துவாரம் இடதுமூளையாலும் இயக்கப்படுகின்றன.

இது மூச்சுப் பயிற்சியின் அடிப்படைத் தத்துவம். மூச்சுப் பயிற்சியை பிராணயாம என்று வடமொழியில் கூறுவர்.

மனித குலத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கினர் இடது கையர்களாகப் பிறக்கின்றனர். இவர்களில் பலர் பெற்றாரின் வற்புறுத்தலால் வலது கையர்களாக மாறுகின்றனர். இடது கையர்களின் வலது மூளை மிகவும் பலமானதாக இருப்பதால் இவர்கள் இடது கையால் எழுதவும் நாளாந்தக் கடமைகளைச் செய்யவும் தொடங்குகின்றனர். வலது கையர்கள் பெரும்பான்மையாக உள்ள இவ்வுலகில் இடது கையர்கள் தம்மைக் குறைவாக எண்ணலாம். இது தேவையற்ற வியாகுலம். அல்பேட் ஐன்ஸ்ரைன், சேர் ஐசாக் நியூற்றன் போன்ற விஞ்ஞானிகள் இடது கையர்களே. மகாத்மா காந்தியும் அப்படியே. லியனார்டோவின்சி என்ற பல்திறன்மிக்கவர் இடது கை நபராவர். அமெரிக்க அதிபர்கள் பலர், கிளின்ரன் உட்பட இடதுகையர்களே. இது இயற்கை, குறைபட ஒன்றுமேயில்லை. இடது கையர்கள் சிந்தித்துச் செயலாற்றும் திறன்மிக்கவர்கள் என்கிறார்கள் இது மிகவும் உற்சாகமளிக்கும் செய்தி.

நிமிர்ந்த இரு கால்நடை, நுண்ணிய கரும மாற்றும் கைகள், மூளைச்செயற்பாடு, மொழித்திறன், எவ்வகைத் தட்பவெப்பத்தையும் தாங்கும் சக்தி என்பனவற்றால், பிற விலங்குகளில் இருந்து மனிதன் வித்தியாசப்படுகிறான். பெரியமூளை பெரிய அறிவின் அடையாளமல்ல. யானையின் மூளை பன்மடங்கு பெரியது, ஆனால் மனித மூளைக்கு நிகராகாது. மனிதப் பரிணாம வளர்ச்சியின் காரணமாக எமது கால்களின் நீட்சி விமானமாகவும், கண்களின் நீட்சி தொலைக் காட்சியாகவும், குரலில் நீட்சி தொலைபேசி மற்றும் வானொலியாகவும், மூளையின் நீட்சி கணனியாகவும் இடம்பெறுகின்றன.



இருபதாம் நூற்றாண்டில் மூளை மற்றும் தலை மருத்துவம் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. புராதன கிரேக்க மருத்துவரான ஹிப்போகிரேட்டஸ் (HIPPOCRATES) “தலைக்காயத்தை அலட்சியப்படுத்தக் கூடாது. சின்னதுதானே என்று அசிரத்தையாகவும், நிலைமை மோசமாகிவிட்டது என்று கைவிடவும் கூடாது” என்று கூறியுள்ளார். தலைக்காயத்திற்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் நரம்பியல் அறுவை நிபுணரின் சேவை, செயற்கைச் சுவாசம் தரும் வசதி ஆகியன இருக்கவேண்டும் என்ற சட்டம் மேற்கு நாடுகளில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

தலைக்காயங்களால் ஏற்படும் மூளைப் பாதிப்புக்களை அவதானிப்பதற்கு கணனி அடிப்படையிலான ‘ஸ்கானிங்’ படப்பிடிப்பு இன்று பரவலாகப் பாவனைக்கு வந்துள்ளது. சிரி (CT) என்று சுருக்கமாக இது அழைக்கப்படுகின்றது. இது இரு சொற்களின் சுருக்கம் - COMPUTERIZED TOMOGRAPHY. தலையில் காயப்பட்டவர்களின் மூளையில் இரத்தக் கட்டிகள் (BLOODCLOTS) உருவாகி பெரும் உயிர் ஆபத்தை விளைவிக்கின்றன. தலையில் அடிபட்டவர்கள் தப்பிப்பிழைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ‘கிளாஸ்கோ கோமாஸ்கேல்’ (GLASGOW COMA SCALE) என்ற அளவை மூலம் பரிசோதனை செய்கிறார்கள்.

இப்பரிசோதனையில் 15/15 மதிப்பெண் வாங்கும் ஒருவர் பிழைத்துவிடுவார் என்று பொருள் 13/14 மதிப்பெண் பெறுபவரின் தலைக்காயம் சிறு காயம் (MINORINJURY) என்றும், 10/12 மதிப்பெண் வாங்குபவரின் தலைக்காயம் நடுத்தரம் என்றும், 8/9 மதிப்பெண் கடுங்காயத்தைக் குறிப்பிடும் என்றும் தலை வைத்திய நிபுணர்கள் தரப்படுத்துகின்றனர். எட்டிற்குக் கீழ் மதிப்பெண் வாங்குவோர். தப்புவது கடினம், 8/9 மதிப்பெண் வாங்குவோரை போராடித்தப்பவைக்கலாம் என்று தலைச்சிகிச்சை நிபுணர்கள் அனுபவரீதியாகக் கண்டறிந்துள்ளனர். விபத்து நடந்து ஒரு மணி நேரத்திற்குள் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டால் பிழைத்துக் கொள்ளும் சாத்தியம் கூடுதலாக இருக்கின்றது.

விபத்துத் தவிர்ந்த வேறு காரணங்களால் மூளைக்காயம் ஏற்படும் வாய்ப்புக்கள் உண்டு. இரு உதாரணங்களைத் தரமுடியும்.

01) **SUBDURAL HEMATOMA.** முதுமை அடைந்தவர்களின் மூளையின் பருமன் சுருங்கும் வாய்ப்பு இருக்கிறது. அப்போது கபால ஓட்டுடன் மூளை உரசும்போது இரத்தக் கசிவு ஏற்படலாம். உறையும் குருதி நீண்ட நாட்களின் பின் அல்லது உடனடியாகச் சாவுக்குக் காரணமாகலாம்.

02) **SHAKING HEAD INJURY** பெற்ற குழந்தைமீது ஆசை மேலிடப்பெற்றார் தம் மகவைத்தூக்கிப்போட்டு விளையாடும்போது குழந்தையின் மூளையில் காயம் ஏற்படுகின்றது. இது உயிரைப் பறிக்கலாம் அல்லது மூளைக்குறைபாடுகளை உடனடியாக அல்லது பிற்காலத்தில் தோற்றுவிக்கலாம். சதா அழுது கொண்டிருக்கும் குழந்தையைக் கடுஞ்சினத்தில் போட்டுக்குலுக்குவார்கள். இதுவும் ஆபத்தானதே.

எந்தவகையில் மூளைக்காயம் ஏற்பட்டாலும் வலிப்பு, அறிவிழப்பு, முடக்கு வாதம், பார்வைக் குறைபாடு, காது கேளாமை போன்றவை ஏற்படவாய்ப்பு உண்டு. தலைக் காயத்தில் பெரும்பகுதி கழுத்துக்காயத்தோடு தொடர்புடையது. உந்துருளி போன்றவற்றில் அடிபட்டு வீழ்ந்தோரைக் கவனமாகத்தூக்க வேண்டும். தவறானமுறையில் தூக்கினால் முதுகெலும்பு உடைந்து தண்டுவடம் சேதப்படலாம். இதனால் கைகால் வளங்காமல் போய் விடும். மூச்சுத்திணறி சாவடைய நேரிடலாம்.

‘மைண்ட்’ (MIND) எனப்படும் மனம் உடல் சாராதது. மனம் உடலின் எப்பாகத்தில் இருக்கிறது என்று கூறமுடியாது. ஆனால் அது மனிதனின் இயக்கு கருவி. மனம் என்பது மருத்துவ அறிவியலுக்கு அப்பாற்பட்டது என்ற நிலைப்பாடு மாறிவருகின்றது. குறிப்பிட்டவகை மனநோய் இருந்தால் மூளையின் குறிப்பிட்ட இடத்தில் பாதிப்பு இருக்கிறது என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக சைக்கியாட்ரி (PSYCHIATRY) எனப்படும் உளவியல் மருத்துவம் மாறத் தொடங்கியுள்ளது. நரம்பியலோடு இணைந்து அது கொக்நிற்றிவ் நியூரொலஜி (COGNITIVE NEUROLOGY) என்று பரிணமித்துவிட்டது. இருப்பினும் சைக்கியாட்ரி மனிதனை ஒருஇயந்திரமாகப் பார்க்காமல் அவனை உடல், மனம், ஆன்மா ஆகியவை ஐக்கியமான உருவமாகப்பார்க்கின்றது. பல மனநோய்கள் மூளை மற்றும் உடல் சம்மந்தப்பட்டவையல்ல. உணர்ச்சி பூர்வமான மனவெளிப்பாடுகள், மன அழுத்தங்கள், சமுதாய எதிர்பார்ப்புக்களுடன் ஒத்துப்போக முடியாமை போன்றவை காரணமாக மனநோய்கள் ஏற்படலாம். உளவியல் மருத்துவம் மறையும் வாய்ப்புக்கள் அரிது, வளரும் பிரிவு என்றே சொல்லவேண்டும்.

முதியோர்களின் மூளை உயிரணுக்கள் (CELLS) படிப்படியாக எண்ணிக்கையில் வீழ்ச்சி அடைவதால் அவர்களுடைய ஆற்றல் குறைவடைவதாக நெடுங்காலமாக மருத்துவர்களால் நம்பப்பட்டது. இப்போது, முதியவர்கள் சோம்பிக்கிடவாமல் கடும்பணியில் விரும்பி ஈடுபடும்போது பணிக்கு நிகரானமூளை உயிரணுக்கள் புதிதாக உருவாகின்றன என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டவிடயம்.

முதியோர்களைத்தாக்கும் இரு நோய்கள் பற்றி இங்கு குறிப்பிடுவது நயம் பயக்கும். ஒன்று மனித மூளையைத் தாக்கும் அல்ற்ஸ்ஹைமர் நோய். இது ஆங்கிலத்தில் ALZHEIMER'SDISEASEஎன்று இந்த நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடித்த ஜேர்மன் மருத்துவரின் பெயரால் வழங்குகின்றது. இதனால் பீடிக்கப்பட்டோரின் மூளை முற்றாகச் செயலிழந்து அதற்குரியவரைச் சடப்பொருளாக மாற்றுகின்றது. மூளைச் சிதைவு காரணமாக இந்த நோயர்கள் தம்மைக் கவனிக்க இயலாதநிலையில் இருக்கின்றனர். உடல் உறுதியாக இருப்பினும் இவர்கள் கடும்நோயாளர்களாகக் கணிப்பிடப்படுகின்றனர். முன்னாள் அமெரிக்க அதிபர் றொனால்ற் றேகன் கடந்த சில வருடங்களாக இந்த நோய்க்கு ஆளாகியுள்ளார். அண்மையில் கிடைத்த செய்திகளின் படி முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மாகரேற்தச்சர் இந்த நோயின் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த நோய்க்கான மருத்துவம் இதுவரை கண்டுபிடிக்கப்படவிலை.

அடுத்ததாக நரம்பு மண்டலத்தின் கட்டளை மையத்தைப் பாதிக்கும் PARKINSON'S DISEASE இடம்பெறுகின்றது. உலகின் 65 வயதுக்கு மேற்பட்டோரில் ஒரு வீதத்தினரை இந்த நரம்பியல் நோய் பாதிப்பதாக மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன. இந்த நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடித்த பிரிட்டிஷ் மருத்துவர் ஜேம்ஸ் பார்க்கின்சனின் பெயர் இந்த நோய்க்கு வழங்கப்பட்டுள்ளது. நரம்பு மண்டலத்திற்கு கட்டளையிடும் மூளைப் பகுதி சேதமடைவதால் கால், கை போன்ற உறுப்புக்களை இயக்கும் தசை நார்கள் வலுவிழக்கின்றன. இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களின் மூளை பாதிப்படையாமல் இருந்தாலும் உடலுறுப்புக்கள் வலுவிழக்கின்றன. இதன்காரணமாக இந்த நோயாளர்களைப் பராமரிக்கவேண்டிய கட்டாயத் தேவை இருக்கின்றது. தனது இறுதிக்காலத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்.

அறிவியல் பிரகாரம் மரணம் என்பது உயிரின் நிறுத்தம். ஆனால் மரணம் என்றால் என்னவென்று கூறும் வரையறைகள் வேறுபடுகின்றன. இதுபற்றியதொரு தர்க்கம் அறிஞர் மத்தியில் நிலவுகின்றது. சர்வதேச ரீதியாக ‘மூளையின் இறப்பு முழு உடலின் இறப்பிற்குச் சமம்’ மூளையில் மின்சார ஓட்டம் நின்றுவிட்டால் மரணமாகக் கொள்ளலாம் என்பது இதன் பொருள். மூளை இறந்தாலும் இருதயம் துடித்துக்கொண்டிருக்கும் என்பதால் இதுபற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மரணத்தை விஞ்ஞான பூர்வமாக ஆய்வுசெய்தோர் மூவகைக் கோட்பாடுகளை வரைந்துள்ளனர்.

01) மூளை மரணம் - மூளை மின்சார நிறுத்தம், மூச்சு இல்லை. இதயம் துடித்தால் பரவாயில்லை. அது மரணமே தான். இதை **BRAIN DEATH** என்பர்.

02) மருத்துவ இறப்பு - இதயத் துடிப்பு நின்றுவிட்டது. ஆனால் இன்னும் மரணம் நிகழவில்லை. இதைக்**CLINICAL DEATH** என்பர்.

03) உயிரியல் இறப்பு - இதயத்துடிப்பு நின்று 24 மணிநேரம் சென்றபின் உயிரியல் இறப்பு நிகழும். அப்போது எல்லா வகை உயிரணு நடவடிக்கைகளும் அந்த உடலில் நின்றுவிடும். இதை **BIOLOGICAL DEATH** என்பர்.

மனித மூளை மின்சாரத்தில் இயங்குகிறது. மூளை இயங்கும்வரை மனிதனால் மூச்சுவிடமுடியும், உணவைச் சீரணிக்க முடியும், நித்திரை கொள்ளமுடியும். மூளை இயக்கம் நின்றுவிட்டால் இவற்றைச் செய்ய முடியாது என்பதே மூளை மரணத்தை இறுதி முடிவாக ஏற்றுக்கொள்வதின் காரணம். ●

**அன்பரசு**

# பாதிக்கப்படுவது மாணவர்களே!

எங்களிடையே ஏன் பெரும் அறிஞர்களோ விஞ்ஞானிகளோ துறைசார்ந்த பெருவல்லுநர்களோ உருவாகுவதில்லை என்று ஒருதடவை ஒரு நண்பர் கேட்டார். அவரில் இப்படியொரு கேள்வியெழுந்ததே பாராட்டப்பட வேண்டியது. அதாவது இதைப்பற்றி அவர் சிந்தித்திருக்கிறாரே.

துறைசார்ந்து படிப்பதற்குரிய வாய்ப்புகள், வசதிகள் இருந்தாலாவது ஓரளவுக்கு எங்களிடையேயும் யாராவது சிலரேனும் ஒளி வீசக்கூடிய அளவுக்கு வரமுடியும். படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் ஆய்வதற்கும் பகிர்வதற்குமுரிய களவெளி எங்களிடையே சரியாக அமையப்பெறவில்லையே. பிறகெப்படி ஒளிமுகங்களைத் தேடுவது?

எங்களுடைய பாடவிதானங்களிலும் சமூக அமைப்பிலும் சுயசிந்தனைக்கும் சுய ஆற்றலுக்குமான வாய்ப்புந்துதல்கள் குறைவாகவே இருக்கிறது எனப்பொதுவாகவே பலரும் சொல்வதுண்டு.

அப்படித்தான் அந்தக் குறைபாட்டை நீக்கியெழுந்தாலும், அல்லது அக்குறைபாட்டினூடேயும் புதிதாக எதையாவது செய்ய வேணும் எனத் துடிப்போடு எவர் முயன்றாலும் அதற்கு கல்விச் செயற்பாட்டுச் சூழல் இடமளியாது.

கொடுமையிலும் மகாகொடுமையாகவும் மடமையிலும் மகாமடமையாகவும் இருப்பது இதுதான்.

விரிந்த சிந்தனை பரந்த பார்வை (மனப்பாங்கு) எதுவுமில்லாத இறுகிய இரும்புப்பிடிக்குள்ளேயே நமது கல்விச்செயற்பாடுகள் இருக்கின்றன.


இங்கே இப்போது ஒன்றை மட்டும் நோக்குவோம். போனமாதம் G.C.E O/L பரீட்சைப் பெறுபேறுகள் வந்திருந்தனவல்லவா? சித்திபெற்ற மாணவர்கள் இனி G.C.E.A/L படிக்கப்போகிறார்கள். ஆனால் இந்த மாணவர்களில் பலர் தாங்கள் விரும்பும் துறைகளைப் படிப்பதற்குரிய வாய்ப்புக்கள் எங்குமில்லை என்கிறார்கள். உண்மையில் தமது ஈடுபாட்டுத்துறையைத் தேர்வுசெய்வதற்குரிய சுதந்தரவெளி இங்கே இல்லை. வெளிநாடுகளில் ஆரம்பக் கல்வியிலேயே ஈடுபாட்டுத்துறையைத் தொடர்வதற்குரிய சுதந்திர வளவிரிவை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். எல்லாத்துறையும் இணைந்ததே சமூகவாழ்க்கை என்ற கருத்தோட்டம் அவர்களிடையேயுண்டு.

இங்கே வாய்பாட்டுத் தனமாகவே பல பாடசாலைகளிலும் பாடங்களின் ஒருங்கமைவுகள் இருக்கின்றன. பரீட்சையில் சுலபமாகச் சித்தியடைவதற்கென சிபார்சு செய்யப்படும் பாடங்களாகச் சில பாடங்களை மட்டும் பல பாடசாலைகள் ஒரு வழமைக்குட்படுத்தி வைத்திருக்கின்றன. இந்தச் சம்பிரதாயத்திருந்து அவை என்றும் மாறிவிடா.

கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் என்ற துறைகளைத் தவிர்ந்த பிறதுறைகளில் தமக்குப் பொருத்தமான பாடங்களைத் தேர்வதற்கு மாணவர்களுக்கு எங்கும் இடமில்லை. குறித்த பாடசாலைகளில் கேட்டால் அந்தப்பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் இல்லை என்பார்கள். ஆய்வுகூடவசதிகள் கிடையாது என்று சொல்வார்கள். மாணவர்கள் வேறு துறைசார்ந்த பாடங்களைப் படிக்கப்பொதுவாக விரும்புகிறார்களில்லை என்று கூறுவார்கள்.

கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் கேட்டால் எல்லாப்பாடங்களுக்குமுரிய ஆசிரிய வளம் போதாதென்று ஒற்றைச் சொல்லில் பதிலை முடித்துவிடுவார்கள்.

ஈடுபாட்டுப் பாடங்களை படிக்கமுடியாத நிலை மாணவர்களை சுருக்கி ஒரு வழமைக்குட்பட்டவட்டத்துள் அடைத்து மந்தத்தனமாக்கிவிடுகிறது. எங்களிடையே யாரும் புதிதாகச் சிந்திக்கவும் செயற்படவும் முடியாத ஒரு நிலைக்கு இதுவும் ஒரு வலுவான காரணம்.



கல்வியை அறிவார்ந்த தளத்தில் அதற்குரிய தெளிவுடன் அணுகத் தவறுவதன் விளைவே இது.

பல பாடசாலைகளில் உயர்தர வகுப்புகள் இருக்கின்றன. உயர்தர வகுப்புக்களுக்குரிய பாடங்களைப் படிப்பிக்கப்போதுமான ஆசிரியர்கள் இல்லாதபோதும் உயர்தர வகுப்புகளை எப்படியாவது நடத்திவிடவேண்டும் என்று அதிபர்களும் ஆசிரியர்களும் விரும்புகிறார்கள். சிலவேளைகளில் அந்தப் பாடசாலைகளுடன் தொடர்புள்ள பெற்றோரும் அப்படியே யோசிக்கக் கூடும். தங்கள் பாடசாலையிலுள்ள உயர்தரவகுப்பை இடையில் விட்டுவிட்டால் பின்பு அதனை அங்கே மீளவும் ஆரம்பிப்பதற்கு நிறையச்சிரமப் படவேண்டும் என்ற பயம் ஒரு காரணம். உயர்தர வகுப்பில்லாத பாடசாலை மதிப்பில் இறங்கியதாகக் கணிக்கப்படும் என்பது மற்றக் காரணம்.

ஆனால் போதிய ஆசிரிய வளம், ஆய்வுகூடவசதிகள் இல்லாது படிக்கும்போது அந்த மாணவர்கள் சந்திக்கின்ற சிரமங்கள் எப்படியாயிருக்கும் என்றவர்கள் சிந்திப்பதாயில்லை. அவர்களைப் பொறுத்த்

**வெளிவாசல்பாலன்**

வரையில் A/L வகுப்புடன் தங்களின் பாடசாலை இருக்கவேண்டும்: அவ்வளவுதான்.

சில பாடசாலைகளில் இரண்டு மூன்று பிள்ளைகளுக்காகவே பல ஆசிரியர்களின் வளம் செலவழிக்கப்படுகிறது. அதேவேளையில் பல பிள்ளைகளுக்கு அதே பாடத்துக்குரிய ஆசிரியர்கள் இல்லாத நிலை வேறுபாடசாலைகளில் இருக்கிறது.

பெரிய நிலப்பகுதியொன்றிலுள்ள ஒரே உயர்தரப் பாடசாலையின் குறைந்த பிள்ளைகளுக்கு மட்டும் கூடிய ஆசிரியவளம் செலவாகுவது தவிர்க்கமுடியாததுதான். ஆனால் ஒரு குறிப்பிட்ட சுற்றயலில் உள்ள பாடசாலைகளிடையே புரிந்துணர்வின் அடிப்படையில், மாணவர் நலன் நோக்கிய ஒழுங்குபடுத்தலுக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் திணைக்களமும் வரவேண்டும். விதிமுறைகள் சட்டம் அது இது என்ற வெறும் சாட்டுகளையும் காரணங்களையும் சொல்லிக் கொண்டு அவற்றின்பின்னே பதுங்கி விடக்கூடாது.

ஆசிரிய வளங்களுக்கும் ஆய்வுகூட வசதிகளுக்கும் ஏற்ற மாதிரி துறைசார்ந்த பாடங்களை ஒழுங்குபடுத்தலாம். சூழ்நிலைக்கேற்றமாதிரி வள ஒருங்கிணைப்புச் செய்து ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொருதுறை என வைத்தால் ஆசிரியவளம் செறிவாக இருக்கும். அவ்வாறில்லாமல் எல்லாப் பாடசாலைகளிலும் எல்லாத்துறையும் என்றால் பிரச்சினைதான். இதில் வெறுமனே கௌரவப்பிரச்சினையை மட்டும் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்தால் புதிய தலைமுறையின் கல்வித் திறனும் சந்தர்ப்பமும் அடிபட்டுப் போவதைத்தவிர வேறெதுவும்



ஆகப்போவதில்லை.

இதேவேளை மாணவர் விரும்பும் பாடங்களைப் படிக்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு அதிபர்களுக்கும் திணைக்கள அதிகாரிகளுக்கும் உரியது.

கடற்தொழில், விவசாயம், தொழில்நுட்பவியல், ஓவியம், நாடகமும் அரங்கியலும், வரலாறு, மனையியல், நடனம் என்று பல பாடங்களைப் பயிலவிரும்பும் மாணவர்களுக்கு அனுமதியுமில்லை; வசதிகளுமில்லை என்ற நிலை பல இடங்களிலுமுண்டு.

சில பாடசாலைகளில் குறித்த பாடத்தை கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இருந்தாலும் படிப்பதற்கு மாணவர்கள் விருப்பப்பட்டாலும் அதிபர்கள் அந்தப்பாடங்களைத் தவிர்க்கின்ற சந்தர்ப்பங்கள் இருப்பதையும் காணலாம். தங்களுடைய பாடசாலை, பொதுவாய்ப்பாட்டுத்துறைகளான கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகியவற்றில் மட்டும் அதிக மாணவர்களைக்கொண்டிருக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்தப்பாடங்களில் படிக்கின்ற மாணவர்களில் எத்தனைபேர் சித்தியடைகிறார்கள் ஏனையோர் பின்பு எப்படியாகிப் போகிறார்கள் என்ற அக்கறையெல்லாம் அவர்களுக்கிருப்பதில்லை. ஆனால், தங்களுடைய பாடசாலையில் இத்தனைபேர், இன்ன துறையில் படிக்கிறார்கள் என்ற பெருமைமட்டும் அவர்களுக்குக் கிடைத்தால் போதும். அது மட்டும்தான் அவர்களுக்குத்தேவை. உண்மையில் இதுவும் ஒரு நோய்க் கூறுதான்.

தொழிற்துறைப் பாடங்களுக்கான ஊக்குவிப்பு பொதுவாகவே எங்கும் மந்தம்தான். பெற்றோரிடமும் இது குறித்த ஆர்வமோ விழிப்போ இல்லை. பிள்ளைகள் இந்தப்பாடங்களைப் படிக்க வெட்கப்படுமளவுக்கு அந்தப் பாடங்களைப்பற்றிய குறைந்த மதிப்பீட்டை பாடசாலையிலேயே உருவாக்கியிருக்கிறார்கள். பள்ளிகளில் இந்த மாதிரிப் பாடத்தைப் படிப்பிக்கும் ஆசிரியரையும் மதிப்பிறக்கியே பார்க்கிறார்கள். (ஒரு ஆசிரியருக்குரிய மதிப்பு அவர் செய்கின்ற பணியினாலும் பண்பினாலும் வருகின்றது என்பதைவிட அவர் படிப்பிக்கின்ற பாடத்தின் அடிப் படையிலும் அவர் கற்பிக்கின்ற வகுப்பின் கணிப்பிலுமே இப்போது நோக்கப்படுகிறது)

சரியான விழிப்புணர்வையூட்டி மாணவர்களைப் புதிய பாடங்களில் ஈடுபடவைக்கும் நோக்குள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள்தான். ஆனால் அவர்களால், அந்தப் பிள்ளைகளைத் தொடர்ந்தும் அவர்கள் விரும்புகின்ற துறைசார்பாடங்களைப் படிப்பதற்குரிய வாய்ப்பையும் வளங்களையும் வழங்க முடியாதவர்களோகவே இருக்கிறார்கள்.

பாடசாலைகளுக்குரிய ஆசிரிய வளம் உட்பட சகல வளங்களையும் பகிரும்போது சரியான திட்டமிடலும் மதிப்பீடும் இருக்குமாயின் பெருமளவு சிக்கல்களை இலகுவிற் தீர்த்துவிடலாம்.

பொருத்தமான ஆசிரியர் இல்லை என்பதால் மாணவர்கள் பொருத்தமில்லாத பாடத்தைத் தேர்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தமுண்டாகிறது. இது அந்த மாணவர்களை தோல்வியில் கொண்டுபோய்ச்சேர்க்கிறது.

பரீட்சையில் சித்தியடைவது மட்டும் ஒரு மாணவரின் வெற்றி என்றோ பெறுபேறு என்றோ மதிப்பிடக்கூடாது. சித்தியடையாவிட்டாலும் குறித்த மாணவர் தான் கற்ற கல்வியறிவினூடாக தன் வாழ்வுக்குரிய அடிப்படைத் துறைசார் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத போது அந்தக் கல்வியின் பயன்யாது? பொருள்தான் என்ன?

பல பாடசாலைகளில் அந்தந்தப் பாடங்களைப்படிப்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் இல்லை என்கிறார்கள். இதை நன்றாக விசாரித்துப்பார்த்தால் அதிர்ச்சி தரக்கூடிய செய்திகள் பின்னே இருப்பதை அறியலாம்.

நல்ல தேர்ச்சியும் திறனும் உள்ள பல பட்டதாரி ஆசிரியர்கள் அவர்கள் படித்ததுறையை விட்டுவிட்டு ஆரம்பக்கல்விக்கும் இடைநிலைப் பள்ளிகளுக்கும் என நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு நியமிக்கும் போது உண்மையில் ஆரம்பக் கல்வியும் சரியாகப் போதிக்கப்படாது. இங்கே உயர்கல்விக்கும் ஆளிருக்காது. அதுவும் போதிக்கப்படாது.

விவரம்கேட்டால் அது மாகாணசபையின் நியமனம், நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை என்று சொல்கிறார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள். மாகாண சபையைச் சேர்ந்தவர்களிடம் விசாரித்தால், பட்டதாரிகளுக்கு நியமனம் கொடுக்கவேண்டும். ஆரம்பக்கல்விக்கும் ஆட்கள் தேவை.

இப்படியே தொடர்ந்து நீண்டுகொண்டுபோகிறது பிரச்சினை. நீண்டுகொண்டேபோகிறது மாணவர்களின் பாதிப்பு. அப்படி நீண்டு கொண்டே போகிறது எங்களிடையேயுள்ள மந்தத்தனமும் அறிவுப்பண்பும்.

வருடாவருடம் பல்கலைக் கழகங்களுக்கு கோரப்படும் தொகையில் முண்டியடிப்புகளும் போட்டிகளும் சில குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டும்தான்.


வரலாறு, சித்திரம், மனைப் பொருளியல், கடற்றொழில், விவசாயம் போன்ற பாடங்களுக்குரிய கோரலுக்கு எந்த மாணவர் தேர்வுமில்லாமல் அது வீணாகியே போகிறது. ஒரு பக்கம் சித்தியடைந்தும் பல்கலைககழகத்துக்குப்போக முடியாதநிலை. மறுபக்கம் இடமிருந்தும் அத்துறைகளில் இல்லாதோர் நிலை. இதுதான் சோகமான யதார்த்தம். யார் இதைப்புரிவார்? யாரிதை மாற்றுவார்? யார்இதற்கு பதில் சொல்வார்?

உண்மையில் சித்தியடைகின்ற எல்லோரையுமே உள்வாங்க வேண்டியது பல்கலைக்கழகங்களின் பொறுப்பாகும். ஆனால் எங்களுடைய நாட்டில் அவ்வாறு செய்வதற்குரிய நிதி அரசிடமிருப்பதில்லை. (அது யுத்தத்திற்கும் போலிச்சமாதானத்துக்கும் செலவழிப்பதா அல்லது இவ்வாறான முயற்சிகளுக்கு வழங்குவதா?) அப்படி நிதியளித்து அனைவரையும் உள்வாங்கினாலும் பின்பு அவர்களனைவருக்கும் எப்படி வேலைவழங்குவது? இப்போதே வேலையற்றபட்டதாரிகள் சங்கம் என்ற நிலை இருக்கின்றபோது.

இவ்வாறெல்லாம் இறுகிய வளையங்களை இன்னும் பலப்படுத்திக்கொண்டிருக்கும் வரையில் எப்படிவருவார்கள் அறிஞர்களும், விஞ்ஞானிகளும், வல்லுநர்களும்?

அதற்காக உலகின் எல்லா அறிஞர்களும் விஞ்ஞானிகளும் பள்ளிக்கூடங்களிலிருந்துதான் வந்தார்களென்றில்லை. ஆனால் அங்கிருந்த பள்ளிகளின் சுதந்திரத்தன்மையும் வாய்ப்புள்ள களங்களும் அவர்களுக்கு மேலதிக சந்தர்ப்பத்தையும் வசதியையும் அளித்தது என்பது உண்மை.

நாமென்ன செய்யப் போகிறோம் இனியும்?




## புதையல்

'ஆயிஷா' என்ற புகழ்பெற்ற கதையின் மூலம் பரவலான குறிப்பிடத்தகுந்த அறிமுகத்ததையும் கவனத்தையும் பெற்றவர் இரா. நடராசன். துடிப்பும் விவேகமும் நிரம்பிய ஒரு சிறுமி பாடசாலையிலும் சமூகத்திலும் பெறுகின்ற நெருக்கடிகளை வெளிப்படுத்திய 'ஆயிஷா' சிறுவர் மனவுலகை பரந்த தளத்தில் அறிமுகப்படுத்தியுமிருந்தது. 'ஆயிஷா' பின்னாளில் சிறந்த படமாகவந்து பல விழாக்களில் பாராட்டையும் பரிசுகளையும் பெற்றது.

விஞ்ஞானம் மற்றும் சமூகவியலில் அதிக ஈடுபாடுடைய இரா. நடராசன் 'மதி எனும் மனிதனின் மரணம் குறித்து' என்ற இந்தக்கதையின் மூலம் நாங்கள் எதிர்பார்த்திராத ஒரு புதிய பரப்பை எங்களுக்குக் காண்பிக்கிறார்.

வடிவத்திலும் பொருளிலும் வெளிப்பாட்டிலும் புதுமை நிரம்பியகதை இது.

# மதி எனும் ஒரு மனிதனின் மரணம் குறித்து



**இரா. நடராசன்**

(01) Name : (அத்தனையிலிருந்தும் மீட்டு வைக்கப்பட்டிருந்த அந்த பெயரை - ஒருவருமே பற்றுவைக்காத துரதிர்ஷ்டமான அதைகிழட்டு மருத்துவனின் முரட்டுக்கைகள் பதிவு செய்தன) Mathi (இனிஷியல்? உனது விருப்பப்பாடுகள் குறித்த அக்கறை இப்போது எழப்போவதும் இல்லை. இருக்கும்போது எழுந்ததும் இல்லை. கைவிடப்பட்ட உனது நியாபக நியாயங்கள் பரிசீலிக்கப் பட்டதே இல்லை. இனிஷியல் அற்றோர் ஆணாய் இருந்தால் அனாதையாகவும் பெண்ணாக இருந்தால் விபசாரியாகவும் நடத்தப்படும் ஒரு நாட்டில் இரண்டுமற்ற ஓர் பிறவியாய் பிறந்த குற்றம் உன்னை இறந்த பின்னும் துரத்துகிறது. கனகராசு! அப்பா. அவர் மாதிரி மனிதர்கள் அபூர்வம் என நினைத்ததுண்டு நீ. ரொம்ப சின்ன வயசில் உன்னை ஆரத்தழுவிக் கொஞ்சிய அப்பா, வீடு திரும்பும் போது மூத்தவனுக்கு என்று ஏதேனும் தின்பண்டம் ரகசியமாய் தந்த அப்பா. அபூர்வமானவர். அம்மா இல்லாதவனென்பதற்காக உனக்கே உனக்காக (எங் குழந்தைக்காக ஒத்துக்கிறேன்) ரெண்டாம் கல்யாணம் செய்து கொண்டுவிட்டு அதன் பிறகு நாலு பிள்ளை பெற்ற அப்பா... நீ ரெண்டுமற்ற பிறவி என்றதும் வீட்டை விட்டு விரட்டிவிட சித்தி உதவியை நாடிய அப்பா. வீதி ஆட்கள் அத்துனை பேரையும் உன்னை கேலி செய்யவும் வேலை வாங்கவும் அனுமதித்த அப்பா... எல்லாவற்றிற்கும் மேலாய் "அலி புகுந்த வீடு உருப்பிடாது" எனும் ஜோஸ்யன் பேச்சை நம்பி விஷம் வைக்க ஒப்புக்கொண்ட அந்த அப்பா. அவரது பெயர் எழுத்தை, நீ விரும்பவே விரும்பாத அதை தெளிவான அழுத்தத்தோடு அவர் எழுதினார்)K

(02) Male/Female:- (நமக்கென்று பிரத்யேக கழி வறைகளோ, இடுகாடுகளோ இல்லாத இந்த நாட்டில் இந்தக் கேள்விக்குக் குறைச்சல் இல்லை. இடைநிலை பிரஜைகள் அலிகள் என்றே பொதுப்பெயருக்குக்கீழே - குறைந்தபட்ச இனமான அங்கீகாரம் அற்ற பெயருக்குக் கீழே- வீழ்த்தப்பட்டோம். ஏய்..மதி உனக்கு ஞாபகம் இருக்கிறதா, பத்து ரூபாய் கொடுத்து உள்ளே அழைத்து அச்சாபீஸ்நாய்கள் உன்னைப் படுத்தியபாடு "எப்படி இருக்கும்னு.. பாத்திரலாம்" சரி. உனக்குப் புரிகிறது "ஏய் ... காட்றா... இன்னொரு பத்து ரூபா...தாரேன்" அய்யோ மதி. நீ எப்படி அவமானப்பட்டாய். ஈவிரக்க மற்ற அக்கிரமக்காரர்கள். "காட்றா... அலி..நாய்" புடனியில் விழுந்த அடியை நினைத்துக் கொள்கிறாயா, மேலும் மேலும் பின்னோடுகிறாய். மிஞ்சியது சுவர்... மற்றும் பல ஜோடி விழிகள் "மட்டும் இருக்குதுடா அன்றைய இரவு முழுதும் அவமானத்தால் சுருங்கிப்போய் அழுது கதறினாயே, உனது வாழ்வெங்கும் எத்தனை முறை மனிதர்கள் உன்னை விக்கித்து அழவைத்திருக்கிறார்கள் எத்தனை முறை கூட்டங்களுக்கு அஞ்சி ஓடி ஒளிய வைத்தது. வாழ்க்கை நீ ஒருவன் நீ ஒருத்தி ஒருவன் மற்றும் ஒருத்தி. மய்யத்திலிருப்பது தத்துவமாய்வாழ்வது. பாலற்ற நிலை ஒரு ஊனம் போலத்தான் என்றாலும் மதி, சட்டப்படி நீ ஆண் அல்லது பெண்ணாகவே நடத்தப்பட முடியும். வரலாறெங்கும் எவ்வித பங்களிப்பும் இன்றி அலிகள் வரலாற்றைப் புறக்கணித்ததன் மொத்தகாரணமாய் உனது உண்மை நிலையை கேலிச்சிரிப்பில் புதைத்து விட்டு அவர் எழுதினார்.) Male.

(03) Age: (நீ பிறந்த போது மதி... அன்றலர்ந்த ரோஜா குவியலைப் போல காணப்பட்டாய். ரத்தினக் கம்பளம் போல பளபளத்த உனது விழிகள். உனது மேனியழகுக்கு உரம்போட்ட அம்மா. எப்பேர்ப் பட்டவள் அம்மா? மிருதுவிலும் மிருதுவான தேகவாசியான அம்மாவை தேவதைகள்தான் உன்னிடம் அனுப்பி வைத்திருக்கவேண்டும். அப்பாவின் குடியும் உதையும் உருக்குலைய வைத்த போதும் புன்னகை மாறாத, ஒருநாளும் ஏசாத, குரலெழுப்பி சத்தமிடாத பிறவி. அவள் இருக்கும்வரை மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. எப்படியெல்லாம் உன்னை சகித்துக் கொண்டாள் அவள்? இதோ அம்மா. நீ பார்த்துப் பார்த்து வளர்த்த மேனி. எப்படியெல்லாம் ஆகிவிட்டது அம்மா. அலிகள் அழமாட்டாதவை என்ற பொய்களை மீறிய பீறல்கள் உன்னுள்ளிருந்து வெடித்தஇரவுகளை என்ன சொல்வது? அம்மா வரைந்து வைத்துவிட்டுப் போன அற்புத ஓவியமான உன்னை மூடர்கள் சிதைத்தனர். வயதும் வருடமும் என்ன கொண்டு வந்துவிட்டன உனக்கு. எப்போதும் தனது கோர முகத்துடன் வருடங்கள் உன்னை வேட்டையாட வில்லையா? உனது இருப்பிடத் தனிமை வாசத்தின் கூக்குரல்கள் வெளிஉலகை எட்டியதே இல்லை. மங்கும் இருளில் ஒருநாள் உனது அறியாவயதில் அப்பா சம்மத்துடன் கூட்டமாய் வந்து அழைத்துப் போனவர்கள் கோயில் அலிச் சடங்கு செய்து வைத்த வலி நெஞ்சைப் பிழிந்த வருடம் முதல்... ஏய் மதி.... வீதி வீதியாக அகன்ற கைகளை அலங்கோலமாய் தட்டியபடி சினிமா பாடல் ஒன்றை அபசுரம் பிடித்தபடி... "சனிக்கிழமை ஆய்ட்டாலே இந்த சனியனுங்க மூஞ்சியிலயா முழிக்கணும்" கடைக்காரர்களின் எரிச்சல்கள்... "நான் சொல்லுரத செய்யீரீயளா... காசு தாரேன்" தட்டில் சேரும் சில்லறைகளுக்க்ாக எதற்கும் தயாராகும் எங்கள் கூட்டம். சனிக்கிழமைதோறும் கிடைக்கிற பங்கை அடித்துப் பிடுங்கும் சித்திக்காரி. பழைய சோறும் புளித்தமோரும் அழுகிய பழங்களும். ஆனால் சனிக்கிழமை காசில்லா விட்டால் அதுவும் இல்லை உனக்கு. ரேஷன் கடைகளிலும் மாம்பழக் கூடைகளிலும் எடுப்பு வேலைகளிலும் புதைந்த உனது வருடங்கள் உன் மீது புழுதிவாரிப் பூசி, கம்பால் அடித்து, சூடு வைத்து அவமானங்களை முதுகில் ஏற்றிவிட்டு கூவிக்கதறும் ரத்தமயமான இரவுகளின் மொத்தக் கூக்குரலையும் புறக்கணித்து அவர் எழுதுகிறார் எனது வயதை) Forty

(04) Nationality:- (இந்த நாட்டில் புகைபிடிக்கும் அதிகாரம் ஆண்களுக்கு மட்டுமே உள்ளது. நெளிவு சுளிவு இன்றி சாகசமுமில்லாது பெரும்பாலும் அசடுகளாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களே பெண்களுக்கு வந்து வாய்க்கின்றன. யாருமற்ற நிலையில் வேறொருவன் நிழலில் வேறொருத்தியாக காலந்தள்ளுதல். அசட்டையாக இருந்துவிட முடிகிறதா. பாதுகாப்பற்ற நிலை. சூசகமாய் புரிந்து கொள்ளுதலும் பக்குவப்படாததாய் நடித்துக்கொண்டிருப்பதுமான பெண் வாழ்க்கை. தீப்பெட்டி ஆணின் கையில் இருந்தால் புகை பிடிக்கவும் பெண்ணில் கையில் இருந்தால் அடுப்பெரிக்கவும் அர்த்தப்படும் நாட்டில் அதிகம் அருவருக்கப்படுவது அலிகள். ஆண் பெண்ணை அடிமை செய்து வரும் வம்சாவளி. வம்சாவளி சரித்திரம் உடையவர்களே... ஆண்களே... அதற்காகப் போராடும் பேதைப் பெண்களே. கேளுங்கள் புதியவனாய்/வ ளாய் இல்லாமல் போக்கடவதான உங்கள் நிலை பரிதாபமானது. முதலிலிருந்து தொடங்காத, . வாழ்க்கை வம்சாவளிகளின் பாரமற்றவர்கள் நாங்கள். ஒவ்வொரு அலியும் புதிதாய்ப் பிறந்து புதிதாய் வாழ்ந்து வம்சப்பழசை பூசிக்கொள்ளலாமல் புதிதாகவே செத்தும் போகிறான். ஆனால் என் ப்ரிய மதி, ஆணாக உருமாறி புகைக்கவும் அதிகாரம் படைத்த அலிகள் பெண்களைவிட ஆகத் தீவிர விடுதலையை அனுபவித்து விட்டதாக கருத முடியாது.

கல்லூரிச் சம்பவங்களை எங்ஙனம் இருட்டடிப்பு செய்வது? பாழ் மூலையில் அந்தக் கல்லூரியின் முதுகில் அமைந்தகுறிப்பிட்ட சுவரில் இன்னமும் கதறுகின்றன அந்த வார்த்தைகள்.. நீ காதலித்தவன் அந்த சுவரை இன்னமும் நக்கிக்கொண்டிருக்கும் அவனது பெயர் அதன் நாக்கு போல அங்கு இன்னமும் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஏன் அப்படி செய்தாய் மதி? உனக்கே புரியாத உன் இருப்புக்கொள்ளாத தன்மை. அவனை அவன் விருப்பத்திற்கு எதுவும் செய்ய ஒப்புக் கொண்டாய் அல்லவா. காசுக்காகவா, தோழமைக்காகவா..பின் வேறு எதற்காக மதி? உனக்குள் உன்னை அலைக்கழித்த முனையற்ற உணர்ச்சியின்மையை அவன் மீது அப்பிவிட அலைந்தாய். வசப்பட வந்தவனின் உடன் வந்து ஒளிந்த தீ நாக்குகள். கூனிக்குறுகிப் போய் நீ ஓடிய திசையில் உன்னைத் துரத்தியகேலிப்பூசப்பட்ட கோர வாசகங்கள். யாவரும் யாவர் முன்னும் உன்னிடம் கேட்கத் தொடங்கினார்கள். "இதுக்கு-ன் சிகரெட் வேணுமாமே?" அய்யோ மதி, நீ ஏன் அதற்காக அவமான மடையவில்லை. சொல்...உன் குறித்த அந்த செய்தி வாசகம் சுமந்த சுவரை மாம்பழம் விற்கும் வாசலாய் சாம்பல் பூத்த உன் கண்கள் ஏற்றதுஏன்? ஊர் முழுக்க பணிவிடை செய்து அவமானமும் முகச்சுளிப்புமே பிரதிபலனாய் பெறும் நம் போன்றோர் வாழ்ந்தால்/செத்தால் யாருக்கு என்ன. உலகின் மிக நீண்ட அரசியல் சட்டம். சட்டத்தின் முன் ஆணும் பெண்ணும் சமம் (ஆண்கள் சற்று அதிகமாய் சமம்) அலிகள்? அது குறித்து அக்கறைப்பட அவகாசமற்று இருந்த அவர் அவசரத்தில் பதிவு செய்தார்.) Indian

(05) Date and Time of Admission:- (மாயமொழித் தராசு ...ற்றேதலை சாய்க்கிறது. லிங்கத் தானக் கோயில் அலித் திருவிழா. "ஆண்களும் நமக்குள்ளே பெண்களும் நமக்குள்ளே" ஆதிப்புலவன் மைந்தன் ஆனந்தக்கூத்தாடிய தலம். ஒவ்வொரு ஆண்டும் போலவே என் ப்ரிய மதி... பெண்ணாகி மணமுடிக்க மாயத்தாலி. கூத்தாடும் கூட்டம். நீ பெண்ணாகக்கடவாய். உனக்குள்ளான பெண் அழகிய சொரூபிணி. ஆண்களில் வந்திருந்தோர் தாலியுடன் நாக்கையும் தொங்கவிட்டு அலைந்திருந்தோர் உன்னை கண்டதும் கட்டுண்டோர். போட்டா போட்டியில் நூற்றுக்கணக்கில் வசூலானது உனது மானத்திற்கான விலை. கிழக்கு தெற்காக நீண்டு கிடக்கும் வண்ண வண்ண அலிக்கூட்டம் தனது தனிப்பெரும் கலாச்சார ஓலத்தால் நவீனயுகத்தின் முகத்திரையை விலக்கி அதன் கொடூரத்தை சிதைத்தது? வசுதாவும் நானும் உன்னைக் கட்டிக்கொண்டோம். உனது வசூல் தன்மையை மீறிப் பீறிட்ட ஒழுங்கீனம். நாகரீகத்தை நசுக்கிப்பிதுங்க வைத்த சடங்குகள். பாருங்கள் உலகத்தீரே, துருப்பிடித்த வேட்டைத் துப்பாக்கியாளர்களே பாருங்கள். எங்கள் முகமும் மனித முகம் தான். உங்கள் மாற்று உடலாளர்களான நாங்கள் உங்கள்ளை வெறுப்பதேயில்லை. நீங்கள் அருவருப்பான செயல் செய்பவர்களாக பயன்படுத்தி தூக்கியெறிந்து விடுகிற ஆணுறையாக எங்களைப் பயன்படுத்தினாலும்... உடல் அலுக்க வலிக்கப் பிழிந்தாலும் மனம் நொந்து குலுங்கும்படி அவமானப்படுத்தி அனுப்பினாலும் நாங்கள் உங்கள் மீதான நேசத்தை விட்டொழிக்க ➥

முடியாதவர்கள். ஒரு முனையாளர் களான ஆண்களே... பன்முனை சிந்தனாவாதிகளான பெண்களே. முனையற்ற, முனைப்பற்ற நாங் களும் மனித சமூகத்தில் அடக் கம்தான். கைதட்டி, ஆர்ப்பரித்து தழுவித் தழுவி... தன்னிலை மறந்து பூவாய் விரிந்து இறுதி உச்சமாய் மார்பில் வயிற்றில் அடித்துக் கொண்டழுது புதிய அலிகளை சேர்த்து திரும்புதல். ஆண்டில் ஒரே ஒருமுறை அலி அலியாக முழு சுதந்திரத்தை அனுபவிக்க விடப்படும் அந்த நாளில் நீ உனது இன்னுயிரை இடத்திற்கு வரும்படியான அந்த கோரச் சம்பவம் நடந்தது. உனது தகப்பனின் மரணத்தேதியை தள்ளிப்போடவேண்டுமானால் உனது மரணத்தேதி உடன்வர வேண்டுமெனும் ஒப்பற்ற கற்பனையை தனது திருவாய் மலர்ந்து ஜோசியன் கக்கியது நடந்தேவிட்டது.

எப்பேர்ப்பட்ட பிறவி நீ. தம்பிகளும் தங்கையுமான வீட்டில் ஒரு மிருகத்தை விடக் கேவலமாய் நடத்தப்பட்டாய் அல்லவா மதி. நண்பர்கள், புதியவர்கள் வருகைக்காக உன்னை எத்தனையோ நாட்கள் பல மணி நேரங்கள் கழிவறையில் அடைத்தவர்கள். வீட்டில் விசேஷம், பண்டிகை என்று வேலையெல்லாம் வாங்கிய பிறகு "நாலு மனுசங்கமின்னாடி எதுக்கு?" என்று விரட்டி அடித்தவர்கள். இருபது வாளி தண்ணி வந்தாதான் சோறு என்று உழைப்பைப் பிடுங்கியவர்கள். ஆனால் அத்தனைக்குப் பிறகும் மதி நீ அவர்களோடு ஒட்டிக்கொண்டிருந்தாய். ஏன் அவ்வாறு இருந்தாய். சனிக்கிழமை வசூல் பணமும் இன்னும் எவ்வளவோ விதங்களில் நீ கொண்டு வந்த பணமும் இல்லாவிட்டால் அவர்கள் எங்கே போயிருப்பார்கள்.

எவ்வளவு மோசமாக எல்லாம் உழைத்திருக்கிறாய். யோசித்தால் வாசித்தால் போதாது. வாழ்ந்தால் தெரியும் அந்தக் கொடிய வாழ்வை. கையில் புணையப்பட்டங்கள், இடுப்பில் தோல்பை, கைதட்டும் தூரத்தில் ரிக்ஷா. "அலி மாமா..புதுசா இருந்தா சொல்லு" என்று கெக்கிக்கும் ஆண்குறிகள். புத்தி சாலிகள் ஆண்கள். புத்திசாலிப் பெண்கள். ஒருவருக்கு தேவை. ஒருவருக்கு பிழைப்பு. பலமாய் மதி மிதிபட்டு அவதியுற்ற உனது நாட்கள். போலீஸ் உதைகள். ஆள்வராத ராத்திரிகளில் வேசிகள் வழங்கும் செருப்பு, விளக்குமாத்து அடிகள். பிசாசுகள்..முடை நாற்றம் வீசும் இந்த சமூக அசிங்கத்தில் மலத்தில் விழுந்து எழுந்து நீ கொண்டு வந்த காசு மட்டும் இனித்தது சித்திக்காரிக்கு, அப்பாவுக்கு, எல்லாருக்கும் லிங்கத்தான கோவிலிலிருந்து நீ திரும்புவதற்குள் உருவாகி இருந்தது ஒரு திட்டம். அய்யோ மதி... காணச் சகிக்காது தனக்கு ஊர் விட்டுப்போன அப்பா. இனிப்பான உணவில் கலக்க வேண்டியதைக் கலந்து பொறுப்பான தாய்போல உனக்குத் தந்த சித்திக்காரி. சூழ்ந்து சூழ்ந்து உன்னைத் தாக்கிய வாழ்க்கை தனது உச்சக்கட்ட சித்திரவதையையும் தொடங்கியது. பின்னணி அறியாத அவர் கேஸ்ஷீட்டை சரி பார்த்து எழுதுகிறார்)Oct, 35.45Pm

(06) *General Madical Complaints When admitted:-* (உன்னைப் பழுது பார்க்க முடியாதபடியான ஒரு கால அவகாசத்தை எடுத்துக்கொண்ட உனது முதல் தம்பி அறிவானி. மெத்த படித்தவன் அல்லவா ஆனால் அவர்கள் எப்படி நடித்தார்கள் "கோவில் போன இடத்தில் என்னத்த சாப்பிடப்பாநீயி..." எனப் பதறிய சித்திக்காரி.. "அண்ணே.. அண்ணே... எங்க எல்லாத்துக்கும் துணிமணிங்க எல்லாம் வாங்கிட்டு வந்துட்டு இப்புடி படுத்திட்டயே அண்ணே..." என்று கூப்பாடு போட்ட உன் தங்கை ஏய் மதி.. உனக்கு ஞாபகம் இருக்கிறதா.. உன்னைத் தேடி நம் நடுநிலை கூட்டம் ஒரு சனியன்று வந்தபோது உனக்கு உடல்நிலை சரியில்லை. எப்பேர்பட்ட கூட்டம் கூடிவிட்டது! உன் மீது எத்தகைய மரியாதை நமது கூட்டத்திற்கு உனக்காக உயிரைக் கொடுக்கக்கூட தயார் என்று வசுதாவும் காஞ்சனையும் எத்தனை தடவை அன்றைக்கு அழுது கதறினார்கள். ஊரார் சத்தம் தாங்காமல் விரட்டி அடிக்கும் வரையில், உனது உடல்நிலை ஓரளவு தேறிடும்வரை... ஓ..நம் மனிதர்கள் எவ்வளவு உன்னதமானவர்கள். நூறுதடவை சண்டைகள் வந்தாலும்.. எத்தனை பிரச்சினையிருந்தாலும் ஓடோடி வந்து பதறிய அவர்கள் தான் உனது உண்மையான உறவுகள். குடும்பம் ஆண் சமூக அடையாளம். அதை மீறி உறவாடல் அலிகளின் முத்திரை. ஆனால் உனது தங்கை இத்தகைய சதியை அறியாள் அவள்தான் பாவம், நிரம்ப அழுது தவிக்கப்போகிறாள். உனது அருமையை - எத்தனை மோசமாக உன்னை நடத்தியிருப்பினும் சரி - அவள் அறிந்தவள்.. அவனுக்கு என்ன... என்ன... என்று மருத்துவர்களிடம் பதறிக் கொண்டிருந்த அவளுக்கு சொல்லப்பட்டதை அவர் மீண்டும் எழுதினார்) *Poisoning; giddyness; unconsciousness*

(07) *State of the Boby :-* (மரணம் என்பது கட்டாய முடிவாய் திணிக்கப்பட்டுவிட்ட இந்த பூமி தான் இழுத்துக் கொள்ளும் உடல் உயிர்களின் சுய பாரம்பரியக் கணக்குகள் இல்லாதது. புதிய குதூகலத்துடன் மரணத்தை புன்னகை மாறாத ஈரமுகத்துடன் எதிர்கொள்ளவும் அதனிடத்திலும் வாழ்வின் மகிழ்ச்சியைக் காணவும் அலிகளால் முடிகிறது. உன்மத்தமான பியானோவாதிகள் சைபீரிய பனிக்காட்டில் மரணத்தை சந்திக்க நேர்ந்தபோது அலிகளாக உணர்ந்து கூடிப்பாடினர். என கதைகள் உண்டு. ஒரு திரியின் வழியே வழிந்து ஓடும் ஒளியின் கற்றை போலான இந்த வாழ்வில் மரணம் மட்டுமே நிச்சயிக்கப் பட்டது. ஒரு அலி இறந்து போன செய்தி உனக்குச் சொல்லப்பட்டநாள் நினைவிருக்கிறதா மதி... அலிகள் இறந்தால் புதைப்பதா? எரிப்பதா? தனிச் சடங்குகள்நமக்கு இல்லை. ஆணாகவோ பெண்ணாகவோ இயற்கைக்கு எதிராய் பாவித்தல் நடக்கும் மரணவீடுகள் அவை. அந்தச் செய்திக்கான பிறவி பெண் உடையில் செத்துப்போயிருந்தது. அந்த சாதிக்கார சட்டப்படி எரிப்பதென தீர்மானித்தனர். அழைப்புக்கு பதில் அளிப்பது போல அதே நாளில் சற்றேறக் குறைய அதே வீதியில் வெறொருவனும் இறந்து போனான். ஆணைஎரித்த பின்தான் அந்த சுடுகாட்டில் வேறொரு மூலையில் அலியை எரிக்கலாமென்று எதிர்ப்பு கிளம்பியது..மதி... வாழ்க்கையிலேயே முதன் முறையாக அலியாகப் பிறந்ததற்காக நாம் கண்கலங்கிப்போனோம்... செத்துப் போன அலிகளின் உடல்கள் யாருக்காகவோ அழைப்பு விடுவது போல இருக்கும்...)

*slightly blueish and sweaty Brain. Lungs and small intestine highly damagad.*

(08) *If Poisoned, Nature of poison:- Chemical Poison Oral induction.*

(09) *Treatment Given:-* ("என்னப்பா... கேட்டியா..?"

"கேட்டாச்சு சார்.. உடனே எரிச்சிடறாங்க..."

"நல்லதாப்போச்சுபோ. அப்போ ஒரு கால் போட்டு வந்து ட்ரான்ஸ்பிளான் டேஷனுக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லு...பார்ட்டி எங்க.. இருபது நிமிசத்துல வரணும்.

"சரிங்க சார்.."

"டேய்... அம்பது... தெரியுதா..போ"

"அலியோடதாச்சுங்களே..."

"பயித்தியம்... அலியும் மனுசப் பிறவிதான்டா..போய் சீக்கிரம் கூப்பிட்டுவா..") *First Aid Only.*

(10) *Date and Time of Death:-*(ஒற்றை ஆந்தையோ அல்லது தனித்த நாயோ ஓலமிட்டால் மரணம் நிச்சயிக்கப்பட்ட வீதிகள். நாய் அழுவது? சரி...நான் என்ன சொல்ல நாய்களுக்கும் ஆந்தைகளுக்கும் சிரிக்கத் தெரியாது. ரோமாபுரியின் பழைய மதத்தில் சிரிக்கும் நாய் கடவுள்கள் உண்டு. காஸ்கினோ கடவுள் அலி. ரோமாபுரி மதம் அலிகளை மதித்தது எனினும் நாய்கள் அழுவது சரித்திர முக்கியத்துவம் பெறுவது நமது வீதிகளில்தான் மதி... காலவெளியில் ஒரு புன்னகையாய் சுற்றி வந்த நீ... கடந்து வந்த பாதை எத்தனை கடிது. ஒரு கிழநாய்க்காக உன்னையா பலியிடுவது... இதற்காகவா... எல்லாமனிதர்களின் மீதும் அப்பழுக்கற்ற உனது அன்பை பொழிந்தாய் நீ... சாலை முனையில், பேருந்தில், வீதிகளில், தெரிந்தவர் இல்லங்களில் என்று எங்கேயும் எப்போதும் யாருக்காவது ஏதாவது செய்துவந்தாயே.. நன்றி கெட்டவர்கள். உனது உழைப்பிற்குப் பரிசளித்து விட்டார்கள். தாகம் தாகமென்று தவித்து நீ சாக கைவிரித்து உனக்கு கோணல் முகம் காட்டிவிட்டார்கள்)Oct, 3/6.35P.M


(11) *Nature of Death:-* (உன்னுடைய மரணத்தில் இருக்கிற ஒரே நல்ல விஷயம் உன்னை அவர்கள் விஷம் வைத்துக் கொன்றது உனக்குத் தெரியாது என்பதுதான்... அந்த அளவு உனக்கு யோசனை வரவில்லை. "அம்மா...இதோ அம்மா.. விரட்டி விரட்டி அடித்தவர்களிடமிருந்து ஓடி ஓடி ஒளிந்த உன் பிள்ளை..இப்போது வாழ்க்கையிடமிருந்தே விரட்டி அடிக்கப்பட்டு விட்டேன் அம்மா.." ஆடைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் இந்த பாசாங்குவாதிகளுக்குத் தெரியாது மதி... நான் ஜோசியனை சந்தித்ததும், உண்மை அறிந்ததும். நம் மனிதர்கள் இருக்கிறோம். இந்த உலகின் நாலாந்தர பிரஜைகளான நாம் என்னசெய்யமுடியும் என்பதை இவர்களுக்குக் காட்டிட.. இப்போது என்ன? கறுத்துத் தொங்கும் இரண்டு விரைகளுக்குச் சொந்தக்காரனான இந்த கிழட்டு மருத்துவன் சம்பாதித்த பணத்திற்கு ஏதாவது கிறுக்கட்டும் விடு... *Suicide* ●



## உன் கனவுடன் இன்றும்

அன்னை பூவதி...
எம் மனதினில் வாழ்ந்திடும் மாவதி
நினைவிலடங்கா வரம்பு
வாயெடுத்துந்தி போற்றிடும் தெய்வம்
தியாகத்தின் முதல் பெண் வடிவம்.
ஆயிரம் மனங்களில்குடிகொண்டு
வாழ்ந்திடும் தீபம்
மண்ணினில் வாழும் யாவரும் உயர்வாய்
நித்தமும் வாழ்ந்திட நினைத்த செம்மல்.
பாரத தேசமே என்னன்று சொல்லு...?
ஆயிரம் நாட்களாய் விடைகண்டிட
துடித்த வேங்கை
மாமாங்கி வீதியில் உன் உடல் சோர்வு
அகில தேசமே என்னன்று வியப்பு?
சிங்கள தேசமும் துடிப்புடன் நடப்பு.
அகிம்சை ஆயுதம் தாங்கிய சிரிப்பு.
துடித்தும் மேனி, துவண்டதும் பூமி.
ஆயிரம் மனங்களில் நின்று இறுதி
மூச்சது பிரிந்தது கண்டு
கலங்கிய மேனியும் துவண்டு
இன்றும் நடக்கிறது பயணம்.
உன் கனவு சுமந்து.

ம.அருள்யோண்சன்



## மனதைத் தொட்டுப்பார்

உன்மனதைத்தொட்டுப்பார்!
உனக்கே அது விளங்கும்
'வள்'என்று பாயும் நாயும்
வாலை ஆட்டும்
நன்றியுடன் சிலவேளை
வளர்த்தவனை ருசிபார்க்கும்
நாய்க்குணம்......நீ!

நெருப்பை அணைக்கலாம் - ஆனால்
எரியும் சூரியனை....?
அணைக்க நினைப்பது; உன்
அறிவீனம்.

மின்னில் கைவைத்து
விஷப் பரீட்சையா?
முழுப் பூசணிக்காயை
சோற்றில் புதைத்துவிட்டு
மறைக்க முயல்வது
முட்டாள் தனம்.

விடியற் காற்று
வெப்பமானது
'எனது'என்பது
தனிநோக்கு
'எமது'என்பது
பொது நோக்கு
சிந்திய குருதிகள்
பொதுமைக்கே
அழிந்த உடல்கள்
விடிவுக்கே;

விளக்கில் மோதும் விட்டில்
விரும்பிய இலக்கை அடையாது
சுளக்கில் பதரே பறந்திடும்
வீட்டுக்கு நடுவில்
வேலி ஏன்?
பூட்டிவைப்பின்
கதவு ஏன்?
வாடி வீடா
எம் தேசம்?
வீர மறவரை
ஈன்ற இல்லம்

நேர்மை,கண்ணியம் விட்டவனை
கல்லறைகூட ஏற்காது
வஞ்சகரை
வரலாறு போற்றாது
விளை நிலத்தில்
வளரும்களையை
களைந்து எறிவது
பயிர்கள் வளம்பெறவே
அதுதான் நிறை செயல்
அதனால்


உன் மனதைத் தொட்டுப்பார்
உனக்கே விளங்கும் உண்மை.

முருகு.பாரிமகன்




# நண்பனை ஆபத்தில் அறியலாம்

ஒருகொக்குகள் இணை பிரியா நண்பர்களாக நீண்ட காலம் வாழ்ந்து வந்தன. எங்கு சென்றாலும் ஒன்றாகவே, ஒற்றுமையுடன் சென்று வந்தன. இவற்றில் ஒன்றுக்கு ஏதோ ஒரு விபத்தில் ஒரு இறக்கை உடைந்திருந்தது. இருந்தும் மற்றவைகள் போலவே மன வலிமையுடன் இருந்தது. அக் கொக்கு தன் நண்பனுக்கு நாளும் புத்தி சொல்லி வழிப்படுத்தும். தாம் இருவரும் இன்று போல் என்றுமே நண்பர்களாக இருக்கவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் பிரிந்து விடக்கூடாது என்று கூறும். இவர்களின் நட்பை மற்றைய கொக்குகள் அவதானித்து வந்தன. எப்படியாவது இவர்களைப் பிரித்துவிட வேண்டும் என்று அவை எண்ணின. இதற்காக பல முயற்சிகளையும் செய்தன. இவைகள் எல்லாம் ஒரே இடத்துக்குதான் இரை தேடிச்செல்வது உண்டு.



அடுத்த நாள் திட்டம் ஒன்றுடன் வழமைபோல் இரை தேடிச் சென்றன. இங்கே நண்பர்கள் இரண்டும் இரைதேடிக்கொண்டிருப்பதைஅவை கண்டன. வழமைக்கு மாறாக இவைகளுக்கு அருகில் அவையும் வந்தமர்ந்தன. சிறிது நேரம் அமைதியாக இருந்தஅவை வேடன் வருவதாகக் கூறி செட்டைகளை பலமாக அடித்துக்கொண்டு "உயிர் போகும் நேரத்தில் நண்பர்களைப் பார்க்காதே முதல் உன்உயிரைக் காப்பாற்று நண்பர்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் உன் உயிருக்கு ஆபத்து நேர்ந்து விடும்" என நண்பர்களிடம் இருந்து பிரிப்பதற்காக திட்டமிட்டதைக் கூறிக் கொண்டு பறந்தன. அவர்களின் சதி விளங்காத கொக்கு ஆபத்து நேரத்தில் அவைகள் கூறுவது சரி என நண்பனை விட்டு அக்கொக்குகளுடன் சேர்ந்து பறந்தது இறக்கை உடைந்த கொக்கு தாமதமாகவே பறந்தது.

இறக்கை உடைந்த கொக்கு தன் நண்பன் பயத்தால் சென்றுவிட்டான் நான் வருவன் என்று எண்ணியிருப்பான்.என்று எண்ணியவாறு கூடு சேர்ந்தது . அங்கு தன் நண்பன் இல்லை. வருவான் என எதிர்பார்த்தது. ஆனால் நண்பன் வரவேயில்லை. மறுநாள் வழமையாகச் செல்லும் இடத்துக்குச் சென்றது. என்ன அதிசயம் ஒரு நாளும் இல்லாத என் நண்பன் அவர்களுடன் நிற்கின்றான். என நினைத்து "நண்பா நான் வந்து விட்டேன் வா எனக் கூப்பிட்டது. உன்னோடு இனி நான் வரமாட்டேன். உன்னை என் நண்பனாக்கினென்ன பலன் நீயும் இறக்கை உடைந்தவன் ஆபத்துக்கள் நேரும்போது என்உயிரும் உன்னால் போய்விடும் நீ எங்காவது போய் விடு " என்று கூறி அவர்களுடன் சேர்ந்து கொண்டது.

நண்பனின் கதையைக் கேட்டு கவலையுடன் மரத்தில் அமர்ந்துகொண்டது இறக்கை உடைந்த கொக்கு. ஆபத்து உண்மையான ஆபத்து அன்றுதான் நடக்கவிருந்தது. வேடன் இலைகளை நோக்கி குறிபார்த்தவண்ணம் பதுங்கினான். இதைக்கண்ட கொக்குகள் தம்தம் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒருவருக்கொருவர் சொல்லாமல் நாலுபக்கமும் சிதறிப் பறந்தன. அம்பிற்கு இலக்கான கூட்டத்துடன் சேர்ந்து கொக்கு பறக்க முடியாமல் பற்றைக்குள் விழுந்தது. தன்நண்பன் அகப்பட்டுக்கொண்டதை கண்ட சிறகுடைந்த கொக்கு பறந்து அருகில் சென்றது. குற்றுயிராய் கிடந்த நண்பனைப் பார்த்தது. நண்பா என்றது. வேதனையில் துடித்துக் கொண்டிருந்த கொக்கு கண் விழித்துப் பார்த்தது. கவலையுடன் நண்பா உனக்குத் துரோகம் செய்துவிட்டேன் எனக் கூறியபடியே உயிரை விட்டது.

**வெண்ணிலா**

## வாரம் ஒரு குறள்



குணம் என்றால் ஒரு மனிதன் செய்கின்ற செயல்கள். அவனது பண்புகளை வைத்தே அவனது குணங்கள் மதிப்பிடப்படுகின்றது. இதிலிருந்தே நல்ல குணம் எவை என்பதனையும் தீய குணம் எவை என்பதனையும் அறிந்துகொள்ளமுடிகின்றது. எப்பிறவியில் எது பிறந்தாலும் அவர்களுக்கென்று ஒவ்வொரு குணங்களும் அமைகின்றன. இக் குணநலம் என்பது ஒருவருக்கு இயல்பாகவே அமைந்திருக்கும் குணமாகும். அது தவிர்ந்த ஆடை, ஆபரணங்களால் அமையும் நலன் ஒரு நலத்திலும் உள்ளதாகாது. அதாவது இன்றியமையாதாகின்றது. இதனையே

"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 31

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | ஆ | தா | ல் | மு | லை | ர் |
| கா | அ | வை | மே | ம் | தா | சொ |
| கௌ | ண் | கீ | லை | வு | வ | பூ |
| பு | தே | வி | கு | தி | ர் | ந |
| ஞா | யூ | ம | கீ | வி | ஆ | சா |
| பா | நி | வா | வ | னீ | வி | க |
| ந் | ய | மீ | ரா | டி | ன் | லா |

### சொற்சிலம்பம் -29 இன் விடைகள்

01. வெள்ளி.
02. செவ்வாய்.

01. சிவப்பு.
02. நீலம்.
03. பச்சை.

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 29 இன் பரிசுக்குரியவர்

க. கோஸ்வரன்,
புனிதபூமி சிறுவர் இல்லம்,
முத்துஐயன்கட்டு,
முல்லைத்தீவு.

### சொற்சிலம்பம் - 29 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சா.டிலக்ஷன்,தரம் -03[B], முப்பாரதி வித்தியாலயம், நெட்பானா விசுவமடு.
04. கோ. பிரபா, மகிழடித்தீவு - தெற்கு, கொக்கட்டிச்சோலை.
02. தட்சாயினி,ஆண்டு -04, விக்னேஸ்வராவித்தியாலயம், கோம்பாவில்.
05. ந. அனுந்தா,ஆண்டு -04, குமரபுரம் ம.வி, பரந்தன்.
03. உதயகுமார் பதுஷா, தரம் -02[B], கிளி/மகாவித்தியாலயம்.
06. இ.பிரதாபன், வவு/விபுலானந்தாகல்லூரி, வவுனியா.

01. சந்திரனின் வேறுபெயர்கள் மூன்று?
01) ....................................
02) ....................................
03) ....................................

சொற்சிலம்பம்-31
சுதநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

02. மீன் பிடிக்கப்பயன்படுபவை இரண்டு?
01) ....................................
02) ....................................
பெயர் :- ....................................
முகவரி :- ....................................

## விண்மீனும் விளையாட்டுப் பையனும்

சுட்டிப்பயல் இவன் அடங்கானாம்
சொன்ன பேச்சும் கேட்கானாம்
உண்ணக் கொடுத்த சோளப் பொரியை
உயர வீசி எறிந்தானாம்

விண்ணில் சிக்கிய பொரி வீழும்
கண்ணிமையாமல் காத்து நின்றே
குடுகுடு கிழவன் ஆனானாம்
குறும்புகள் மிகையாய் கொண்டானாம்

இரவில் மினுங்கும் எந்தன் பொரியை
பகற் பொழுதில் எடுத்தான் எவனென்றான?
மீண்டும் இராவில் பூத்தல் கண்டு
புரியாதவனும் விழிக்கின்றான்

எடுத்தும் விடுத்தும்
குரங்கு சேட்டை விடுபவன் எவனென்று
கண்டறியாமல் விடுவேனோ?
கடுந்தண்டனை கொடுக்கேனோ?
என்றே அவனும் அறைகின்றான்
ஏனோ வானை முறைக்கின்றான்

**செவ்வதனி**

## விடுகதைகளும் விடைகளும்

01) கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார்?
02) அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
03) கண்ணீர் விட்டே கடைசி வரைஒளி தருவான் அவன் யார்?
04) ஆட்டு வித்தால் ஆடாமல் இருக்காது அவன் யார்?
05) வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?

**விடைகள்**

01. காகம். 02. சிலந்தி. 03. மெழுகுதிரி. 04. கண் இமை, 05. சிரிப்பு

**ம.அருள்குமரன்**

## நகைச்சுவை

**ஆசிரியை:** (உலக வரைபடத்தைக் காட்டி) இதில அமெரிக்காவைக் காட்டு
**மாணவன்:** தெரியலை ரீச்சர்
**ஆசிரியை:** (கோபத்துடன்) மேசைக்கு மேல ஏறு. இப்போது காட்டு.
**மாணவன்:** மேசைக்கு மேல ஏறியும் தெரியல்ல ரீச்சர்.

**K.கொன்சன்.**

## நட்புரிமை

எண்ணம் எனும் ஏட்டைதொட்டு
வண்ணம் எனும் வசனம் இட்டு
வார்த்தையால் புனரமைத்து
எழுத்தால் உயிர் கொடுத்து
நட்பினை விரும்புவோர்க்கு
வரைகின்றேன் ஒருமடல்
உங்கள் இல்லம் எனும்
உள்ளத்தில் நட்பு எனும்
உரிமையை பதிவு
செய்வதற்காகவே


**ந.கங்கா**

## நட்பூ

ஆசையாக நான் வளர்த்த
என் அழகுத்தோட்டத்திலே:
எத்தனையோ பூக்கள் பூத்து
உதிர்ந்து மீண்டும் பூத்து
உதிர்ந்தன:
இப்போது
என்னிடத்தில்
ஒரு பூ மட்டுமே!
உதிர்ந்து விடாதே:
மீண்டும் பூப்பதற்கு
என் செடியினிலே
அரும்புகள் ஏதுமில்லை.

**மு.வ.சுதா**

## ஐந்து வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





இளமைக்கும் முதுமைக்கும் பொதுவாகத் தரப்பட்டுள்ளது ஒன்றுதான்: அதிருப்தி. - மேத்யூ ஆர்னால்ட்

## புரிதலும் தெளிதலும்

தேர்தல் முடிஞ்சு போச்சுது அதுக்குப் பிறகு ஆனந்த சங்கரியாரிண்ட பேச்சு கொஞ்சம் அமர்ந்து இருந்தது. ஆனா பிறகு ஊடகங்களின் வெளியான செய்திகளை அடுத்து ஒரு முறை கலகட்டி பழைய இடத்துக்கே போட்டுது. இப்ப அதுவல்ல பிரச்சினை யாழ்ப்பாணம் தேர்தலில் எந்தக் கட்சிகளும் பயன்படுத்தாத அளவுக்கு பத்திரிகைகளில் விளம்பரம் போட்டு மக்களை எப்படியாவது கவர்ந்துவிடவேணும் என துடியாய் துடித்தார் ஆனந்தசங்கரி.

அந்த விளம்பரங்களுக்கு மட்டும் அவர் செலவழித்த பணத்தின் அளவைக் கணக்குப்பார்த்தால் நிச்சயம் தலைசுயச்சுத்தும்.

அப்படி செலவழித்தும் ஒரு சொற்ப வாக்குகளை மட்டுமே பெற்று படுதோல்வி கண்டார்.

நாடாளுமன்ற பிரதி நிதித்துவம்



### நிராகரிக்கப்பட்ட சங்கரியார்

தனக்குக் கிடைக்கவில்லை என்றவுடன் உது ஒரு சனநாயகத் தேர்தலோ, இஞ்ச தேர்தலா நடந்தது. எண்டெல்லாம் பெரும் கூச்சல்போட்டு அடங்கினவரை சரியா இனங்கண்டு நாடாளுமன்றத்து பின்வாசல் மூலம் நுழைகதவை திறந்துவிட்டிருப்பது ஜாதிக ஹெலஉறுமய.

சங்கரியாருக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு ஒரு பொருத்தமான இடத்திலிருந்துதான்.

இதில் என்ன விசயம் எண்டால் தமிழ் மக்களுக்கு எதிராக ஆனந்தசங்கரி யாரை எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என ஜாதிகஹெலஉறுமய இனம் கண்டிருக்கிறது என்பதுதான்.

இதற்குக் காரணம் ஆனந்தசங்கரியாரின் கடந்த கால தமிழின விரோத அரசியல் நடவடிக்கைதான் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் நீண்ட அரசியல் அனுபவமுள்ளதாக கூறப்படும் இந்த ஆனந்த சங்கரியாருக்கு தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு எதிராக நிற்கும்போதே ஒன்று விளங்கியிருக்கவேண்டும். அது எவராக இருந்தாலும் சரிதான் அவர்கள் தமிழ்த்தேசியத்திற்கு எதிராக நின்றால் அவர்கள் நிச்சயம் மக்களால் ஓரங்கட்டப்படுவார்கள் என்பதே. இப்போது சங்கரியாரின் நிலையும் அதுதான்: கிழக்கில் தொடரும் நிலையும் அதுதான். அவ்வளவுக்குத் தமிழ்த் தேசியம் வலுப்பட்டிருக்கிறது.

— வேழினி




தொடர் - 14

இறங்கினோம் - வெங்கறான் வெளி: கண்ணுக்கெட்டிய தூரம்வரை வட்டமாக விரிந்து கிடந்தது. நெடுஞ்சாலையருகில், நேற்றுப்பார்த்தது போல, ஒரு தகரக்கொட்டில். தெருவோடு ஒரு பெரிய அறிவிப்புப்பலகை - 'நீங்கள் இப்போது பூமத்திய ரேகையைத் தாண்டுகிறீர்கள்' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. அதற்கு மேலேயும் ஒரு 'ஜாம்போ' வெய்யில் நன்றாக எறித்துக் கொண்டிருந்தது: என்றாலும் வெக்கை சிறிதுமில்லாத இதம்.

எங்களைக் கண்டதும், கொட்டில் தாழ்வார வாங்கில் அமர்ந்திருந்த இளைஞர்களில் இருவர் எழுந்து வந்தார்கள். முகம் முழுதும் முறுவலுடன் - 'ஜாம்போ!' 'ஜாம்போ'

'இங்கே வாருங்கள்', ஆங்கிலத்தில் அழைத்தான் ஒருவன். அவன் காட்டிய இடத்தில்,பத்தடிதள்ளி ஒரு சாதாரண பிளாஸ்ரிக்வாளி இருந்தது. ஒன்றுமே விளங்கவில்லை.

'போய்ப்பாருங்கள்', புன்னகையுடன் சொன்னார்அயூப். வாளித் தண்ணீருக்குள் ஒரு தகரப் பேணி கிடந்தது. அந்த இளைஞன் அதனைத் தூக்கினான். பேணியின் அடியிலிருந்து சிறுதாரையாக நீர் ஒழுகலாயிற்று. அடியில் ஆணியால் ஒரு ஓட்டை போடப்பட்டிருப்பது தெரிந்தது.

'இதைப்பாருங்கள்',ஒழுகும் நீரைக்காட்டினான் மற்றவன்: 'கடிகாரம் சுற்றுத் திசையில் சுழன்று விழுகிறது - இல்லையா? அப்படித் தான் தெரிந்தது.

'இப்போது பாருங்கள்', கையில் ஆயத்தமாக வைத்திருந்த நெருப்புக் குச்சியில் பாதியைப் பிய்த்துப்பேணி நீரினுள் போட்டான். பேணி நீரின் சுழல், கடிகாரம் சுற்றுத் திசையிலிருந்தது இப்போது தெளிவாகத்தெரிந்தது.

'நாங்கள் நிற்பது, பூமத்திய ரேகையிலிருந்து பத்தடிவடக்கே. இனி, தெற்கே போவோம், வாருங்கள்...' வாளியுடன் இருவரும் முன்னே போனார்கள். அறிவிப்புப் பலகையைத் தாண்டி, எதிர்த்திசையில் பத்தடிபோய் வாளியை வைத்தார்கள்.

'இப்போது பாருங்கள். இது, தெற்கே...!' நீர்த்தாரையும், நெருப்புக்குச்சியும் இப்போது எதிர்வளத்தில் சுழல ஆரம்பித்தன! அதாவது பூமத்திய ரேகையின் வடக்கேயும் தெற்கேயும் விசையொன்றின் விளைவான அசைவு, எதிரெதிர்த்திசைகளில் இடம்பெறுகின்றது. அந்த இளைஞர்கள் இதைச் செய்து காட்டினார்களேயொழிய, அச்செயற்பாட்டின் காரணத்தை விளக்குவதற்கேற்றவர்களாகத் தெரியவில்லை.

இந்நிகழ்வு 'கியூரியோலி'யின் விசை சம்மந்தப்பட்டதாக இருக்க வேண்டுமென்று தோன்றிற்று. அதாவது, ஒரு சுழலும் சட்டமொன்றில் அசையும் துணிக்கையொன்றின் விசை, அத்துணிக்கையின் வேகத்தில் தங்கியுள்ளது. இங்கு,புவிக்கோளம், சுழலும் சட்டமாகச் செயற்படுகிறது.

'இதற்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா? செல்வாகேட்டார். 'ஐம்பது ஷில்லிங் கொடுங்கள்', என்றார்அயூப். தகரக் கொட்டிலை நோக்கி நடந்தபோது, புவிக்கோளத்தின் வடதுருவத்திற்கண்மையில் - இப்போது செண். பீற்றேஸ்பேர்க் எனப்படும். அப்போதைய லெனின் கிராத் நகரில், அர்ச்-ஐஸக் தேவாலயத்தில் நின்று, உலகம் தன் அச்சில் தானே சுழல்வதை விளக்கும் ஃபோகல்ற் ஊசலியின்செயற்பாட்டைப் பார்த்தமை என் நினைவுக்கு வந்தது.

கொட்டிலுக்குள், சிற்றுண்டிச்சாலை ஏதுமில்லை: ஆனால் சின்னதாய் ஒரு கலைப்பொருட்கள் கடை இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்த இளைஞர்களிலொருவன் ஒரு கடதாசியைக் கொண்டுவந்து நீட்டி, 'உங்கள் பெயர்களைத் தெளிவாக எழுதுங்கள்' என்றான்.

"எதற்கு?" எழுதிக்கொடுங்களேன்.." என்றார், அயூப். அங்கிருந்து புறப்பட்ட வேளையில் தான் அது எதற்கு என்று தெரிந்தது. 'ஒரு நிமிடம்.." என்ற படி ஓடிவந்தான். அந்தப் பெயர்களை எழுதி வாங்கிக் கொண்டு போன இளைஞன் அழகாக அச்சிடப் பட்டிருந்த மூன்று 'சான்றிதழ்"களை நீட்டினான். 'இன்னார், இத்தனையாம் திகதி, இத்தனை மணிக்கு, இந்த இடத்தில் பூமத்திய ரேகையைத் தாண்டினார்.' என்று அச்சிடப் பட்டிருந்தது. வெற்றிடமாயிருந்த பெயர், தேதி, நேரம், போன்ற வற்றை ஆங்கிலத்தில் அழகாக நிரப்பியிருந்தார்கள்.!

"ருவெண்டெ!"அயூப், வாகனத்தில் ஏறிக்கொண்டார். சற்றுத் தூரம் போனதும்," தேநீரைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள், இல்லையா?" தாமாகவே தொடங்கினார். "ஓமோம் .." மூவரும் அவசரமாகவே பதில் சொன்னோம்.அருமையான ஓரிடத்தில் நிறுத்தப்போகிறேன், பாருங்கள்.." ஐந்து நிமிடமாயிருக்கும் அந்த இடம் உண்மையிலேயே அருமையாய்த்தானிருந்தது. நாலா பக்கமும் விரிந்து கிடந்த அந்த வெளியில் இப்படி ஒரு இடம்எப்படி வந்தது. என்று அதிசயமாயிருந்தது. நுவரெலியாவில் ஒரு துண்டைக் கிளப்பிக் கொண்டு வந்து பதித்தது மாதிரி.

"இது தான் தொம்சன் நீர்வீழ்ச்சி!" என்றார் அயூப். மரங்களின் மறைவில் நீண்டு கிடந்தஒரு ஆழ்ந்து ஒடுங்கிய பள்ளத்தாக்கின் எதிர்ப்புறம், மலைமீது அடர்ந்து படர்ந்திருந்த காடொன்றின் நடுவில், நூறடி உயரத்திலிருந்து வீறுடன் வீழ்ந்து கொண்டிருந்த நீர்ப்பெருக்கு இது நிரந்தரமான நீர்வீழ்ச்சியல்ல.

"அப்படியென்றால்?"

"அந்தப்பக்கங்களில் பெருமழை பெய்கின்ற காலங்களில் விழும் மற்ற நாட்களில் வரண்டு விடும்.."

எப்படியோ, இப்போது அது அழகாகத் தானிருந்தது. அதன் இரைச்சல் அந்த வட்டாரமெல்லாம் ஓங்காரமிட்டது. நீர்வீழ்ச்சியின் எதிரே அழகான தோப்பொன்றும் அதன் நடுவில் அழகான வீடுதியொன்றும் வேறு, இங்கே ஒரு நாளாவது நின்றிருக்கலாமே என்றெண்ண வைத்தன.

- தொம்சன் நீர்வீழ்ச்சியிலிருந்து புறப்பட்டு ஒன்று, ஒன்றரை மணித்தியாலம்.

பாதை இப்போது லேசான மலைப்பாங்கானதாயிகிருந்தது. வலப் பக்கம் செங்குத்தாய் உயர்ந்தமலை. இடதுபுறம்,பென்னம்பெரிய பள்ளத்தாக்கு ஒன்று பரந்து விரிந்து கண்ணுக்கெட்டிய தூரம் போய் மறைந்தது. அதன் நடுவில் ஆங்காங்கு சிற்றூர்கள் ,வளைந்து நெளிந்து ஓடுகிற பாதைகள் எல்லாம் தெரிந்தன.

"இதுதான் பெரும் பிளவுப்பள்ளத்தாக்கு" என்றபடி,வானைநிறுத்தினார் அயூப்.இறங்கியதும் எதிரே தெரிந்த அறிவிப்புப்பலகையும் அதைத்தான் சொன்னது.

'இது,'சுபுக்கியா-பார்வைத்தளம்' என்று போட்டிருக்கிறதே இந்த சுபுக்கியாவை விட வேறு இடங்களிலும் இப்படிப்பார்க்கும் இடங்கள் இருக்கவேண்டும் இல்லையா? "பல இடங்களில்..."

இறங்கி இரும்புக்கிராதி போட்டிருந்த விளிம்பு வரை நடந்தபோது, வயிற்றைக்கலக்கியது பல இடங்களில் பார்வை மேடையாக பலகை பொறுத்தியிருந்தார்கள். இடையிடை தெரிகிற ஓட்டைகளின் கீழே இருநூறு அடி ஆழத்தில் கிடுகிடுபாதாளம்! அடியடியாய் எடுத்துவைத்துப்போய் விளிம்போடு நின்றபோது காற்று சுகமாக வீசியது. எல்லாமே எதோகனவுபோல் இருந்தது.

'பிளவுப்பள்ளத்தாக்கு'. அல்லது 'பெரும்பிளவுப்பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படுகின்ற இந்த பூகர்ப்பவியல் அற்புதம், மத்திய கிழக்கின் தென்பகுதியிலிருந்து, தென்கிழக்கு ஆபிரிக்காவரை- அதாவது சிரியாவிலிருந்து மொஸாம்பிக் வரை- ஓடுகிறது. பூமிப்பந்தின் சுற்றளவில் ஆறில் ஒரு பங்கு இதன்அகலம் என்கிறார்கள். விளிம்பில் நிற்பதால் பள்ளத்தாக்காகத் தெரிகிற அது உள்ளே இறங்கிவிட்டால் அப்படித் தெரிவதில்லை. அதனுள்ளே சமவெளிகளும் வாவிகளும் உள்ளன. உண்மையில் இந்தப் பள்ளத்தாக்கில் தான் சாக்கடல், செங்கடல் போன்றவையும் அடங்குவதாக ஒருகுறிப்பு கூறியது.

இந்தப்பள்ளத்தாக்கு, கென்யாவில் இரண்டாகப்பிரிகிறது. மேற்குக்கிளை கொங்கோப் பக்கமாகவும் கிழக்குக்கிளை, நக்குறு மற்றும் நய்வாஷா வாவிகளை உள்ளடக்கிய பிரதேசத்தாலும் பிரிகின்றன. இந்த நக்குறு வாவியை நோக்கித்தான் அப்போது நாங்கள் போய்க் கொண்டிருந்தோம்.

பாதைவிளிம்பிற்கு அப்பால் இருபது




(தொடரும்)

எப்பொழுதும், அறியாமையிலிருந்து பிறப்பதே அச்சம். - ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்

## நீயும் வந்து பாரடா

வந்து பாரடா, வந்து பாரடா - தாய்
மண்ணை நீயும் வந்து பாரடா
அந்நிய சக்தியால் அழிந்து போயும்
ஆக்கிரமிப்பால் ஆடிப் போயுள்ள - தாய்
நாட்டை நீயும் வந்துபாரடா,
கண்டு கண்டு உள்ளம் நொந்து - நொந்து
போனது இனியும் வேண்டாமே வேண்டாம்.
பிஞ்சு மழலைகள் கொஞ்சி கொஞ்சி - அள்ளி
மண்ணை கோயில் கட்டி வாழ்ந்த
மண்ணை நீயும் வந்து பாரடா,
சோடி சோடியாய் ஆடிப் பாடிய - காதல்
பூக்கள் கீதம் கீதமாய் உலாவித் திரிந்த
தாய் மண்ணை நீயும் வந்து பாரடா
வந்து பாரடா வந்து பாரடா....
சொந்தம் பந்தமாய் கூடிக் குழாவிய - தாய்
மண்ணை நீயும் வந்து பாரடா,
பள்ளிப் பருவமதில் பண்ணான தமிழ்
படித்து அழியாது காத்து வந்தோம்.
சேர,சோழ பாண்டிய மன்னர்களால் - தாய்
மொழி தமிழே தமிழே என்று உரைத்தோர்
அன்று முதல் இன்றும் என்றென்றும் -தாய்
மண்ணை நீயும் வந்து பாரடா,
வந்து பாரடா வந்து பாரடா...
சரித்திரம் படைக்கவென சலியாது உழைக்கும் - எம்
வீரப் புதல்வர்களை நீயும் வந்து பாரடா,
ஓயாத அலையலையாய், ஓய்வின்றி
ஓடிவரும் கங்கையாறாய்.
வாடிய உள்ளங்கள் தேடின(ய) விடிவினை - தாய்
மண்ணில் நீயும் வந்து பாரடா,
சிந்திய ரத்தம், சிந்திய வியர்வை
அத்தனையும் உண்மையை உணர்த்தின - தமிழ்
ஈழம் என்று ஒரு நாட்டினை ஆக்கின புலி
ஆழியாத சரித்திர நாயகர்களாகினர்
என்றென்றுமே அழியாத வாணமாய்
திகழ்வதை நீயும் வந்து பாரடா:
வந்து பாரடா வந்து பாரடா...

க.ந.அருணன்

## சிட்டுக்குருவி

வண்ண நிறங்கள் பல கொண்டு
வான வெளியில் வலம் வரும்
தேகம் மாறும் பூக்கள் மீது அமர்ந்து
தாகம் தீர்க்க தேனைக் குடிக்கும்
மேகம் போல வெண்மை பூண்டு
சோகம் இன்றி ராகம் பாடி
காற்றலையில் நீந்தி - பார்க்கும்
கண்களை மயக்கி
சின்ன சிறகை மெல்லவிரிக்கும்
சிரித்துப் பேசும் சின்னக் குருவி
சிட்டுக்குருவி....

க.முருகானந்தன்

## இரு கண்கள்

பத்துமாதங்கள்
கருவறையில் . சுமந்து
உதிரத்தை உணவாக்கி
அன்புடன் எனைவளர்ப்பவள்
என் அன்னை.

உயிர் விதையாய்
உருப் பெற்றபின்னே
கல்லறையிலும்
எமைத் தாங்குபவள்
பூமித்தாய்.
இவர்கள் என்றும்
என் இருகண்கள்.

செ.செல்வநேசன்

**பணம்**
தாமரை மேல் தங்காத நீர்த்துளிபோல
சிலரிடத்தில் தரிப்பிடம் இழந்த அகதி

**வாக்குச் சீட்டு**
தன்நலம் கருதும் அரசியல்வாதிகள்
தம் கை நீட்டி கேட்கும் பிச்சை

**கனவு**
உறங்கும் போது மட்டும்
உருவெடுக்கும் ஒருவகைக் காட்சி

**ஆசை**
ஏழையின் வாழ்வில் நிலவும் வரட்சி
ஏனையோரிடத்தில் நிலைபெறும் குளிர்ச்சி

**ஆணவம**
தேகநலத்தை கெடுக்கவரும்
சுகம் காணாத நோய்.

க.முருகானந்தன்

**நிலவு**
குளிர்மையான இளங்காற்றால் வீசி
வளர்ந்து தேயும் வெண்மகளாய் மிளிர்ந்து
பூமிக்கு அழகூட்டும் வான தேவதை.

**கண்ணாடி**
முன்னின்று செய்வதெல்லாம் செய்து
சொல்பவற்றை சொல்லாது பார்த்து
பெண்ணின் நண்பியாக விளங்கும்
சடப்பொருள்.

**காதல்**
கண்களால் கல் இட்டு
இதயத்தால் பூச்சுப் பூசி
இல் வாழ்விற்கு இடப்படும் அத்திவாரம்.

செ.கானப்பிரியா.

## ஊக்கமாத்திரை

நல்ல செயல்கள் எதுவென்றாலும் உண்மையாகவும், கண்ணியமாகவும், நியாயமாகவும், தூய்மையாகவும், வியந்து பாராட்டப்படுவதாகவும் எவை இருக்கிறதோ, அவற்றில் நன்மையும் புகழும் கிடைக்கக் கூடியதாக அமைவது தான் பிறப்பால் நான் சரிநிகர் சமன் என்றாலும் மேலானவர், கீழானவர் என்று பாகுபடுத்துவது ஒழுக்கம்தான். நம்முடைய ஒழுக்கத்தை வெகுவாக நேசிக்கவேண்டும் நாவில் மட்டுமல்லாது இதயத்திலும் ஒழுக்கம் குடிகொண்டிருந்தால் வெளியே செல்லும் போது கௌரவம் நம்மை சூழ்ந்து வரும் நல்லொழுக்கம் என்பது " நறுமணப்பூண்டிற்கு நிகராகும். அதனை நசுக்கினால் கம்மென்று நறுமணம் வீசும்" என்கிறார் மோகன். ஒழுக்கத்தை பின்பற்றும்போது பற்பல துன்பங்கள் வந்தாலும் அதனைக் களைந்து எறிந்துவிடவேண்டும்.பயந்து விடக்கூடாது "சந்தனக்கட்டையிலிருந்து வரக்கூடிய நறுமணமோ சொற்பமானது. ஆனால் ஒழுக்க சீலனிடமிருந்து எழும்பக்கூடிய நறுமணமோ உயரக்கிளம்பி இறைவனை அடைகிறது" என்கிறார் புத்தர். உள்ளத்தின் உறுதிதான் ஒழுக்கத்தின் அடிப்படை ஆகும். மனிதர்களில் மிகவும் மேலான ஒழுக்கமுடையவர்கள் யாரென்றால் "ஒழுக்கசீலர்களாக இருந்து தங்களின் ஒழுக்கசீலத்தை வெளிக்காட்டாமல் இருப்பதில் மனநிறைவு கொள்கிறார்களோ அவர்கள் தான் " என்று



## ஒழுக்கத்தின் மேன்மை

பிளேட்டோ கூறுகிறார். காந்திஜி 'நல்லொழுக்கம் என்பது உன்னுடைய எதிரியிடம் காணப்படும் நல்ல தன்மைகளை கண்டுபிடித்து அவற்றை மேற்கொண்டு விடுவது தான்' என்று கூறுகிறார். கௌரவம் பெறவிரும்பினால் முதலில் ஒழுக்கத்தை கடைப்பிடிக்கவேண்டும். ஒழுக்கத்தை மனப்பூர்வமாக விரும்பினால் நிச்சயமாக பெற்றுவிடமுடியும். "பெறத்தக்க பேறுகளில் எல்லாம் மேலான பேறு ஒழுக்கத்தைப் பெற்று இருப்பது தான்" என்கிறார் ரூஸோ. ஒழுக்கம் என்றும் எந்த நிலையிலும் மறையாது, நீங்காது நிலைத்துநிற்கும் நல்ல பெயரையும் நற்புகழையும் பெற்றுத்தருவது ஒழுக்கமே இறக்கும் மனிதனிடம் காணப்பெறும் இறவாவரம் பெற்றபொருள் ஒழுக்கதான் என்கிறார் பேகன் இதனைச் சேக்ஸ்பியர் நம்முடைய வாழ்வு குறுகியது ஆனால் அதனை "நீண்டகாலம் வரை நிலைத்திருக்கச்செய்வது ஒழுக்கத்தின் வேலையாகும்" இவ்வாறு கூறுகிறார்.

உடல் நலமின்றி எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியாதோ அதேபோல் நல்லொழுக்கம் இன்றி வளமாக வாழமுடியாது.' நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தால் அது என்றுமே பசுமையான நினைவுடன் இருக்கும் அந்த நினைவு இன்பத்திற்கு வழிகாட்டும் நற்செயல்களைப்பற்றிய எண்ணமானது துன்பத்திலும் இன்பம் தந்து ஆறுதல் அளிக்கும். எனவேதான் வள்ளுவர்

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும்" என்கிறார்.

ஒழுக்கத்தை போற்றிப்பாதுகாப்பது முக்கிய கடமையாகும் இதுவே வாழ்க்கைக்கு துணையாக நிற்கும் நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவது என்பது போராட்டம் நடத்துவது போலாகும் இதனை எளிதில் பின்பற்றி விடமுடியாது. பலவிதமுயற்சிகளுக்குப்பின் கைக்கொள்ளமுடியும். இளமையில் கடைப்பிடிக்கும் நல்லொழுக்கமே முதுமைவரையினும் வரும். நல்லொழுக்கத்திற்கு ஏற்றபருவம் இளமைதானே தவிர முதுமையல்ல இளமையில் கல் முதுமையில் மண் என்பதனை மறந்துவிடக்கூடாது.

ந.விதுரா

## குறுக்கெழுத்துப்போட்டி - 66

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | 07 |
| 08 | | | | | | |
| 15 | | 17 | | | | |
| | | | 25 | 26 | 27 | |
| | 30 | | 32 | | | |
| | | | | | | |
| 43 | | | | | 48 | |

பெயர்:-........................................
முகவரி:-........................................
........................................
........................................

### இடமிருந்து வலம்

01. நெருப்பு.
06. மாதங்களில் ஒன்று.
08. சூரியன்.
15. உடன்பிறப்பு.
26. கை(குழம்பியுள்ளது)
43. குளம்(குழம்பியுள்ளது)
48. அரசன்.

### மேலிருந்து கீழ்

01. புதுமை.
07. ஓவியம்.
17. பிதா.
25. சாத்திரம்.
26. பாத்திரம்.
27. இல்லை என்பதற்கு எதிரானது (தலைகீழாகவுள்ளது)
30. சஞ்சலம்(தலைகீழாகவுள்ளது)

### குறுக்கெழுத்துப்போட்டி இல.64 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அரசன்.
06. மாதா.
08. கிழமை.
12. மகன்.
16. அன்னம்.
24. நகரம்.
33. மலர்.

**மேலிருந்து கீழ்**

01. அகிலம்.
07. தாமரை.
16. அக்கினி.
24. நண்பன்.
25. கள்வன்.
33. மதி.
35. சமர்.
41. கரி

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.66
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.64 இன் பரிசுக்குரியவர்

A.S. நயனி,
555/12, பருத்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.64 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. த.சங்கீதா, கந்தரோடை, சுன்னாகம்.
02. பூ. சுலக்ஷி, இல.70/3, நாவலர் வீதி, பண்டாரிக்குளம்,வவுனியா.
03. வி. சிவதர்சினி, 3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
04. சி. சோபிகா மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.
05. P.கமலினி,தங்கா, வேப்பங்குளம், வவுனியா.
06. பா.கலாதீபன், தரம் -10, கிளி/முருகானந்தா ம.வி, முரசுமோட்டை.

சமயம்,நீதி, நல்லுரை, நிதி, ஆகியவையே அரசின் நான்கு தூண்கள். - ஃபிரான்ஸ் பேக்கன்

# “பூமிக்கும் சொர்க்கத்துக்கும் அந்நியமானவள்”

20 ம் நூற்றாண்டின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான அன்னா அக்மதோவா தன் இலக்கிய வாழ்வை அரச ஒடுக்குமுறையின் பயங்கரத்தின் நடுவே செலவிட நேர்ந்தது. அது ஏற்படுத்திய ரணங்கள் அவரது கவிதையான ” இரங்கற் பா” இல் அற்புதமாக வெளிப்பட்டுள்ளன.

அவருடைய சொந்த வாழ்க்கை அவருக்கு மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை. அவரது 16 வயதில் அவரது தந்தை குடும்பத்தை கைவிட்டுச் சென்றுவிட்டார். கீவி நகரில் 1907ம் ஆண்டில் சட்டம் பயின்ற அவர் இலக்கியம் பயிலவென செ்ன். பீற்றர்ஸ் பேர்க்குக்கு வந்தார். அங்கு அவரது ஆசிரியராக இருந்தவர்களில் ஒருவராக நாடகவியலாளரும் கட்டுரையாளருமாக இனோ கென்ரி அலெக்ஸி இருந்தார். அக்மதோவாவின் ஆக்கங்களில் இவரது ஆழமான பாதிப்பை பார்க்கலாம். 1910 களில். பரிஸ்வந்த அக்மதோவா அமீடியோ மொடிகிளியானியைச் சந்தித்தார். 21 வயதில் ‘அக்மெய்ற்’ என்றழைக்கப்பட்ட கவிஞர்கள் குழுவின் உறுப்பினரானார். அக்குழுவின் தலைவராக இருந்த கவிஞரான நிக்கோலாய் குமிலெவ் அக்மதோவாவை மணந்துகொண்டார்.



1914ம் ஆண்டில் போர்தொடங்கிய பொழுது நிக்கோலாய் குமிலெவ் ரஷ்ய குதிரைப்படையில் இணைந்து கொண்டார்.

அக்மதோவாவின் முதலாவது கவிதைத்தொகுப்பு 1912ம் ஆண்டில் வெளிவந்தது. அவரது இரண்டாவது தொகுதியான ‘‘சிறுமணிகள்’’ (BEADS) (1914) அவருக்கு புகழைத்தேடித்தந்தது. அவரது கவிதை ஒன்றில் காதலைப்பாடின அல்லது ரஷ்ய மரபுகளை ஆராய்ந்தன,‘காதல்’ என்று தலைப்பிட்ட ஒருகவிதையில் (1911) அவாவுகின்ற வயலினின் பிரார்த்தனையில் அழகாக விம்ம அதற்குத் தெரியும் இன்னமும் அன்னியமானது இருக்கின்ற புன்னகையில் அதனை முன்னுணர்வது எவ்வளவு பயங்கரமானது........ என்று எழுதினார்.

மனதுக்கு நெருக்கமானதும், பேச்சு வழக்கிலானதுமாக இருந்த அவரது ஆரம்பகால எழுத்து, நடை, பின்னர், இலக்கிய நயம்வாய்ந்த இறுக்கமான நடையாக ஆகிவிட்டது. “வெண்பறவைக்கூட்டம்” (“WHITE FLOCK”-1917),“அனோடொமினி MCXXL” (ANNO DOMINI-MCXXI”-1922) ஆகிய அவரது தொகுதிகள் இதை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

அவருடைய கவிதைகளில் தன் வயப்பட்டதும் மதசார்பானதுமான கூறுகள் அதிகதிகம் காணப்பட்டன. இதனால் அந்தக்காலப்பகுதியில் புதிதாக உருவான சோவியத் நாடும் அதன் தணிக்கையாளர்களும் அக்மதோவா மேல் விரோதம்கொண்டார்கள்.

**பிரிதல்**

1918ம் ஆண்டில் குமிலெவ் அத்மதேவாவிடம் இருந்து பிரிந்து எதிர்ப்புரட்சி செயற்பாடுகளில் கொல்லப்பட்டார். இதைத்தொடர்ந்து அக்மதோவா சிலகாலம் படைப்பு முயற்சிகளை கைவிட்டு இருந்தார். ஸ்ரனிஸ ஒடுக்குமுறைகள் மோசமானபோது அவரது நண்பர்களில் பலர் புலம்பெயர்ந்தார்கள் அப்படிச் செல்லாதவர்கள் ஒன்றில் கொல்லப் பட்டார்கள் அல்லது “காணமால்ப்போனார்கள்”

1920களில் இலக்கிய சர்ச்சைகள் அவரது ஆக்கங்கள் விமர்சிக்கப்பட்டாலும் புதிய ஆக்கங்களையும் வெளிக்கொணர முடியவில்லை.

இரண்டாவது கணவரும் பண்டைய அசீரிய மொழி ஆய்வாளருமான விளாடிமிர் ஷிலெய்க் கோவிடமிருந்து 1920இல் பரிந்த அக்மதோவா 1928 இல் அவரிடமிருந்து மணவிலக்குப் பெற்றார்.

அவரது மூன்றாவது கணவரான நிக்கோலாய் பூணின், 1935ம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டு 1950களில் தடுப்பு முகாமொன்றில் இறந்துபோனார்.

2ம் உலகப்போர் காலத்தில் ஒரு குறுகிய காலம் தவிர, 1925 - 1952 வரை அவரது ஆக்கங்கள் அரசால் தடைசெய்யப் பட்டிருந்தன. அவரது கவிதையான “துணிவு” (COURAGE), 1942ம் ஆண்டில், உத்தியோக பூர்வ சோவியத் செய்தித்தாளான ‘பிராவ்தா’ வின் முதல் பக்கத்தில் வெளிவந்தது எனினும் 1946ம் ஆண்டில் சோவியத் எழுத்தாளர் ஒன்றியத்திலிருந்து அக்மதோவா நீக்கப்பட்டார். இலக்கியத்தை சீவனோபாயமாக கொள்வதை இது தடுத்துவிட்டது

இதற்கான ஒரு விதிவிலக்காக ஸ்ரலினை புகழ்ந்து அவ் எழுதிய கவிதையொன்று ‘ஒகொண்யொக்’ இல்வெளிவந்து இருக்கிறது. சோகம் என்னவென்றால் சைபீரியாவின் கொடூரமான தடுப்புமுகாம் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த மகன் லெவ்வை விடுவிக்கும் தாய்மை உணர்வு காரணமாகவே அக் கவிதைய்ய எழுதும் நிலைப்பாட்டை அவர் எடுக்கநேர்ந்ததுதான்.

உத்தியோக பூர்வமாக விலக்கப்பட்ட அவருடன் தொடர்பு கொண்டிருக்க ஒருவரும் துணியவில்லை. அற்ப ஓய்வூதியமொன்றின் உதவியுடன் கடின




வாழ்க்கையை அவர் எதிர் கொண்டார். விக்ரர் ஹியூகோ, ரவீந்திராநாத்தூகூர், தியாகோமோ லியோபார்டி வேறு எழுத்தாளர்களின் ஆக்கங்களை மொழி பெயர்ப்பதன் மூலம் கீறு மேலதிக வருமானத்தை தேடிக் கொண்டார். அமீடியோ மொடிகிளியானி மற்றும் அலெக் சாண்டர் புளொக், ஒஸிப் மண் டெல்ஸ்ராம் போன்ற கவிஞர்கள் முதலியோர் தொடர்பான நினைவுக்குறிப்புகளை எழுதினார்.

1946ம் ஆண்டிலே அக்மதோவாவும் நகைச்சுவை எழுத்தாளரான மிகாயெல் ஸொஸ்ஸென்கோவும். புதிய ஒடுக்குமுறைகளை எதிர் கொள்ளநேர்ந்தது. லெவ்மீண்டும் கைதுசெய்யப்பட்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக் கப்பட்டான்.

ஸ்ரலினின் மரணத்தைத்தொடர்ந்து அக்மதோவாவின் துன்பங்கள் விலக ஆரம்பித்தன. குரு ஷேவின் ஆட்சி மெதுமெதுவாக அக்மதோவாவை மெதுமெதுவாகச் சீர்திருத்தப்பட்டார்.’’ 1956இல் லெவ்சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டான்.

1950களின் நடுக்கூறுகளிலிருந்து சோவியத்இலக்கியவாதிகளால் மெதுமெதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ‘ராவோமினா’ கவிதைப் பரிசைப் பெறுவதற்கென இத்தாலிக்கு செல்ல அனுமதிக்கப்பட்டார். 1966இல் அக்மதோவா பற்றிய ஆய்வு நூல் வெளியிடப்பட்டது.

1962ஆண்டில் அமெரிக்க தேசிய கவிஞரான றொபட்புறொஸ்ற் அக்மதோவாவைச் சந்திக்க வந்த பொழுது.

“எனக்கு ஏழ்மை, சிறைச்சாலை வரிசைகள், பயம், நினைவில் மட்டும் வாழ்ந்திருந்த கவிதைகள், எரிக்கப்பட்ட கவிதைகள், சிறுமைப் படுத்தல்கள், சோகங்கள் எல்லாமே நிகழ்ந்திருந்தன. இதைப்பற்றி உங்களுக்குத்தெரியாது. அதுபற்றி நான் உங்களுக்குச் சொல்லியிருந்தாலும் உங்களுக்கு எதுவும் புரிந்திருக்காது...” என்று அக்மதோவா எழுதினார்.

அவருக்கு சேரவேண்டிய ஆனால் நீண்டகாலமாக மறுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அங்கீகாரம் வாழ்வின் இறுதிக்கட்டத்திலேயே அவருக்கு கிட்டியது. இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் தலைவியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அவரைப்பற்றி யூடித் ஹெம்ஸ்செமெயர் எழுதியதுபோல் “பூமிக்கும் சொர்க் கத்துக்கும் அந்நிய மானவர்” ஆக அவர் இருந்தார்.

சோவியத் மக்களின் போராட்டங்களுக்கும் ஆழ்ந்த அவாக்களுக்கும் குரலை வழங்கவே அக்மதேவா கவிதையைப் பயன்படுத்தினார். இந்தமக்களுக்கு, இலக்கிய நாயகிகளிலே ஆகச் சிறந்தவராக அவர் இருந்தார். எமது நூற்றாண்டின் பயங்கரங்களுக்கு தப்பிப்பிழைக்கவும் அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கும் கலைக் குள்ளசக்தியின் குறியீடாக உலகத்துக்கு, அதாவது ரஷ்ய மொழிக்கும் அப்பாற்பட்ட உலகத்துக்கு தற்போது அவர் விளங்குகிறார்.

அவருடைய ஆக்கங்களின் தொகுதியொன்று 1986இல் மொஸ்கோவில் வெளியிடப்பட்டது. அவருடைய மகத்தான படைப்பும் ஸ்ரலினின் பயங்கரங்களுக்கு பலியானவர்களுக்கு அர்ப்பணிக் கப்பட்டதுமான ‘‘இரங்கற்பா’’ வின்பின்வரும் வரிகள் அதனை வலிமையாக எடுத்துரைக்கின்றன.

*எந்த வெளிநாட்டு வானமும்*
*என்னைக் காக்கவில்லை*
*எந்த அந்நியனுடைய சிறகுகளும்*
*என் முகத்துக்கு*
*கேடயமாக இருக்கவில்லை*
*அந்தக் காலத்தின்*
*அந்த இடத்திலிருந்து*
*தப்பிப்பிழைத்த நான்*
*அப்பாவி மக்களுக்குச்சாட்சியாய்*
*எழுந்து நிற்கிறேன்.*

**வின்சென்றபுளோறன்ஸ்**

குயிலைக் கூண்டில் அடைத்து விட்டுப்பாடச் சொல்வதுபோல் அந்தப் பெண் கவிஞரது மகனை கடும்வேலைத் தடுப்பு முகாமில் அடைத்துவிட்டு அவனை மீட்க ஸ்ராலினை புகழ்ந்து கவிதை எழுதும்படி ஒடுக்குமுறை ஸ்ராலின் அரசு அவரை நிர்ப்பந்தித்தது. அந்தப் படைப்பாளியை இலக்கிய உலகில் இருந்து நீக்கிவிட ஸ்ராலிலின் ஒடுக்குமுறை பகீரதப் பிரயத்தனம் செய்தது. எனினும் அரச ஒடுக்குமுறை இயந்திரத்தால் அவரது உறுதியை உடைக்கமுடியவில்லை.

ஆழமான மன உணர்வுகளை எளிமையான வார்த்தைகளில் வெளிப்படுத்தும் திறன் அவருக்கு இருந்தது. கலைத்துவமான நாணயம் கொண்டவர் என்ற வகையில் அவீரது வாழ்நாளிலேயே வரலாறு ஒன்றைப்படைத்தவராக ஆனார். உக்ரேனில் உள்ள ஒடெஸ்ஸாவுக்கு அருகேயுள்ள பொல்ஷொய் பொன்ரானாவில் கடற்படை பொறியியலாளர் ஒருவரின் மகளாக தோன்றியவர்தான் அன்னா அண்ட்றியெவனா கோரென்கோ.

ஆரம்பக் கவிதைகளை அவர் எழுதிய பொழுது அவருக்கு வயது பதினொன்றுதான். பேச்சு வழக்கு பாணியிலான அவரது கவிதைகள், அவர் ஒரு தரம் கெட்ட கவிஞராக ஆகி குடும்பத்தின் நற்பெயரை கெடுத்துவிடுவார் என்று அவரது தந்தை அச்சம் கொண்டார். அதன் காரணமாக அவர் தனது பாட்டியினுடைய தாத்தாரிய பெயரை தனது புனைப்பெயராக வைத்துக் கொண்டார். அந்தப் பெயர் உங்களுக்குப் பரிச்சயமானதாக இருக்கலாம். ஆமாம்.அன்னா அக்மதோவா(anna akhmatoa) என்பதுதான் அந்தப்பெயர் பேச்சுவழக்கு பாணியில் அன்னா அக்மதோவா எழுதிய இரு கவிதைகள் கீழே உள்ளன.

(1) நான் பூக்களை விரும்புவதில்லை.

(2) ஒரு வெள்ளைக் கல்லைப் போல்....

### பிரிதல்

*மாலை*
*சரிவான பாதை என் முன்னால்*
*நேற்றுத்தான்*
*“என்னை மறவாதே” என*
*காதலோடு அவன் வேண்டினான்*
*இன்று வெறுங்காற்றும்*
*இடையனின் அழுகுரலும் மட்டும்*
*தூய ஊற்றினருகில்*
*‘செடார்’ மரங்கள் அலைப்புறுகின்றன.*
*அன்னா அக்மதோவா(1914)*
*(தமிழில்:அ.யேசுராசா)*

### ஒரு வெள்ளைக் கல்லைப்போல்...

*கிணறொன்றின்*
*குளிர்மையான ஆழத்தில்*
*கிடக்கின்ற*
*ஒரு வெள்ளைக்கல்லாக*
*என் மனதினுள்ளும்*
*அற்புதமான ஒரு நினைவு.*
*அதனை இழந்து போக*
*என்னால் முடியாது*
*எனக்கு விருப்பமில்லை*
*எனது சித்திரவதையும்*
*என் உச்சமகிழ்ச்சியும்*
*அதுதான்*
*தனது பார்வையை*
*என் கண்ணுக்குள்*
*ஊடுருவச் செய்பவன்*
*உடனடியாய் அதை*
*முழுதாய் காணலாம்என்று*
*நான் நினைக்கின்றேன்*

*துயரத்தின்*
*கதையொன்றை*
*கேள்விப்படும் ஒருவரைவிட*
*அதிக சிந்தனையும்*
*அதிக வாட்டமும்*
*அவனைச் சூழ்ந்து*
*கொள்ளும்*

*பித்துக்கொள்ளும்*
*கடவுளர்*
*சிலவேளைகளில் வெறும்*
*பொருட்களாய்*
*மனிதரை ஆக்கினாலும்*
*உணர்வுகளை*
*சொல்வதில்லை*
*எனக்கு ஒன்று தெரியும்*
*பூமிக்கு அந்நியமான*
*சோகத்தை*
*நித்தியமானதாய்*
*ஆக்கவென*
*எனது நினைவுகளாய்*
*நீமாற்றப்பட்டாய்*

*தமிழில்:*
*வின்சென்ற் புளோறன்ஸ்*

எல்லாவற்றையும் நம் எல்லோராலும் ஆற்ற முடியாது. – வெர்ஜில்

# படிப்போ படிப்பு

படிப்பு எண்டது, ஒரு காலத் தில் இலங்கையில் பரவலா இல்லாத காலமிருந்தது. உவர் கோலபுறுக் தானே இலங்கையில உள்ளவையப் படிப்பிக்கவேணும், எண்ட திட்டத் தைக் கொண்டு வந்தவர். அப்ப இந்த கோல்புறுக்குத்தான் பிரிட்டிஷ் மகாராணியின்ர பிரதிநிதியா இஞ்ச நிண்டவர். என்ன லண்டனிலயிருந்து அதிகாரியான கிளக்குமாரக் கொணர் ந்து இஞ்சவுள்ள அலுவல்களச் செய்விக்கச் சிலவு கூடபின்னத்தான் இலங்கையிலயே ஆளெடுத்துப் படிப் பிச்சா இஞ்சவுள்ள சில்லறைக் கணக்கு வழக்கச் செய்யலாம், சில வும் குறையும் எண்டு பாத்திச்சினம்.

பின்ன,கொஞ்சத்தமிழர், கொஞ்சச்சிங்களவர் எண்டு இவயட பள்ளியில படிச்சினம். எப்படி? அவைக்கு விசுவாசமான ஆக்க ளைத் தெரிஞ்செடுத்துப் படிப்பிச்சா எப்பவும் விசுவாசமாக இருப்பினம்.

அடிப்படைக் கல்வி இலங் கையில உயர் கல்வி இந்தியா கல்கத்தாவில, அதுக்கு மேல படிக்கவேணுமெண்டா லண்டனுக்குப் போகவேணும். அப்படிப்போய்ப்படிச்ச காலத்திலேயே யாழ்ப்பாண மக்களுக்கு லண்டனுக்குப் போய் படிச்சு ஒரு லோயராகவோ, பரிஸ்ட ராகவோ வாறதில ஒரு வெறி இருந்தது. ஆனா எண்ணெயிற கையில மயிலே இல்லாது இஞ்ச படிக் கேல்லா. தாழ்த்தப்பட்டவை எழுத் துக்களையே பாக்கேலா. இப்படி ஒரு நிலைமையையும் ஆரும் மாத்தேல்ல. பிறகு மதம் மாத்த வந்த பாதிரி மார்தான் ஏழையளுக்குப்படிப்பிக்க முன் வந்திச்சினம்.

ஆறுமுகநாவலரும் திண் ணைப்பள்ளிக் கூடங்களைப்போட்டு திருநீறு பூசச் சொல்லிக்குடுத்த தோட, ஆரார் சண்டாளர் ஆரார் புனிதமானவை எண்டு படிப்பிச்சார். இந்தப் போக்குவந்து 1836ல் சட்டத்தின் முன் சகலரும் சமம் எண்ட நிலை வந்த நேரம் கொஞ்சம் ஆடித்தான் போச்சு அதுக்குப்பிறகு கன்னங்கரா வந்து இலவசக் கல்வி முறையை அறிமுகப்படுத்தினதால ஏதோ எழுதப்படிக்க எண்டளவில சனத்துக்கு கல்வியறிவு வந்தது.

இப்ப ஏன் இந்தத்தோம்பு வாசிக்கிறனெண்டு பாக்கிறியளே இந்த லண்டனில மாதிரி பல் கலைக்கழகத்தையும், கல்கத்தா மாதிரி உயர்கல்வியையும் 1905 லயிருந்து வெளிவாரியாப்படிக்கிற வாய்ப்பு இலங்கையருக்கு இருந்தது. பிறகு1942ல் தானே இஞ்ச இலங்கை யிலும் பல்கலைக்கழகம் வந்திட்டுது. ஆனால் பாருங்கோ இந்த நாளயிலும் பேச்சென்ணெண்டா இலவசக்கல்வி, பாடப்புத்தகம் சும்மா, சீருடை சும்மா, கல்விக்கட்டணம் சும்மா இப்படி சும்மா சும்மா பிள்ளையள் படிக்குதுகள் எண்டோ நினைக் கிறியள் அதுதானில்லை பள்ளிக் கூடக்கல்வி ஆறு மணித்தி யாலந்தான் அங்கால பிள்ளையள் சுற்றாடல் சூழலுகளை அறியவும் ஓய்வெடுக்கவும் வேணுமெண்டு சொல் லுகினம் இதுதான் அரசாங்கம் வகுத்த கல்வித்திட்டம்.

இப்ப உலக வங்கிதானே கல்விச்செலவைக் குடுத்தது.



எண்டதால அவயட முறைதான் கல்வியிலயும், பின்னப்பாருங் கோவன் போனவரியம் ஒரு பள்ளிக் கூடத்தில அஞ்சாம் வகுப்பு இங்கிலீசு ரீச்சர் பள்ளிகூடம் துவங்கி ரெண்டாம் நாள் வகுப்புக்கு வந்தவாவாம். பிறகு தவனைச் சோதினையண்டு வந்து ரெஸ்று வச்சவாவாம். எண்டு பிள்ளயள் சொல்லிச்சினம்.

இதை ஒருநாள் எனக்குச் சிநேக மான அதிபர் ஓராளட்ட கதைக்கேக்க, கதையோட கதையாச் சொன்னன். அவர் என்ன சொன்னவர் தெரியுமே. இப்ப படிப்பிக்கிறது ஆசிரியரின்ர கட மையில்லயாம். பிள்ளயள் தாங்க ளாய் படிப்பினமாம் படிக்க விட்டிட்டு கணிப்பீடு செய்யுறதுதான் அவயட வேலை யாம். எப்படி வன்னியில உள்ள பிள்ளையளுக்கும் இதே நிலைதானா? எண்டால் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி திருகோண மலை, மட்டக்களப்பு அனுராதபுரம், அனைத்து இலங்கையிலும் இதேதான் எண்டார் வன்னிப் பிள்ளய ளுக்கு மின்சாரமில்லை, தொலைக் காட்சியில்லை, தொலைபேசியில்லை, ரயிலில்லை, ஸ்டேடியமில்ல பில்லி ங்ஸ்ரேசனில்ல சுப்பமாக்கட் இல்லை ஆனாவானில போக்குவரத்தில ஆனா....அஞ்சாம் வகுப்பு புத்தகத்தில இதெல்லாம் இருக்கு.

அதை விளங்கப்படுத்துவதற்கு வயலுக்க நிங்கிற வடிவேலுக்கோ, சந்தைக்க நிற்கிற சந்தியாவுக்கோ, தெரியாது. நாத்துபுடுங்கிற நாகம் மாவுக்கோ, சமையல் கட்டில் வேலை செய்யிற சரசுவுக்கோ, விளங்காது. அப்ப அந்தப்பிள்ளயள் குருடன் பெண்டிலுக்கு அடிச்சமாதிரி படம்பார் பாடம்படி எண்டு படிக்குதுகள். இதுகளுக்கு ஒரு பற்றுக்கேடாயி ருக்கிறதே தனியார்கல்வி நிலை யங்கள்தான்.

அவயும் எங்க இப்ப சந்தையில சரக்கு விக்கிறவயவிட, இவயட போட் டியா வாரந்தானே கூடிப்போச்சு. சும்மா சொல்லக்கூடாது இளந்தாரிப் பிள்ளயளைச் சினிமாப் போஸ்டருக் குள் கவர்ந்திழுக்கிறதவிட இந்த தனியார் கல்வி நிலையங்களின்ர போஸ்டர்கள் விளம்பரத்தட்டியள் இழுத்து எடுக்கிது. என்னவோ சொல்லிவினமே அள்ள அள்ள குறையாத செல்வம் கல்வி யெண்டு ஆனா இதில ஒரு லாபமு மில்லையெண்டுல்ல.

இப்ப பாருங்கோ எங்கட தேசியக் கல்விமட்டும் என்ன பிள்ளையளுக்கு எதையெண்டாலும் முழுசாச் செய் யுதோ? தனியார் கல்வி நிலை யங்களை பொறுத்தவரை அவயட பிள்ளையள் நல்ல முறையில பாசு பண்ணாட்டியாவாரம் விழுந்துபோம். அப்ப அவை திணிக்கவேணும். கேள்விப்பேப்பருகளக் கைப் பற்றவேனும் கேள்விக்கேத்த விடையளச் சப்பக்குடுக்கிறது. அதை எப்படி பரீட்சைத்தாள்ள துப்புறது எண்டதையும் சொல்லுக் குடுக்கிறது எல்லாம் ஒரு போட்டிபோட்டு நீமுந்தி நான்முந்தி எண்டு நடக்குது. பின்னப்பாருங் கோவன் ஏழாம் ஆண்டு இங்கிலீசு புத்தகத்தில இண்டைக்கு ஆறாம்பாடம் எடுக்கிறார். ஒரு வாத்தியார். பள்ளிக்கூடம் ஒரு தவனை போயிருக்கு புத்தகத்தில உள்ளது பன்னெண்டு பாடம் ஒருவரியம் 187கல்வி நாட்கள் பிரி யுங்கோ ஏறக்குறைய ஒரு பாடத் துக்கு பதினைஞ்சு நாள் விட்டிருக்கு அப்ப அறுவது நாளைக்க ஏழு பாடம் கொண்டு நடத்துறவர். பிள்ளயளுக்கு விளங்கிக்கொண்டு, போறாரோ அல்லது வியாபாரம் நடத்துறாரோ

காலமை வெள்ளன ஆறு மணிக்கு ரியூசன்,எழும்பு எழும்பு பிறகு ஏழரைக்கு பள்ளிக்கூடம், இரண்டு மணிக்கு சாப்பிட்டிட்டு ரியூசன் ஆறு மணிக்கு வீட்டுப்பாடம், அப்படியே பதினொறு மணிக்கு விளக்கோட கவிண்டு படுத்தாபிறகும் விடிய நாலரைக்கு எழும்பு எழும்பு.

என்ன கருமமப்பா இப்பத் தயப்பிள்ளயளுக்கு பெற்றோ ரோடயோ, வீட்டிலயோ, அல்லது தன்ர சூழலிலயோ என்ன நடக் குது எண்டு கவனிக்க, கலந்து கொள்ள நேரமில்லை.இப்படியான போக்கு அதுகளை ஒரு யந்திரமாக மாத்திப்போடும். பிறகு பாச மெண்டதேவெறும் வேசமாப் போயிரும். அதுகளுக்கு ஓய்வே யில்லை. களைச்சுப்போய் எதையோ பறிகொடுத்தமாதிரி திரியுதுகள். சில பிள்ளயள் மனம்விட்டு வாய் விட்டுச்சிரிக்கிற தேயில்லை. எல்லாம் நல்லதுக்கில்ல இப்ப மணிசர் சுலபமாப் பணம்பண்ண, படிக்க வேணும். ஆண்டு5 புலமைப் பரிசில் பரீட்சை இப்ப பிள்ளை யளுக்கிடையிலயோ, தனியார் கல்வி நிலையங்களுக்கிடையிலோ இல்ல பள்ளிக்கூடங்களுக்கிடையி லயோ உள்ள போட்டியில்ல. இப்ப பெற்றாருக்குள்ளே, அவயளுக்கி டையிலான போட்டியாப் போச்சு..

“ராஜினி என்ன மாதிரி செய்தவாவாமே” என்று எதிர் வீட் டம்மா கேட்பதில் என்ன அக்கறை ஒரு தாய் சொன்னா “கடவுளே பிள்ள விட்டிட்டியெண்டா, பிறகு நான் ஊரவையட கண்ணில முழிக் கேலாது” எண்டு இந்த நெருக்கு வாரங்களுக்க முக்கி முக்கி படிச்சபிள்ளை முழுசி முழுசிச் சோதினை எழுதி முடிஞ்சுது இந்தப் பிஞ்சு வயதில ரிசல்ட்டை எதிர் பார்த்து ஏங்குது. அப்பா கொண்டு போடுவர் அம்மா பேசுவா..... எவ்வளவு பெரிய மனத்தாக்கம் இது. எல்லா ருக்கும் எல்லாந்தெரியும். ஆனா தெரிஞ்சொண்டும் செய்யேலா. இப்பிடி போட்டி போட்டுக்படிக்காட்டி எதிர்காலமில்ல. தேசியப் பாடசா லைக்கும் போகவேவேணும் ஆனாப் படிக்கவேணுமெண்டா தனியார் கல்வி நிலையங்களுக்குத்தான் போகவேணும் எண்ட நிலையை யல்லோ உருவாக்குது.

**தமிழ்க்கவி**

# உலகை உலுக்கும் புகைத்தல் சாதனம்



“பத்தும் சீண்டுது
பதினெட்டும் நுகருது
மொத்தத்தில் எல்லாம்
முழக்காய் முழகுது...” என்ற
புதுயுகம்
கவிஞன் ஒருவனின் கவித்துவ வரிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றாகவே தென்படுகிறது.

அறிவு ரீதியாக வளர்த் துக்கொண்டுவரும் மனித ஜாதியின் சாதனைகளும் சவால்களும் உலத்தையே வியப்பில் ஆழ்த்தி யிருக்கின்ற இன்றைய காலப் பகுதியில் புகைத்தல் என்ற ஒரு வகை போதைப்பொருள் கலக் கப்பட்ட சாதனங்களின் பயன் பாட்டினால் பலஇலட்சக்கணக்கான உயிர்கள் இறந்ததையும் இறக்கப் போவதையும் நினைக்கும்போது வேதனைமேல் வேதனையைத் தூண்டுகின்றது.

இதுவரைகாலமும் மரணப்படுக்கைகளுக்கு முதன் மைக்காரணமாக யுத்தம், கொள்ளைநோய், இயற்கை அனர்த்தங்கள் விளங்குகின்ற போதிலும் தற்போது நிகழும் மரணங்களுக்கு புகைத்தல் ஒரு காரணமாக அமைகின்றது. அந்த வகையில் பிறக்கப்போகும் 2020 ஆம் ஆண்டில் பெருமளவு மரணங்களுக்கு புகைத்தல் சாதனங் களின் பயன்பாடே பக்கபலமாக இருக்குமென்று புள்ளி விபரங்கள் மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது.

இந்தப்புகைத்தல் சாதனங் களின் பயன்பாட்டினால் ஒருவ ருடத்தில் மட்டும் 25 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் நோய்வாய்ப் படுகின்றார்கள். அவர்களால் 16 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இலங்கைபோன்ற வளர்ச்சி அடைந்துவரும் வளர்முகநாட்டு மக்கள் ஆவர். ஆனாலும் இந்தப் புகைத்தல் பாவனையால் 15 கோடிக்கு மேற்பட்ட குழந்தைகள் பலியாகி உள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகள் மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது.

இவ்வாறான சாதனத்தை பயன்படுத்துபவர்களுக்கு மட்டும்தான் இந்த மரணங்களும் நோய்களும் ஏற்படும் என்று கூறுவதற்கில்லை. வெற்றிலைபாக்கு முதலானவற்றுடன் புகைப்பவர்களுக்கும் மற்றவர்கள் விடும் புகையை சுவாசிப்பவர்களும் புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்கள்போன்ற புகைப்ப வர்கள், புகைக்காதவர்களும் உள் ளடங்குவது கவலையானவிடயம் எனினும் புகைத்தல் -தொடர்பாக நாங்கள்தான் விழிப்புடன் செயற்ப டவேண்டும்.

இந்துப்புகைப்பிடிக்கும் பழக் கத்திற்கு 2 கோடிகுழந்தைகள் அடி மையாகி இருக்கின்ற போதிலும் நாள் ஒன்றுக்கு 55000 பேர் அடிமையாகிக் கொண்டிருப்பதாகவும் அதில் 41 வீதத்தினர் வளர்முகநாட்டைச் சேர்ந் தவர்களாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

**கி.கமலதாஸ்**

இவ்வாறாக மனிதனை அழிவுப்பாதைக்கு அழைத்துச்செல் லும் புகைத்தல் சாதனங்களில் நிகோ டின் கார்பன், மோனாக்ஸைடு, தார் முதலான நச்சுப்பொருட்களால் உரு வாக்கப்பட்ட புகைத்தல் சாதனங் களை புகைப்பதால் அந்த நச்சுப்பதார்த்தங்கள் இரத்த நாளத்தில் கலந்து சுவாச உறுப்புக்களை செய லிழக்கச்செய்ததன் பிற்பாடு படிப் படியாக நச்சுப்பதார்த்தங்கள் மூலை யின் செயல்களையும் இதயத்தையும் தாக்கி மனிதனை செயற்படாத நிலைக்கு அழைத்துச்செல்லுவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றது.

இந்தப்புகைத்தல் சாதனங் களில் காணப்படும் நச்சுப்பதார் த்தங்களில் தீவிர நச்சுப்பொருளாக நிகோடின் விளங்குகின்றது. இந்த நிகோடின் தாக்கத்தால்தான் இரத்த அழுத்தம்தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்கு வழிசமைக்கிறது மட்டுமல்லாது திரும்பதிரும்ப புகைப் பிடிக்கும் எண்ணத்தையும் உண்டு பண்ணுகிறது. வாயுத்தொல்லை, இரத்தம் கட்டியாதல்,சுவாசத் தொல்லை, வயிற்றில் வாயு முத லான தாக்கங்கள் ஏற்படுத்துவதற் கும் நிகோடினும் ஒரு காரணமாக அமைகிறது.

அடுத்து இந்தப்புகைத்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாரியநோயாக புற்றுநோய் விளங்குகின்றது. இந்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் புகைப் பிடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் கருத்துத்தெரிவிக்கின்றது. இவ் வாறாக அதிகரித்துவரும் புகைத்தல் பயன்பாட்டால் அடுத்துவரும் 25 வருடங்களில் புகைத்தலின் தாக் கத்தால் 30 கோடிமக்கள் புற்று நோய்க்கு ஆளாகி இறக்க நேரிடும் என்று சில ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றார்கள்.

ஒரு குடும்பத்தில் கண வனும் மனைவியும் சேர்ந்து புகைக் கும் பழக்கம் கொண்டவர்களாயின் அந்தப்புகையின் நச்சுத்தன்மை அவர்களையும் தாக்கி அவர்க ளுக்குபிறக்கப்போகும் குழந்தை யையும் பாதிக்கின்றது. குறிப்பாக குறைபாடு உள்ள குழந்தைகள் பிறப்பதற்கும் செயற்திறன் அற்ற குழந்தைகள் பிறப்பதற்கும் இந்தப் புகைத்தலின் தாக்கமும் ஒரு காரண மாக அமைகின்றது.

(19ம்பக்கம் பார்க்க..)

தான் கற்றதை எண்ணிப் பெருமை கொள்வது, அறிவு தான் கற்றது இவ்வளவே என்று அடக்கம் கொள்வது, விவேகம். - வில்லியம் கூப்பர்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

எங்கள் பகுதி வளங்களை நாங்களே பாதுகாக்கவேண்டும் அவ்வாறான உணர்வும் கடமையும் அவ்வவ்பகுதி மக்களுக்கு இருக்கவேண்டும்.

அதிலும் பொதுப்பயன்பாட்டில் உள்ள சகலவளங்களையும் பாதுகாத்து உரியமுறையில் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

பொதுப்பயன்பாட்டுவளங்களில் அதிகமுக்கியமானது எங்கள் பகுதிகளில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களில் அதிக அக்கறைகொள்ள வேண்டும். குளங்கள் அழிந்தால் நேரடியாகப் பாதிக்கப்படுவோர் அந்தக் குளத்தை நம்பியிருக்கும் விவசாயிகளும் ஏனைய மக்களும்தான்.



இதன் பெறுமதியை உணர்ந்து சமீபத்தில் செயற்பட்டு பாராட்டுப் பெற்றவர்கள் விசுவமடுக்குள விவசாயிகள்.

விசுவமடுக்குளத்தில் இருந்து விவசாய பயன்பாட்டுக்காக நீரைவெளியேற்றும் துருசின் கதவு மிக மோசமாக சேதம் அடைந்திருப்பது அண்மையில் விவசாயிகளால் அவதானிக்கப்பட்டது.

உடனேயே விசுவமடு பரவல் நீர்ப்பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் செயலாளர் உள்ளிட்டோர் இணைந்து விவசாயிகளை அழைத்து கலந்து பேசினார்கள்.

கதவினை உடனடியாக திருத்தாதுவிட்டால் எதிர்கொள்ளவேணடிய ஆபத்து பெரிதாகி அமைந்துவிடும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

நிலைமையை உணர்ந்த விவசாயிகள் துரிதமாகச் செயற்பட்டார்கள். விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் உதவியுடன் குளத்தில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்த நீ தடுத்து நிறுத்தப்பட்டு குளத்தின் சுருசுக்கதவு அகற்றப்பட்டு புதிய கதவு பொருத்தப்பட்டது.

இது ஒரு முன்னோடி நடவடிக்கையாகும் தாங்களே தங்களது பிரச்சினைகளை இனம்கண்டு தீர்த்துக்கொள்ளும் மனப்பாங்கு மக்களுக்கு வரவேண்டும். அதனூடாக நாம் எமது மண், எமது பொருண்மியம் என்ற மனஉறுதியும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பது திண்ணம்.

## எங்கே பசுந்தாள் பசளை

பசுந்தாள் பசளை, பூவரசு, காவிளாய், காட்டுச்சூரியகாந்தி, பனைஓலை, கிளிசறியா, சணல் அவரை இனப்பயிர்கள், ஆவரசு, புன்னை, பாவட்டை, எருக்கலை, வேம்பு, இப்பில் இப்பில் போன்ற தாவரங்களின் பசிய இலைகுழைகளில் இருந்து எமக்கு இயற்கையாகவே கிடைக்கிறது.

இனப்பயிர்களை தோட்டகளில் நாட்டலாம். சணல் அவரை இனப் பயிர் போன்றன. தரிசு நிலங்களில் காவிளாய் போன்ற தாவரங்களை நாட்டி தோட்டங்களுக்கு பயன்படுத்தலாம்.

சணல் காவிளாய் போன்ற பயிர்களை நாம் தோட்டம் செய்யும் காணிகளில் உண்டாக்கி இவற்றை நிலத்தில் புதைப்பதன் மூலம் இரட்டிப்பு பயன்கிடைக்கும். காற்றிலுள்ள நைதரசனை நிலத்தில் நிலப்படுத்தி வைத்திருக்கும் ஆற்றல் சணலுக்கும், காவிளாய்க்கும், அவரையினப்பயிர்களுக்கும் உண்டு.



மேற்கூறிய தாவரங்களை நாமே பயிரிட்டு நமது வயல்களில் தோட்டங்களில் இடுவதன்மூலம் வளமான நைதரசன் பசளையை இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியும். பண்ணைவேலிகளிலும், தத்தமது காணிவேலிகளிலும் நாட்டினால் கூட பசுந்தாள்பசளை கிடைத்துவிடும்.

வேலிகளில் பாவட்டை, பூவரசு, கிளிசறியா, கிளுவை, வேம்பு, காட்டுச் சூரியாகாந்தி போன்ற தாவரங் களை நாட்டினால் வருடந்தோறும் பசுந்தாள் பசளை கிடைத்துவிடும். ஏனையஅவரை

ஒரு ஏக்கர் சணல் விதைக்க 80கிலோ விதைதேவைப் படுகிறது விதைத்து 50வீதம் பூக்கும் பருவத்தில் நிலத்தில் புதைப்பதன் மூலம் 135கிலோ அமோனியம் சல்பேற்றும் சமமான பசளை கிடைக் கிறது. புகையிலைச் செய்கையாளருக்கு சணல் சிறந்த பசுந்தாள் பசளையாகும்.

பசுந்தாள் பசளையைத் தெரிவு செய்யும்போது அதிகூடிய நைதரசனைக் கொடுக்கக்கூடிய பயிராக இருத்தல் இலைகுழைகளை அதிகூடிய நைதரசனைக் கொடுக்கக்கூடிய பயிராக இருத்தல். குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய பயிராக இருத்தல் இலை குழைகளைக் கூடுதலாகக் கொண் டிருக்கக் கூடியது பயிராக இருத்தல். விரைவில் சிதைவடைந்து பயன் தரக்கூடிய பயிராக இருத்தல் வரட்சியைத்தாங்கி எந்தவகை மண்ணிலும் வளரக்கூடிய பயிராக இருத்தல் முக்கிய அம்சங்களாகும்.

யாழ். மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் வீடுவேய்ந்த பனைஓலையைப் புதைத்துவிடுவார்கள். இதனால் மண்வளம் பெறுவதோடு களை கட்டுப்படுத்தலையும், நைதரசன் நிலைப் படுத்தலையும் இது செய்கிறது. சணலும் விதைக்கலாம் பனை ஓலை இடுவதால் களைகட்டுப் படுத்தப்படுகிறது. மண்ணீரம் பேணப்படுகிறது.

கிளிசறியா தோட்டவேலிகளில் நாட்டுவதால் வேலிபலம் பெறுகிறது. கிளிசறியா (சீமைக் கிளுவை) இலைகுழைசிறந்த பசுந்தாள்பசளை. இது மட்டுமல்ல கால்நடைகளுக்கு தீவனமாகவும் உதவுகிறது.

500கிலோ, கிளிசறியாவில் இருந்து 13கிலோ.யூரியா 4கிலோ சுப்பர் பொஸ்பேற் 6கிலோ பொட்டாஸ் சமமான பசளையைப் பெறலாம் ஒரு ஏக்கர் வேலிக்கு 400 கிளிசறியா மரங்களை உண் டாக்கலாம் இப்பில் இப்பில் சிறந்த பசுந்தாள் பசளையாகும்.

(சி.937A)





# தென் இந்திய நடனக்கலைஞர்களின்

## நடன சங்கமமும், நடனப்பயிற்சியும்

### (2004 மே 4முதல் 10 வரை)

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகிய சென்னையைத் தளமாகக்கொண்ட உலகப்புகழ்பெற்ற தென்இந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாள்களுக்கு யாழ்.மண்ணில் நடத்தவுள்ளோம்.

### (04.05.2004 - 10.05.2004) வரை

மேற்படி நிகழ்ச்சியானது, நடனப்பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் நடத்தப்படும் நடனத்தை முறையாகப்பயின்றவர்களாகவும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாசேத்ரா, வழுவூர், பந்தனை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சி நிலையம் முதலியபள்ளிகளூடாகக் கற்றுத்தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப்புகழ் பெற்ற

அலமேலுவும்,
உஷா வசந்தகுமார்,
உன்னிக்கிருஸ்ணன் -பரத நாட்டியமும்
ராஜேஸ், லக்ஸ்மி பிரியா - குச்சுப்புடி
ஸ்ரீ பாலசுப்பிரமணியம் -கதகளி

ஆகியயோருடன் அவர்களது நடனக்குழுவினரும் இணைந்து இந்த நடன நிகழ்ச்சியையும் நடனப்பயிற்சியையும் வழங்கவுள்ளார்கள்.

இந்த ஏழுநாள் நடனப்பயிற்சியில் (பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேரவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யவும்.

பதிவு செய்யவேண்டிய முகவரி: ரி.கே.ரூறிஸ்ற் இன்
பலாலி றோட், கந்தர்மடம் சந்தி(அரசடி வீதி), யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 6143541, 021 222 5680

(சி-9533)

இரக்கத்தின் பனித்துளி, கண்ணீர். - பைரன் பிரபு.

# இலக்கியப் பகிர்வு

இளைய தலைமுறையினரின் மற்றொரு கூட்டு முயற்சியில் "அம்பலம்" என்னும் கலை இலக்கியசிற்றிதழ் 2002ம் ஆண்டின் நடுப்பகுதியில் தனது முதலாவது




இதழை வெளியிட்டது. கடந்த 2003நவம்பரில் அதனது நான்காவது இதழ் வெளிவந்துள்ளது. சமகால இலக்கியச் சூழ்நிலையில் இதுபோன்ற சிற்றிலக்கிய இதழ்களின் வெளியீடு ஒழுங்கில்லாமல் போவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் வெளிப்படையானவை. வெளியீட்டாளர்கள் உரத்தகுரலில் அறிவிக்காமலே இதனை கலை இலக்கியத்துறையில் ஈடுபாடு உடையவர்கள் அறிந்துகொள்வார்கள்.


சிற்றிதழ்களெல்லாம் தரமான படைப்புக்களைப் பெற்றுக்கொள்வது ஒருபிரச்சினை எனில் மற்றைய பிரச்சினை அதன் விற்பனை விநியோகம் தொடர்பான சிக்கல். தற்போதைய யாழ்ப்பாண கலை இலக்கியத்துறை மைமல் பொழுதுபோல விடிந்தும் விடியாததுமான சூழலில் உள்ளது. அனுபவம் உள்ள இலக்கியப் படைப்பாளிகள் பலர் சோர்ந்துபோய் உள்ளதாகத் தெரிகிறது. ஆர்வம் உள்ள இளையவர்கள் பலரும் ஆர்வம் குன்றியே காணப்படுகின்றனர். இந்த நிலைமைக்கான காரண காரியங்களை இப்போதைக்கு ஆராய முடியாது.

ஏற்கெனவே தரமான படைப்புக்களைப்பெற்றுக்கொள்ளமுடியாத சூழ்நிலையில் இந்த மந்த நிலையும் சேர்ந்து சிற்றிலக்கிய இதழ் வெளியீட்டு முயற்சியை சோர்வடையவே செய்யும். எனவே "அம்பலம்" போன்ற இதழ்களின் வெளியீட்டு பின்னடைவுகளுக்கு படைப்பாளிகளும் ஒருகாரணம்.

மட்டுப்படுத்தப்பட்ட இதழ்களையே விற்பனைக்கு விடும் இது போன்ற சிற்றிதழ்களின் விற்பனை சீராக நடைபெறாதுவிடின் வெளியீட்டு முயற்சிகளுக்கு மற்றொரு பின்னடைவை ஏற்படுத்தியே தீரும். இந்த இரண்டு குதிரைகளில் ஏறியபடியே "அம்பலம்" நான்கு இதழ்கள் வரை அம்பலமாகியுள்ளது என்பதை கவனிக்கவேண்டும்.

ஏனைய இதழ்களைவிட நான்காவது இதழ் தோற்றத்திலும் ஏனைய விடயங்களிலும் முன்னேற்றகரமான நிலையினை அடைந்துள்ளது. "ஊர்கூடி தேர் இழுப்போம்"என்ற கருத்து இன்னமும் முன்னிலை அடையவேண்டும். தேர்வடம் பிடிப்பவர்கள் குறைவாக இருப்பதுபோல உள்ளது. த.பிரபாகரன், கு. லக்ஷ்மணன் போன்றோரை ஆசிரியர்களாகவும் என்.தனுஜன், வி.உதேஷ், பா.சிவரூபன், வ.அமலானந்தகுமார். மு.ஜெயமதன் போன்றோரை இணையாசிரியர் என்ற படையணியாகவும் கொண்ட "அம்பலம்" அற்ப ஆயுளில் அணைந்து போகக்கூடாது என்பதுவே பெருவிருப்பமாக உள்ளது.

இவர்கள் பல்கலைக்கழகத்தில் படிப்பவர்கள் படிப்பும் படைப்புமுயற்சியும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவைபோல எவ்விதம் செயற்படுமோ அவ்விதம் புறநடையாகவும் அமைந்துவிடும் ஆபத்து உண்டு.




அதாவது படிப்பு படைப்பாளியை ஊக்கப்படுத்தும் அதேபோல படிப்பு படைப்பாளியின் படைப்புத்திறனை சிலவேளைகளில் காவு கொண்டு விடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

"அம்பலம்'' வெளியீடுகளில் தாமதம் ஏற்பட இதுவும் ஒரு காரணமாக அமைந்துவிடும். ஆபத்து உண்டு என்பதால் ஆற்றல்உள்ள இந்த வெளியீட்டாளர்கள் இது தொடர்பாகக் கவனிக்கவேண்டும்

"இப்போது இலக்கியம் சார்ந்த படைப்பாக்க முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு வலுவூட்டப்படுகின்றன. அதற்கு நாட்டில் நிலவும் அமைதிச் சூழல் பெரிதும் துணைநிற்கிறது. போர்காலத்தில் அதன் களங்களைச் சித்தகரிக்கும் படைப்புகள் குறிப்பிட்டு கூறத்தக்கவகையில் பெருமளவில் குவிந்தன எனினும் இன்று அவை பற்றிய மீளாய்வும் கருப்பொருள் பற்றிய ஆய்வுகளும் நிகழவாய்ப்பாயிருக்கிறது. படைப்பாளிகள் பலர் தங்களை நேருக்குநேர் அறிமுகப்படுத்திக்கொள்கிற வாய்ப்பு உருவாகியிருக்கிறது, பல மூத்தபடைப்பாளிகளை நேரில் காணும் சந்தர்ப்பம் புதியவர்களுக்குகிடைத்திருக்கிறது. இக்காலத்தினை இலக்கியப் பக்கத்தின் பலமான நகர்வுக்கு ஒரு படிக்கல்லாகவே கொள்ளவேண்டும்,

என அம்பலத்தின் நான்காவது இதழில் ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள்.

இறுகிப்போய் இருக்கும் இலக்கியச் செயற்பாடுகள் அம்பலத்தின் இந்த முயற்சியால் மாற்றமடையவேண்டும், அவ்வாறான ஒரு சிந்தனையைக்கொண்ட அம்பலத்தினை பாராட்டாமல் இருக்க முடியாது,

ஆனால் "உடுவில் அரவிந்தன் " அம்பலம் நான்காவது இதழில் எழுதிய "சிகரங்கள்" என்னும் கதையில் வரும் பின்வாறானவரிகள் போல அமைந்துவிடக்கூடாது.

"சிறுபயல்!எத்தனை இளக் காரமாக கூறிவிட்டான்.பத்து வருடங்களுக்கு மேலாகத் தூரிகையைத்தொடாதிருந்த என்னால் உலகளாவிய ரீதியில் பேசப்படக்கூடிய ஓவியத்தை வரைய முடியுமா?இதுவரை ஏன் நான் முயலவில்லை? தனக்குள்ளே கேள்விகளைக் குவித்து விடைகளைத் தேடியவன் "ஓவியந் தீட்டவென எதிரில் நிறுத்தப்பட்ட சட்டத்தைப் பார்க்கிறான் ஈற்றில் துணிவுடன் தூரிகையை எடுக்கிறான் தூரிகை அசைகிறது. அசையும் கரத்தில் மெல்லிய நடுக்கம் தோற்றிக்கொள்கிறது கோடுகள் கிறுக்கல்களாகின்றன. வெறுப்புடன் தூரிகையை தடாகத்துக்குள் எறிகிறார்."

" மின்னலில் தெரிந்தவை " என்னும் தலைப்பில் ஆதங்கன் எழுதிய விடயங்களும் கவனத்திற்குஎடுக்கப்படவேண்டியவை.

நல்ல படைப்புக்கள் எழுதுபவர்கள் யார் என ஒரு படைப்பளியைப் பார்த்து யாரும் கேள்வி கேட்டால் அவர் கூறும் பதில் " நானும்" என்பது சேர்க்கப்பட்ட பதில் வரும் நிலையில்தான் பல படைப்பாளிகள் உள்ளனர்.

**இணுவையூர்**
**சிதம்பரச்செந்திநாதன்**




## கோழிமலிவு

**மனைவி:-**
என்ன... ஒரு கிலோ 50 ரூபாவா நம்ப முடியலையே!
**கணவன்:-**
நம்பலாம்... இது.. பறவைக் காய்ச்சல செத்த கோழி இறைச்சி..
**மனைவி:-**
அட கடவுளே... எல்லாமே நீங்கதான் சாப்பிடனும்... சரியா?!...

## மனிதன்

"உலகின் மிக ஆபத்தான மிருகத்தைதெரிந்துகொள்ளவேண்டுமானால், இப்போ இந்தக் கதவை திறவுங்கள" இது-தமிழ் நாட்டில், ஒரு விலங்கியல் பூங்காவின் நுழைவாயிலில் பதிக்கப்பட்டிருந்த சிறு பெட்டியின் கதவில் எழுதப்பட்டிருந்த வாசகம்

என்னுடன் வந்தவர்கள், கதவைத் திறந்து பார்ப்பதற்கு தயங்கி நிற்க நான், துணிந்து திறந்தேன். உள்ளே இருந்தது ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி.

## பத்தியசாலி

**அவர்:-**
"வாள் விழுங்கும் தந்திரசாலி இப்போ பத்தியத்தில் இருக்கிறாராமே?... கேள்விப்பட்டீரா?"
**இவர்:-**
"அப்படியா?.."
**அவர்:-**
ஓ.....அவர் இப்போ ஊசிகள தான் விழுங்கிவருகிறா் ஆறு மாதமாக...

## அனுப்புங்க கவலையில்லை செலவைப்பற்றி

ஒருவர் - விடுமுறைக் காலத்தைக் கழிக்க புனித பூமிக்குத் தன் மனைவி, மாமியாருடன் போயிருந்தார் பாதி வழியில் மாமியார் செத்துப் போனார். அவர், அந்திமகால சேவை முகவரிடம் போய், மாமியின் உடலை ஊருக்கு அனுப்புவது பற்றி விபரம் கேட்டார்.

"கப்பலில் சடலத்தை அனுப்புவதாயின் 5000 டொலர் செலவாகும் இந்தப் புனித பூமியில் அடக்கம் செய்வதாயின் 150 டொலர் என்றார் முகவர். "நல்லது... கப்பலில் அனுப்புங்கள்" என்றார் அவர். "அது பெரும் தொகையல்லவா... இங்கேயே நல்லபடியாக நிறைவேற்றித்தருகிறோம்" என்றார் முகவர். மருமகன் சொன்னார்: வேண்டாம்...இங்கேதானே, 2000 ஆண்டுகளுக்கு முன்னால் புதைக்கப்பட்ட ஒருவர், மூன்றாவது நாள் வெளியே வந்தார்."

-ஆங்கிலத்திலிருந்து தமிழில் எஸ்.பி.கே.

**பொறுக்கி.**

## படித்ததில் பிடித்தது

### மடகஸ்கார் நாட்டுக்கவிதை

### ஒரு காதலியின் பாட்டு

*அன்பே!*
*உன்நிழல் உன்னைவிரும்புவதுபோல்*
*நீ என்னை விரும்பாதே!*
*நிழல்கள் மாலையில் மயங்கி விடும்*
*விடியும்வரை நான்*
*உன்னோடிருக்க வேண்டும்.*

*மிளகைப் போலவும்*
*நீ என்னை விரும்பாதே!*
*அது வயிற்றை எரிக்கும்*
*அப்படியாயின்*
*நான் பசித்திருக்கையில்*
*உன்னைப் புசிக்கமுடியாது.*

*தலையணையைப் போலவும்*
*நீ என்னை விரும்பாதே!*
*தூங்கும் வேளைகளில்*
*நாம் சேர்ந்திருந்தாலும்*
*பகலிலும் நாம் சந்திப்பது*
*குறைவாகிவிடும்.*

*உண்ணும் உணவு போலவும்*
*நீ என்னை விரும்பாதே!*
*விழுங்கிய பின்*
*அதை நாம் நினைப்பதேயில்லை.*

*மென்மையான பேச்சைப்போலவும்*
*நீ என்னை விரும்பாதே!*
*அவை*
*விரைவாய் மறந்துபோய்விடும்.*

*தேனைப்போலவும்*
*நீ என்னை விரும்பாதே!*
*தேன் இனிமையானதுதான்*
*ஆனாலும் அது*
*எல்லோருக்கும் இனிக்கிறதே.*

*இனிமையான கனவைப்போல்*
*என்னை நேசி*
*உனது இரவுகளின் கணங்களே*
*பகலில் என்*
*எதிர்பார்ப்புகளாகின்றன.*

*பூமியில் என்றும் என்னோடிருக்கும்*
*வெள்ளிக்காசைப் போலவும்*
*நீர் நிரப்பிக்கொள்ள தயாராய்*
*குறையேதுமின்றிக் காத்திருக்கும்*
*சுரைக்குடுவை போலவும்*
*என் யாழின் மீதுள்ள*
*பாலத்தைப் போலவும்*
*நீ என்னை நேசி!*

ஆங்கிலத்தில்:- **பிளேவியன் நணைவோ**
தமிழில்:- **வின்சென்ற் புளோறன்ஸ்.**

(16ம்பக்கத்தொடர்ச்சி...)


தினமும் இரண்டு பைக்கற் சிகரட் புகைப்பவர்கள் தங்களின வாழ்க்கைப் பயணத்தில் எட்டுவருடங்களை இழக்கநேரிடும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிக்கைவிடுகின்றது.

இவ்வாறாக அநியாய உயிர்சேதங்களைக்காப்பதற்காக புகைத்தலை நிறுத்தும் முகமாக தடைச்சட்டங்கள் அமுலாக்கி விடுவது பாராட்டத்தக்க விடயம் ஆகும். இந்தப் புகைத்தலுக்கு எதிராக ஐக்கிய அரபு நாட்டிலும் கடுமையாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் சிலநாடுகளில் புகைத்தலுக்கு முழுமையாக தடைவிதிக்காதபோதிலும் பொது இடங்கள் மற்றும் பயணங்கள் போன்றவற்றில் புகைப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கனடா, இந்தியன் எயர் லைன்ஸ், சீனா, தாய்லாந்து, போன்றவற்றை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக புகைத்தலுக்கு எதிராக சில தடைச்சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றபோதிலும் புகைப்பவர்களின் அளவு குறைவதாக இல்லை. கடந்த 25 வருடத்தில் புகைபிடிக்கும் அளவு 75 வீதமாக அதிகரித்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே புகைத்தல் தொடர்பான கணக்கெடுப்புக்களில் வெறுப்பவர்களிலும் பார்க்க அதனை விரும்புவர்களின் அளவே அதிகமாக இருப்பது கண்களில் இருந்து கண்ணீரை வரவழைக்கும் செயலாகும். எனவே புகைத்தல் தீங்கானது. அதனை ஒவ்வொருவரும் நிறுத்தும் போதும் பணம் மீதப்படுத்தப்படுவது மட்டுமல்லாது தேவையற்ற நோய்களையும் உபாதைகளையும் விலக்கி வாழ்க்கை பயணத்தை சந்தோசமாகவும் நீண்ட நாட்களாகவும் கழிக்கமுடியும்.

"தீயவற்றை நாடாதே
தீது உன்னை சூழ்ந்து விடும்"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -64



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -64


.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -63



ஒளிநிலா
புதுக்குடியிருப்பு

### பரிசுக்குரிய வரிகள்

*தமிழினமே! தமிழினத்தின் உரிமைக்காய்*
*தடைகள் பல தாண்டி*
*தமிழுக்கே எமது வாக்கென்று*
*தலை நிமிர்ந்து செல்கிறீர்களா?*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சோதனைச் சாவடி போட்டு இனியும் எம்மை*
*தடுத்திட முடியாது பகைவனே! என்று*
*வாக்குச் சாவடி சென்று வல்ல தலைவன்*
*வழி செல்வோம் என வாக்களிக்க விரைகின்றீரோ*

மு.சந்திரசேகரம்
வைத்தியசாலை மல்லாவி.

*துயிலும் இல்லத்தில் உறங்கும் புலி மறவனின்*
*உதிரத்தில் உதிர்த்ததே இந்தப்பயணம்*
*அதை நாம் மீட்டுப் பார்க்கையில் அனல்*
*கக்கும் விழிகளோடு வாக்குச்சாலை நோக்கி*

சு.சிவாஜினி
மந்துவில் புதுக்குடியிருப்பு.

*விடுதலைக்காக விடிவை தேடி வீதியை*
*வீடாக நினைத்து உண்ண மறந்த*
*வாக்காளர்களே வாக்களியுங்கள்*
*விடுதலையின் விடிவுக்காய்*

இ.சிவறஞ்சினி
புளியங்குளம்.

*ஆண் பெண் பேதமின்றி*
*அனைவரும் எங்கே படையெடுக்கிறீர்*
*பொங்கிடும் உங்கள் தமிழுணர்வை*
*வாக்குச் சீட்டுக்களால் நிரப்பிடவா?*

ம.கலைநிலா
புதுக்குடியிருப்பு

*சொந்த மண்ணில் நாம் சுயமாக சுவாசிக்க*
*வந்தவன் முள்வேலி போட்டது முறையோ? எம்மக்கள்*
*ஓரணியில் திரண்டு உரிமை வாக்களித்து தமிழர்*
*பெருமை சேர்த்தனர் வாக்குப்பலத்தால்.*

இ.இரத்தினசிங்கம்
226 ஜெயந்திநகர் கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


நாடு நூராகவும் ஈழநாதத்தைப் பெறலாம்

2004

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும் சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி

பொதுமுகாமையாளர்,
(ஈழநாதம்)
யாழ்.சாலை,
கிளிநொச்சி.

டிஜிடல் உல்லாசம்

Mercury @ MICRO PC SYSTEMS

Woofers - Digital Camera Recorders

ஹோம் தியட்டர் சிஸ்டம்

உங்கள் வீட்டில் சினிமா அரங்கமாக மாற்றுங்கள் தியட்டர் செல்ல வேண்டிய அவசியமில்லை'

3.1/2/1 mega pixal

இலவச விளக்கம் வந்து பாருங்கள் 10am-4pm

Web cam with Mic

Binocam டிஜிடல் கமரா பைனகுலர்

- தெளிவு
- தூர இடங்களை படம் பிடிக்கும் வசதி கொண்டது.

DREAM STATION

MICRO PC மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

கிளிநொச்சி கணனிமையம் (TCC) கந்தசாமி கோயிலடி.

யாழ்ப்பாணம் 175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலை 021-2225893

கிளைகள் : வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு.

சகலவிதமான கணனி அச்சுப் பதிப்புகளுக்கும்

அழகன் பதிப்பகம்



யாழ் சாலை கிளிநொச்சி



# சு[illegible]த்தமிழ் அரசா? சு[illegible]ரத்தமிழ் ஈழமா?

## சிங்களதேசம் முடிவு செய்யட்டும்!

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேச மக்களிடம் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதி மேற்படி விடயத்துக்கு ஆணையிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் கோரியிருந்தது. அதன் அடிப்படையில் தமிழ்த் தேச மக்கள் 633,654 வாக்குகளை வழங்கி 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்து மிகப்பெரிய வெற்றியை வழங்கியமைக்காகவும், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 257,320 வாக்குகளை வழங்கியமைக்காகவும், எனக்கு (இல. 3) 42,191 விருப்பு வாக்குகளை வழங்கியமைக்காகவும் வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்வதற்குப் பூரண ஆதரவை வழங்கிய அனைவருக்கும் விசேடமாக வடமராட்சிப் பகுதி மக்களுக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளான மரபு வழித் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றிற்காக உழைப்பேன் என்றும், யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு எனது பணியைத்தொடருவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல கிராமங்களுக்கும் கூடிய விரைவில் நேரில் வந்து நன்றி தெரிவிப்பேன் என்பதையும், மக்களுடைய பணியில் தொடர்ந்து முழுமையாக ஈடுபடுவேன் எனவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.


கைத் தொலைபேசி இலக்கம்:– 0777–729020

657, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே:–021–2226097

65, பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.
தொ. பே:–021–2263274

44C, சமிட்பிளாட்ஸ்,
கெப்பிட்டி பொல வீதி,
கொழும்பு–05
தொ. பே–011–2559644

மக்கள் பணியில்,
எம்.கே. சிவாஜிலிங்கம்,
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்.


(சி-9439)




மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

குமரகுரு



புடவை அழகுப்பொருள் வாணிபம்

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி



KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

(சி-9532)

SM Graphics





E[illegible]AIR

your friend in the skies

எக்[illegible]

யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.



[illegible]21-2223891, 021-2226297, 0114 512666,
[illegible]11-2360291, 0772-348888, 0772-349999,
[illegible]11-2360290,
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com



இலங்கையில் முன்னணி வகிக்[illegible] நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

SM Graphics



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.